எங்கெங்கு காணினும் சக்தி சக்தியடா

சக்தி பெண்ணிதழ்

பெண்கள் மேம்பாட்டு பன்மொழி மின்னிதழ்

மலர்-3| இதழ்-1|செப்டம்பர் 2026 நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர் முனைவர் செ. ராஜேஸ்வரி

- **தொடுதோல் மாந்தர்**
  முனைவர் தேமொழி
- **ஆசிரியர் தினக் கவிதை**
  கவிஞர் மஞ்சு
- **வசந்த காலம்**
  எழுத்தாளர் இரா. சைலஜா சக்தி
- **இனவரைவியல் 1 IPSOS**
  முனைவர் செ ராஜேஸ்வரி
- **ஜீவ தீபங்கள்**
  அ. திவ்யகுமாரி கண்ணம்மா
- **இயேசு அழைத்தார்**
  கவிஞர் சசிகலா விஸ்வநாதன்
- **யாரோ ஒருத்தி!**
  கவிஞர் வித்யா மனோகர்
- **செண்பகா மாறிவிட்டாள்**
  கவிஞர் இரம்யா நடராஜன்

தமிழ்ப்பெண் ஆளுமைகள்

வரிசையில் இம்மாதம்

எழுத்தாளர்

அகிலா

எழுத்தாளர், கட்டுரையாளர், சிறுகதை எழுத்தாளர், நாவலாசிரியர், மொழிபெயர்ப்பாளர், ஓவியர்

எங்கெங்கு காணினும் சக்தி பெண்ணிதழ்

மலர் - 2 இதழ் - 12 | செப்டம்பர் 2026

நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர் :
முனைவர் கெ. ராஜேஸ்வரி

சிறப்பாசிரியர் :
முனைவர் தேமொழி (USA)

பொறுப்பாசிரியர் :
முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன் (சிட்னி)

துணை ஆசிரியர் :
கவிஞர் மேனகா நரேஷ் (NJ)

செயற்கை நுண்ணறிவு படங்கள் :
முனைவர் திருமதி கெ. ராஜேஸ்வரி
S. ஜெஸிலெட் MA., NET.,

நூலாக்கம்:
S. ஜெஸிலெட் MA., NET.,

உள்ளடக்கம்

தாலாட்டு மழலைக்கு மருந்தாகுமே!
கவிஞர் அன்பு ஜெயா 3

தொடுதோல் மாந்தர்
முனைவர் தேமொழி 5

ஆசிரியர் தினக் கவிதை
கவிஞர் மஞ்சு 9

வசந்த காலம்
எழுத்தாளர் இரா. சைலஜா சக்தி 10

முத்தமிழ் செல்வியின் மலையேற்ற சாதனை
கவிஞர் மேனகா நரேஷ் 20

இனவரைவியல் 1 IPSOS
முனைவர் செ ராஜேஸ்வரி 21

பூவின் பந்தம்
கவிஞர் சுசித்ரா 29

ஜீவ தீபங்கள்
எழுத்தாளர் அ. திவ்யகுமாரி கண்ணம்மா 30

மங்கல அணி
ஜனக்புரி சீனிவாசன் 35

தாய் அல்லவா..
கவிஞர் சாந்தினி பீ 40

இயேசு அழைத்தார்
கவிஞர் சசிகலா விஸ்வநாதன் 41

பெருஞ்செயலர் பெரியார்
கவிஞர் மாலதி இராமலிங்கம் 46

தமிழ்ப்பெண் ஆளுமைகள் - 3
எழுத்தாளர் அகிலா 47

பேரன்பின் தீராவேட்கை
Dr ஜலீலா முஸம்மில் 74

சங்ககாலத் தமிழர்களின் மரபணு -வரலாற்றைத் தேடும் புதிய ஆய்வு
எழுத்தாளர் அ. திவ்யகுமாரி கண்ணம்மா DIAE 75

செண்பகா மாறிவிட்டாள்
கவிஞர் இரம்யா நடராஜன் 80

யாரோ ஒருத்தி!
கவிஞர் வித்யா மனோகர் 87

அறிவதனை அறிந்து வாழ்க!
முனைவர் இல. ஜெயந்தி 88

மொழிப்பெயர்ப்பு பற்றிய கவிதை
கவிஞர் ஜெயஸ்ரீ ஸ்ரீனிவாசன் 94

ARANYANI
Vijeni 95

கல்வி மற்றும் சமூக பணியில் கிறிஸ்தவ பெண்களின் பங்களிப்பு – பகுதி 1
எழுத்தாளர் ரெமினா சுஜித் 101

இஸ்லாமியப் பெண் ஆளுமைகள்
உம்மு அய்மன் அம்மையார்
எழுத்தாளர் சம்சுல் ஹுதா பானு 104

Shakthi Pennithazh
Printed and Published by:
E. Satish Rajkumar, Advocate
3/422, Dinamani Nagar,
Madurai, Tamil Nadu – 625018, India.
Ph: +91 78711 23226, +91 70109 97630

கட்டுரைகளை அனுப்ப:
sakthipennithazh@gmail.com
rajetamiljuly1@gmail.com
இவ்விதழில் இடம்பெற்றுள்ள கருத்துகள் அனைத்தும் கட்டுரையாளர்களின் கருத்துகளாகும். அவற்றுக்கும் இதழாசிரியருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

பசலைக்கொடி படர்ந்திருக்கும்
கருவேல வேலியெனப்
பாசப் பொருளானாய்
என் பாடு பொருளானாய்
பசலைக் கனி தந்த
இளஞ்சிவப்பு நிறமாய்
நினைவுகள் கசிகிறது
இவ்விரவில்
முத்தமிழ் விரும்பி

தாலாட்டு மழலைக்கு மருந்தாகுமே!

கவிஞர் அன்பு ஜெயா, சிட்னி

(பா வகை(சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா :

தரவு:

தன்னுடையத் தாலாட்டே தன்குழவிக் கின்பமென்றுத்
தன்குழந்தை உறங்கிடவே தாயவளும் இசைத்திடுவாள்
இன்பமுடன் குழந்தையுமே இளைப்பாறி உறங்கிடுமே
அன்பிற்குத் தாயிடமே அளவென்ப தில்லைதானே!

தனிச்சொல்:

நோக்கிடின்,

தாழிசை:

அன்பினிலே உச்சமென்றால் அன்னையவள் அன்பொன்றே
என்றுமிதை மறுப்பாரும் இவ்வையத்தில் இல்லையென்றே
தொன்றுதொட்டு மக்களெல்லாம் தொடர்ந்திங்கே வாழ்ந்தனரே!

மற்றவரின் அன்பெல்லாம்
மறைவதுமே உண்டுலகில்
பற்றிருக்கும் இன்று,பின் பறந்துமே
சென்றுவிடும்
வற்றாத நீரூற்றாய் வளம்தருதல்
தாயன்பே!

தனிச்சொல்:

எனவே,

தாழிசை:

தாய்மரபைப் போற்றிடுவோம் தாலாட்டின் சிறப்பெண்ணித்

தாய்க்குழுமம் வணங்கிடுவோம் தாய்மனங்கள் குளிர்ந்தாலே
தாய்நாட்டில் நற்செயல்கள் தழைத்திங்கே பெருகிடுமே!

தனிச்சொல்:
நோக்கிடின்,

சுரிதகம்*(ஆசிரியப்பா)* ***:***
அன்னையின் அன்பும் ஆழமாய்ப் பாய்ந்துமே
அன்னையின் தாலாட் டணைக்கும் குழவியை
என்றுமே அன்னையின் அன்புமே காத்திடும்
நன்றாய் வளர்த்திட நாளுமே உழைத்திடும்
அன்னையின் அறிவுரை அணைத்துமே வளர்த்திடும்
அன்னையே இறையென அவர்களும்
என்றுமே வாழ்ந்திடின் ஏற்றமும் அடைவரே!

தொடுதோல் மாந்தர்

முனைவர் தேமொழி, USA

காலணி அணிவது ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழமையான ஒரு வழக்கம். தோலில் செய்யப்பட்டக் காலணி (செருப்பு) குறித்த குறிப்புகள் சங்க இலக்கியக் காலத்திலேயே காணக் கிடைக்கின்றன.

பட்டினப்பாலையில் கடியலூர் உருத்திரங்கண்ணனார்,

> "தொடுதோல் அடியர் துடி படக் குழீஇ,
> கொடு வில் எயினர் கொள்ளை உண்ட"

[தொடுதோல்=காலைத் தொட்டபடி இருக்கும் வேற்றுத் தோல், தோல் காலணி / செருப்பு]

கரிகாலன் வெற்றிக்குப் பின் அவனுடைய பகைவர் நாட்டின் வாழ்விடங்களில் மாற்றம் ஏற்படுகிறது, இருப்பிடங்கள் பாழ்நிலை அடைகிறது. அந்த இடங்களில் பாலைநிலத்து எயினர்களின் நடமாட்டம் அதிகரிக்கிறது, செருப்பை வெளியில் கழற்றிவிட்டு அன்று நுழைந்த இல்லங்களில் இன்று எயினர்கள் செருப்புக் காலோடு நடமாடுகின்றனர் என்கிறார்.

கடியலூர் உருத்திரங்கண்ணனார் மீண்டும், "தொடுதோல் மரீஇய வடுவாள் நோன் அடி" (பெரும்பாணாற்றுப்படை, அடி 149); அடி முழுவதையும் மூடும் செருப்பை "அடிபுதையரணம்" (பெரும்பாணாற்றுப்படை, வரி 61) என்று பெரும்பாணாற்றுப்படையிலும் குறிப்பிடுகிறார்.

அகநானூற்றில்;

> "தொடுதோல் கானவன் சூடுறு வியன்புனம்
> கரிபுறம் கழீஇய பெரும்பாட்டு ஈரத்து' (அகநா. 368)

பயிர் அறுவடைக்குப் பிறகு வயலை நெருப்பிட்டுக் கொளுத்துவது வழக்கம். அவ்வாறு கொளுத்தப்படும் பொழுது, குறிஞ்சி நிலத்துக் கானவர்கள்

(வேடர்கள்) தங்கள் காலில் நெருப்புப் படாமல் இருப்பதற்காகத் தோல் செருப்பு அணிந்திருப்பதைப் பதிவு செய்துள்ளார் மதுரை மருதன் இளநாகனார்.

மீண்டும் மற்றொரு பாடலில்;

''தொடுதோல் கானவன் கவை பொறுத்தன்ன
இருதிரி மருப்பின் அண்ணல் இரவை'' (அகநா. 34)

என்று முல்லை நிலக் காட்டின் கானவன் தனது காலில் தொடுதோல் என்னும் செருப்பினை அணிந்தபடி கையில் கவைக் கம்பினை வைத்திருக்கிறான் என்றும் காட்சிப்படுத்துகிறார் மதுரை மருதன் இளநாகனார்.

''அடிபுதை தொடுதோல் பறைய ஏகிக்
கடிபுலம் கவர்ந்த கன்றுடைக் கொள்ளையர்'' (அகநா. 101)

என்ற பாடலில், புலவர் மாமூலனார், ஆநிரைகளைக் கவர்வதற்குச் செல்லும் எயினர்கள் தங்களின் காலடித் தடத்தைப் பிறர் அறியாமல் மறைத்துவிடும் நோக்கில் செருப்பு அணிந்து செல்கிறார்கள் என்று தெரிவிக்கிறார்.

''விரத்தி வைராக்கிய விவேகத் தொடுதோல்
உரத்து அணியத் தையா என்று ஓது''. (நீதி வெண்பா-72)

என்று 12 ஆம் நூற்றாண்டுக் காலத்து நீதி வெண்பா பாடல் பிச்சை வாங்கி உண்ணும் துறவி தன் மனத்தில் விவேகம் என்ற வைராக்கிய விரதத்தை (விரத்தி வைராக்கிய விவேகத் தொடுதோல் / வைராக்கிய விரதம் என்னும் செருப்பை) நெஞ்சில் அணிந்துகொண்டு சென்றால் மகளிரின் காமக் கண் என்ற முள் தைக்காது எனக் குறிப்பிடுகிறது. மகளிர் கண்ணை முள்ளாகவும், விரதம் மேற்கொள்வதைத் தவத்தைக் காக்கும் செருப்பாகவும் பாடல் உவமிக்கிறது.

கி.பி. 9-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுக் குறிப்பொன்று ''அடிநிலை'' என்ற பெயரால் காலணியைக் குறிப்பிடுகிறது. இதனால், பழந்தமிழ் நாட்டில் தேவை கருதித் தோல் செருப்பு அணியும் வழக்கம் இருப்பதை அறிகிறோம்.

வேடரான கண்ணப்பரைப் படங்களிலும் சிற்பங்களிலும் செருப்பணிந்தவராகக் காட்டப்படுவது வழக்கம். புதுக்கோட்டை மாவட்டத்தில் 7ஆம் நூற்றாண்டில் முத்தரையர்களால் கட்டப்பட்ட திருமெய்யம் வேணுவனநாதர் ஆலயத்தில் இருக்கும் வேடரான கண்ணப்ப நாயனார் சிலையிலும் செருப்பணிந்தவராகக் கண்ணப்பர் காட்டப் பட்டிருப்பார்.

தெலுங்கானாவின் பாலம்பேட்டையில் உள்ள ராமப்பா கோயில் காகதீய அரசாட்சி காலத்தில் கட்டப்பட்ட மிக அழகான கோயில்களில் ஒன்றாகும். இக்கோயில் யுனெஸ்கோ உலக பாரம்பரியத் தளமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது இதன் சிறப்புக்களில் ஒன்று. இக்கோயில் காகதீய அரசன் கணபதி தேவனின் படைத்தலைவரான ரச்சேர்ல ருத்திரன் என்பவரால் கி.பி. 1213-ல் கட்டப்பட்டது. கோயில் மண்டபத்தில் புராணக் கதைகளைச் சிற்ப வடிவில் காட்டும் சிற்பங்களுடன், அழகிய நாட்டிய மங்கையர் பலர் நாட்டியம் இசை நிகழ்த்துபவர்களாகவும் சிற்பங்களில் காட்டப்பட்டுள்ளனர்.

இந்த மங்கையர்களுள் ஒருவர் காலில் செருப்பணிந்து காணப்படுகிறார். இது சாதாரண வகைச் செருப்பல்ல, இன்றைய நாகரிக உலகில் மாறி மாறி தோன்றியும் மறைந்தும், சுழற்சியாக வந்து போகும் குதிகால் உயர் செருப்பு வகை. இந்த வகைச் செருப்பை 13ஆம் நூற்றாண்டிலேயே ஒரு பெண் அணிந்திருப்பது சிற்பத்தில் பதிவாகியுள்ளது சிறப்பு.

குதிகால் உயர்த்தி ஒருவரை உயரமானவராகக் காட்டும் செருப்பு *(Platform shoes)* நடைமுறை வாழ்க்கையில் மிகத் தொன்மையானது. இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் கிரேக்க நாடகங்களின் நடிகர் அணிந்திருந்ததாகக் கூறப்படுகிறது. இடைக்கால ஐரோப்பாவில் 15, 16, 17 ஆம் நூற்றாண்டுகளில் இவ்வகை செருப்பு செல்வந்தர்களின் அடையாளமாகவும் இருந்திருக்கிறது.

ஜப்பானில் நீண்ட ஆடைகளின் நுனி சேறு, தூசி, ஈரம் படாமல் இருக்கக் குதிகால் காலணிகள் அணியப்பட்டுள்ளன. மீண்டும் 20ஆம் நூற்றாண்டில்

1930களின் பிற்பகுதியில், டிஸ்கோ காலம் எனப்படும் 1970களில், 1990களின் பிற்பகுதியில் என ஒவ்வொரு கால கட்டத்திலும் இது அக்கால நாகரிகத்தின் அடையாளமாக அணியப்பட்டது. இதில் பாதம் முழுமையையும் உயர்த்தாமல் குதிகாலை மட்டும் உயர்த்தும் வகையிலும் பெண்களால் அணியப்பட்டு அதன் காரணமாகப் பாதங்களின் மாற்றம், முதுகுவலி போன்ற உடல் நோவுகளுக்கு உள்ளாவதும் நிகழ்ந்துள்ளது.

காலம் தோறும் செருப்புகள் அணிந்து தங்களைப் பாதுகாத்துக் கொண்டாலும், இதிகாசக் கதையில் காலணிகள் நாட்டை ஆண்டதாகக் கூறப்பட்டாலும் மக்களின் மனதில் செருப்புகளிடம் உயர்வான மதிப்பில்லை.

தரவுகள் உதவி:

- *பட்டினப்பாலை, பெரும்பாணாற்றுப்படை, அகநானூறு, நீதி வெண்பா*
- *சித்திரப் பேச்சு: கண்ணப்ப நாயனாரின் காலணி. ஓவியர் வேதா. இந்து தமிழ் திசை. ஜூலை 15, 2020*
- https://www.hindutamil.in/news/supplements/anantha-jothi/564694-kannappa-nayanar.html
- *தமிழரின் தோல் தொழில். ஆ.சிவசுப்பிரமணியன். செம்மலர் - நவம்பர் 2009.*
- https://keetru.com/index.php/2009-10-07-10-44-25/semmalar-nov09/1621-2009-12-13-04-36-03

ராமப்பா கோயில்

https://en.wikipedia.org/wiki/Ramappa_Temple

https://en.wikipedia.org/wiki/Ramappa_Temple#/media/File:Ramappa_Temple_by_Varsha_Bhargavi_Kondapalli_21.jpg

ஆசிரியர் தினக் கவிதை

கவிஞர் மஞ்சு

தூயநல் மனம் கொண்டோர்

ஆயிரம் விதைகள் தூவி
அவை வளரக் காத்திருப்பர்
தூயநல் மனம் கொண்டே
தூணாகத் துணை நிற்பர்

விதைத்த விதை விருட்சமாக
விழி நிறைத்து மகிழ்ந்திருப்பர்
புதைத்து வைத்த புன்னகையை
பூரித்துப் பூட்டி நிற்பர்

கற்றவற்றைக் கற்பித்து நமை
கரை சேர்த்து மகிழ்ந்திருப்பர்
பெற்றவருக்கு இணை என்றே
பெருமிதத்தைக் காட்டி நிற்பர்

ஏணிகளாய் எழிலாய் நின்று
ஏற்றி அழகு பார்ப்பர்
மாணவரின் மாண்பு கூறி
மகிழ்வினை மடை திறப்பர்

முறையாக முன் நடத்தி
முதன்மை எய்தச் செய்து
அறிவுச்சுடர் ஏற்றி வைக்கும்
ஆசிரியர் பதம் பணிவோம்

வசந்த காலம்

இரா. சைலஜா சக்தி, சென்னை.

வசந்தி சமையல் வேலையைத் தொடங்கினாள். இன்று மதிய உணவிற்கு விருந்தினர்கள் வருவார்கள் என்பதால் பார்வதி கூடுதலாக சாதம் வடிக்கச் சொல்லிவிட்டாள். நெய்கிச்சடி அரிசியை நீரில் கழுவும்போது வீட்டில் மருதுவிற்காக வடித்து வைத்த ரேஷன் அரிசி சோறு நினைவுக்கு வந்தது.

''இந்த மாசம் ரேஷன்ல போட்ட அரிசி நல்லாவே இல்லை. மஞ்சள் கலர்ல குண்டு குண்டா இருந்துச்சு. இந்த நெய்கிச்சடி அரிசி என்னடான்னா வெள்ளை வெளேர்னு இருக்கு. சோறு வடிச்சித் தட்டும்போது பூப்போல உதிர்ந்து விழுது. துட்டுக்கு ஏத்தாப்புலதான் நெல்லு கூட விளையுதுபோல...'' என்று பெருமூச்சுவிட்டவளின் கழுத்தில் மஞ்சள்கயிறு தொங்கியது. களையிழந்த முகம், காதுகளில் கருத்துப் போன கவரிங் கம்மல், மெலிந்த கைகளில் பிளாஸ்டிக் வளையல் அனைத்தும் வசந்தியின் வறுமையைக்கு சாட்சியாய் நின்றன.

சாம்பார், ரசம், கூட்டு, பொரியல், அவியல், பச்சடி, வடை, பாயசம், அப்பளம் என்று செய்ய வேண்டிய லிஸ்ட் பெரிதாக இருப்பதால் வசந்தி வேக வேகமாக காய்களை வெட்டத் தொடங்கினாள்.

''காய் வெட்ட ஆரம்பிச்சிட்டியாம்மா?'' என்று கேட்டுக் கொண்டே லீலா வந்தாள். பதினெட்டு வயது பருவப்பெண். வறுமையை மீறி வயதுக்குரிய அழகுடன் இருந்தாள். அடர்த்தியான ரோஸ்கலர் சுடிதாருக்கு, கறுப்பு நிற துப்பட்டாவைப் போட்டிருந்தாள்.

''ஆமா.. இன்னிக்கு சொந்தக்காரங்க நிறைய பேரு வருவாங்களாம். அதான் வடை, பாயசத்தோட சமைக்கச் சொல்லிருக்காங்க. நான் சாம்பாருக்கு பருப்பை வேகப் போட்டுருக்கேன். நீ தேங்காயைத் திருகிக் குடு'' என்றாள் வசந்தி.

“அம்மா நிறைய ஐட்டம் இருக்கு. ஒரு மணிக்குள்ள செஞ்சிருவியா?”

”அதெல்லாம் முடிச்சிருவேன்” என்று சொல்லிவிட்டுப் புளியைக் கரைத்து சாம்பாரை அடுப்பில் கொதிக்கவிட்டாள். அவியல் காயை இன்னொரு அடுப்பில் வேக வைத்துவிட்டு உலையில் அரிசியைப் போட்டாள். லீலா அவளுக்குத் தேவையான எடுபிடி வேலைகள் அனைத்தையும் செய்து கொடுத்தாள். வடையை வெந்தெடுத்துவிட்டு அதே எண்ணெயில் அப்பளத்தைப் பொரித்து முடிக்கும்போது மணி பன்னிரெண்டே முக்கால். பம்பரமாகச் சுழன்று சொன்னபடி சமையலை முடித்தாள். படபடவென்று அடுப்புத் திண்டைத் துடைத்துவிட்டுக் கிளம்பும்போது, “ சாப்பாட்டை வீட்டுக்கு எடுத்துட்டு போ வசந்தி” என்றாள் பார்வதி.

“வேண்டாம்மா... வீட்டுல சோறு வடிச்சி வச்சிட்டுத்தான் வந்துருக்கேன்” என்று மறுத்தாள்.

“இன்னைக்கு ருசியா சாப்பிடலாம்னு நினைச்சா வேண்டாங்கிறாளே.. இந்த அம்மாவுக்கு அறிவேயில்லை” என்று லீலா மனதிற்குள் வசந்தியை திட்டினாள்.

“சரி.. உன் மகளுக்கு பாயசத்தைக் குடு... நீயும் குடி”

“எனக்கு வேண்டாம்மா” என்று சொல்லிவிட்டு லீலாவிடம் ஒரு டம்ளர் பாயசத்தை நீட்டி “ம்ம்.. சீக்கிரம் குடி” என்றாள்.

லீலாவும் வேக வேகமாகக் குடித்தாள். பாலில் முங்கி குளித்திருந்த ஜவ்வரிசியும், சேமியாவும் நன்றாக வெந்து, தொண்டையிலிருந்து இதமாக நழுவி வயிற்றை அடைந்தன. பாயசத்தில் மிதந்த ஏலக்காயின் மணம் குடல்வரை சென்றது. ஆனாலும் ரசித்துக் குடிக்க முடியாமல் மருதுவிற்குப் பயந்து அவசர அவசரமாக வாயில் ஊற்றிக் கொண்டாள். இருவரும் ஓடாத குறையாக வீட்டுக்கு வந்து சேரும்போது மணி ஒண்ணேகால் ஆகிவிட்டது.

"எங்கடி போய் ஊரு மேய்ஞ்சிட்டு வர்ற?.. ஒரு மணிக்குள்ள வீட்டுக்கு வரணும்னு சொல்லி இருக்கேன்ல. இவ்ளோ நேரம் எவங்கிட்ட பல்லை இளிச்சிட்டு நின்ன?.. வீட்டுல உள்ள புருஷனுக்குச் சோறாக்க முடியலை. ஊர்ல உள்ளவனுக்குப் பொங்கிப் போட்டுட்டு ஆடி அசைஞ்சு வாரியாடி?.." என்று மருது கூப்பாடு போட்டான். சிவந்த கண்கள், கலைந்த தலை, தள்ளாடிய கால்கள் அனைத்தும் அவனுக்கு போதை தலைக்கேறி இருப்பதைக் காட்டின. வாட்டசாட்டமாய் இருந்தவன் சாராயத்தையே சாப்பாடாக்கியதால் எலும்பும், தோலுமாய் மாறிவிட்டான்.

"நிறுத்துய்யா... உனக்கு சோறுதானே வேணும். தட்டுல எடுத்துப் போட்டுருக்கேன். கொட்டிக்கோ.." என்று மருதுவை நோக்கி சோற்றுத் தட்டை தள்ளினாள் வசந்தி.

"என்னடி.. நாய்க்கு வைக்கிற மாதிரி வைக்கிற.. புருசன்னு நினைப்பிருக்கா?... இன்னைக்கும் குழம்பு வைக்கலையா?" என்று தட்டை வீசினான்.

"ஆமா நீ குடுக்குற காசுக்கு இலை போட்டு விருந்தா வைக்க முடியும். பருப்பைக் கடைஞ்சி தாளிச்சி வச்சிருக்கேன். தின்னு.."

"நீ சம்பாதிக்கிற காசை எவங்கிட்ட குடுத்து வச்சிருக்க?"

லீலா காதை பொத்திக் கொண்டாள்.

"இப்பிடியே பேசுன.. ஒரு நாளு உனக்கு சோத்துல விஷம் வச்சிருவேன்"

"அப்போ உன் துட்டு எங்கடி போவுது?.

"நீ குடிச்சிக் குடிச்சி சீரழியிறதுக்கு கடன் வாங்குனியே.. அதை யாரு, உங்க அப்பனா வந்து அடைப்பான்?. சம்பாதிக்கிறத் துட்டைப் பூராவும் குடிச்சே காலி பண்ணிக்கிட்டு இருக்க. கடங்காரங்க வாசல்ல வந்து நின்னு அசிங்கமா பேசுறாங்கவயசுப் புள்ளையை வீட்டுல வச்சிருக்கோமேன்னு உனக்கு . கொஞ்சமாவது அறிவிருக்கா?.. கண்ட கண்ட காவாலிப் பயலுககிட்ட போய்க் காசு வாங்கிருக்க. அவங்களும் இதான் சாக்குன்னு வீட்டுக்கு வந்து, பல்லை இளிச்சிட்டு நிக்கிறாங்க. அதனால என் சம்பளத்தை வச்சிதான் கடனை அடைக்கேன்"

"நீ கடனை அடைச்சதுக்குப் பிறகு ஒருத்தனும் எனக்கு கடன் குடுக்க மாட்டேங்கிறான். அவனுங்ககிட்ட என்னடி சொல்லி வச்சிருக்க?"

"இதோட என் புருசன் வாங்குன கடனை அடைச்சிட்டேன். இனிமே அவனுக்கு ஒரு பைசா கூட கடன் குடுக்கக் கூடாது. மீறிக் குடுத்தா உங்க மேல போலீசுல புகார் பண்ணிருவேன்னு மிரட்டுனேன்"

ஆத்திரமடைந்த மருது "எவ்ளோ கொழுப்புடி உனக்கு?" என்று அவளின் கையை பின்னால் முறுக்கி முதுகில் குத்தினான்.

"அய்யோ..அம்மா .. குடிகாரப் பயலேஎன் கையை விடு .." என்று வலியில் கத்தினாள்.

லீலா ஓடி வந்து மருதுவின் கையைப் பிடித்துத் தடுத்து பின்னால் தள்ளினாள். இதை எதிர்பார்க்காத மருது பின்புறமாகச் சரிந்து விழுந்தான்.

"பெத்த அப்பனை அடிக்கிறியே.. நீயெல்லாம் ஒரு மகளா?" என்று கத்தினான்.

"நீயெல்லாம் ஒரு அப்பனா? தினமும் குடிச்சிட்டு வந்து எங்கம்மாவைப் போட்டு அடிப்ப அதை நான் வேடிக்கை பாக்கணுமா" என்று லீலா எகிறினாள்.

"வேண்டாம்மா பதிலுக்கு பதில் பேசாத" என்று வசந்தி அவளைத் தடுத்தாள்.

"ஏம்மா.. இப்பிடி ஒரு புருசன் உனக்கு தேவையா?" என்று லீலா கேட்டதைப் பொருட்படுத்தாமல் தரையில் சிந்திய சோற்றை அள்ளிவிட்டு அந்த

இடத்தைத் துடைக்க ஆரம்பித்தாள். அதைப் பார்த்ததும் லீலாவுக்கு கோபம் அதிகமாகியது.

"பார்வதியம்மா சாப்பாடு கொண்டு போன்னு சொன்னாங்கபெரிய இவ . வேண்டாம் மாதிரினு சொல்லிட்ட. அந்தப் பாயசத்தையாவது நிறுத்தி நிதானமா குடிக்கவிட்டியா? இங்க வந்து இந்த குடிகாரங்கிட்ட மல்லுக்கட்டி, ரேஷன் அரிசி சோத்தை திங்கணும். அதானே உனக்கு ஆசை?" வடை, பாயசத்துடன் சாப்பிடவிடாமல் அம்மா தடுத்து விட்டாளே என்ற ஆதங்கம் லீலாவிற்கு.

"ஒரு தடவை நாக்கு ருசி கண்டுச்சின்னா அப்புறம் விடாது. நமக்கு என்னிக்கும் ரேஷன் அரிசிச் சோறுதான். அதை மறந்துரக்கூடாது. அதான் வேண்டாம்னு சொன்னேன்"

வசந்தி கூறிய பதிலை லீலாவால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அவள் சுத்தம் செய்து முடித்தவுடன், மருது பாட்டிலைத் திறந்து நடுவீட்டில் உட்கார்ந்து குடிக்க ஆரம்பித்தான்.

ஒரு காலத்தில் மருது கடும் உழைப்பாளிதான். லீலா சிறுமியாக இருக்கும்போது மருதுவிற்கு குடிப்பழக்கம் இல்லை. கொத்தனாருக்கு உதவியாக கையாள் வேலைக்கு செல்வான். தினசரி கிடைக்கும் வருமானத்தை அப்படியே கொண்டு வந்து வசந்தியிடம் கொடுத்து விடுவான்.

மருதுவிற்குக் குடிப்பழக்கம் இல்லாதவரை, அவர்களின் வாழ்க்கை சந்தோஷமாகத்தான் போய்க் கொண்டிருந்தது. முதலில் நண்பர்களின் வார்த்தையைத் தட்ட முடியாமல் குடித்தான். பிறகு அதுவே பழக்கமானது. நாட்கள் செல்லச் செல்ல குடிக்கு அடிமையானான். குடிக்கக் காசு இல்லை என்றால் மட்டும் வேலைக்குச் செல்வான். சம்பளம் வாங்கியதும் மது பாட்டில்களோடு வீட்டுக்கு வந்துவிடுவான். அதற்கு வசந்தி சண்டை போட்டதால் அதன் பிறகு குடித்துவிட்டு ரோட்டில் விழுந்து கிடந்தான். இதற்கு அவன் குடித்துவிட்டு வீட்டில் கிடக்கலாம் என்று பேசாமல் இருந்து விட்டாள்.

வசந்தி அக்கம் பக்கத்து வீடுகளில் சமையல் வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றி வந்தாள். கடுகு, மிளகு டப்பாக்களில் ஒளித்து வைத்திருக்கும் பணத்தைக் கூட தேடி எடுத்துச் சென்று குடித்து விடுவான். வீட்டில் எங்குமே

பணத்தை வைக்க முடியாத நிலை. அதனால் வேலை பார்க்கும் வீடுகளில் சம்பளத்தை நிறுத்தி வைத்துக் கொண்டு, தேவைப்படும்போது வாங்கிக் கொள்வாள்.

எப்படியோ லீலாவை ஏழாம் வகுப்புவரை படிக்க வைத்தாள். மருது தினமும் குடித்துவிட்டு வந்து வசந்தியை அடிப்பதைப் பார்த்து லீலா பயந்தாள். நன்றாகப் படித்துக் கொண்டிருந்த பெண் படிப்பில் பின் தங்கினாள். முடிவில் ஏழாம் வகுப்பில் பெயிலாகிவிட்டாள். அதன் பிறகு பள்ளிக்குச் செல்லமாட்டேன் என்று அடம்பிடித்து வசந்தியுடன் சென்று அவளுக்கு உதவியாக சின்னச் சின்ன வேலைகளைச் செய்ய ஆரம்பித்தாள்.

அப்படித்தான் ஒரு நாள் பார்வதி வீட்டில் வசந்தி சமையல் செய்து கொண்டிருக்கும்போது, எதிர் வீட்டு கோகிலா வந்து ''என் வீட்டு வேலைக்காரி திடீர்னு சொல்லாம கொள்ளாம நின்னுட்டா. உன் மகளை வேலைக்கு அனுப்ப முடியுமா?'' என்று கேட்டாள். அதனால் கோகிலா வீட்டுக்கு பாத்திரம் கழுவ லீலாவை அனுப்பினாள். அம்மாவும், மகளும் வேலைக்குச் சென்றுவிட்டு மதியம் ஒரு மணிக்குள் வீடு வந்து சேர்ந்து விடுவார்கள். மதுக்கடை திறந்தவுடன் முதல் ஆளாக பாட்டிலை வாங்கிக் கொண்டு மருது வீட்டிற்கு வரும்போது இருவரும் வீட்டில் இருந்தே ஆக வேண்டும் இல்லையென்றால் அதற்கும் பிரச்சனை பண்ணுவான்.

சில நாட்கள் கழிந்தன. ஒரு நாள் வேலை முடிந்து வசந்தியும், லீலாவும் வீட்டிற்கு வரும்போது மருது ரத்தவாந்தி எடுத்துக் கிடந்தான். இருவரும் அவனைத் தூக்க முடியாமல் தூக்கி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். ஒரு வாரம் ஊசி, மாத்திரை கொடுத்து வைத்தியம் பார்த்தபின் ஓரளவிற்கு குணமடைந்தான்இனி குடித்தால் உயிரைக் காப்பாற்ற முடியாது என்று டாக்டர் . எச்சரித்தார். இதற்கு முன்பு டாக்டர் ஒவ்வொரு முறை எச்சரிக்கும்போதும் மருதுவின் குடிப்பழக்கத்தை நிறுத்த, வசந்தி ஆன மட்டும் முயற்சி செய்தாள்.

மருதுவை மாரியம்மன் கோவிலுக்குக் கூட்டிச்சென்று கற்பூரம் அணைத்து சத்தியம் செய்யச் சொன்னாள். அவனும் இனி குடிக்க மாட்டேன் என்று கற்பூரத்தை அணைத்து சத்தியம் செய்தான். மூன்று மாதங்கள் மாரியம்மனுக்குப்

பயந்து குடிக்காமல் இருந்தான். பிறகு நண்பன் எவனோ மனசை கலைக்க மறுபடியும் சாராயக்கடைக்குப் போய்விட்டான்.

அடுத்த முறை மருதுவுக்கு உடம்பு சரியில்லாமல் போகவும் டாக்டர் சத்தம் போட்டார். இம்முறை அவனை சபரிமலை ஐயப்பனுக்கு மாலை போட வைத்தாள். மாலையைக் கழட்டும் வரை குடிக்காமல் இருந்தான். பின் பழைய கதைதான். மூன்றாவது தடவை முருகனுக்கு மாலை போட வைத்தாள். மாலையைக் கழட்டியதும் குடிக்க ஆரம்பித்துவிட்டான்.

யார் யாரோ சொன்னதைக் கேட்டு சர்ச்சுக்கும், மசூதிக்கும் கூட அழைத்துச் சென்று பார்த்தாள். மந்திரித்த தாயத்து, கயிறுகளைக் கட்டிப் பார்த்தாள். எதற்கும் பிரயோஜனம் இல்லை. ஆல்கஹால் அனைத்து கடவுள்களையும் வென்றது. மருதுவின் குடிப்பழக்கத்தை வசந்தியால் நிறுத்த முடியவில்லை .

பார்வதியம்மாளின் கணவர் ஒரு போதை மறுவாழ்வு மையத்தைப் பற்றிக் கூறி, அங்கு அவர்களை அழைத்துச் சென்றார். ஏழை மக்களுக்காக இலவசமாக சிகிச்சை செய்யும் மையம் என்பதால் வசந்தியிடம் கட்டணம் எதுவும் வசூலிக்கவில்லை. மூன்று மாதங்கள் மருது அங்கு தங்கி இருக்க வேண்டும், அவர்கள் கொடுக்கும் மருந்து, மாத்திரைகளை ஒழுங்காகச் சாப்பிட்டால் போதும் என்று கூறினர். வசந்தியும், லீலாவும் மறுவாழ்வு மையத்தில் மருதுவைச் சேர்த்துவிட்டு அவ்வப்போது சென்று பார்த்தனர் .

ஒரு மாதம் கழிந்தது. மருது கொஞ்சம் கொஞ்சமாக குடியை மறக்கப் பழகியிருந்தான். லீலாவும், வசந்தியும் அவனைப் பார்க்க வந்தனர். இருவர் முகமும் வாடிப்போய் இருந்தது. என்ன விஷயம் என்று மருது கேட்டதும், லீலா ஏங்கி ஏங்கி அழ ஆரம்பித்தாள். இன்று கோகிலா வீட்டிற்கு வேலைக்குச் சென்றபோது அவளின் கணவன் லீலாவின் கையை பிடித்து இழுத்து தப்பாக நடக்க முயற்சித்திருக்கிறான். வெளியே சென்றிருந்த கோகிலா நல்ல வேளையாக அந்த நேரத்தில் உள்ளே வர, அவளின் கணவன் கையும் களவுமாக மாட்டியிருக்கிறான். லீலாவை அவனிடம் இருந்து காப்பாற்றிவிட்டு, புருசனை அடித்து நொறுக்கி இருக்கிறாள். லீலாவின் காலில் விழுந்து வெளியே சொல்லி விடாதே என்று கெஞ்சியிருக்கிறாள். வசந்தி சொல்லச் சொல்ல மருதுவிற்கு ஆத்திரமாக வந்தது .

"அந்தாளு உன்னைய விட வயசானவன்ப்பா" என்று சொல்லிவிட்டு லீலா அழுதாள். மகள் முதல் முறையாக அப்பா என்று அழைத்ததை நினைத்து சந்தோஷப்படுவதா அல்லது தன்னைவிட வயதில் முதிர்ந்தவன் மகளாகப் பார்க்க வேண்டிய தன் பெண்ணிடம் தவறாக நடந்ததை நினைத்து வருத்தப்படுவதா என்று தெரியாமல் மருதுவின் கண்கள் கண்ணீரைச் சிந்தின .

"அம்மாடி... நான் கையாலாகாத அப்பனா போயிட்டனே. என்னாலதான் உங்களுக்கு இந்த நிலைமை" என்று கூறி அழுதான். சுற்றியிருந்தவர்கள் அவனுக்கு ஆறுதல் கூறினர். அப்போது மறுவாழ்வு மையத்தை நடத்தும் மந்திரமூர்த்தி ஐயா வந்தார். நடந்ததைக் கேட்டதும் வசந்தியிடம் மையத்தில் உள்ளவர்களுக்கு உணவு சமைத்துத் தரச் சொன்னார். உரிய சம்பளம் தருவதாக வாக்களித்தார். வசந்தியும், லீலாவும் மகிழ்ச்சியடைந்தனர்.

அடுத்த நாள் மறுவாழ்வு மையத்தில் சமையல் செய்து கொண்டிருந்த மனைவியையும், மகளையும் பார்த்து மருது இன்னும் வேதனைப்பட்டான். இனி குடிக்கக் கூடாது என்று முடிவெடுத்தான். இதற்கிடையே பார்வதியம்மாள் மாலை நேர இட்லிக் கடையை நடத்தச் சொல்லி வசந்திக்கு யோசனை கூறினாள். கூடவே பணமும் தந்து உதவினாள். வசந்தியும், லீலாவும் இட்லிக் கடையை சுறுசுறுப்பாக நடத்தினர். வியாபாரமும் சூடு பிடிக்க ஆரம்பித்தது .

மூன்று மாதங்கள் கழித்து மறுவாழ்வு மையத்தை விட்டுக் கிளம்பும்போது மந்திரமூர்த்தி மருதுவை ஒரு அறைக்குக் கூட்டிச் சென்றார்அங்கு மையத்தில் . புதிதாக சேர்ந்த மூன்று பேர் இருந்தனர்.

''மூணு மாசம் தங்கியிருந்து சிகிச்சை முடிச்சு மருது, இன்னிக்கு வெளியே போறான். இவன் மறுபடியும் குடிக்கக்கூடாது. அதனால குடிப்பழக்கத்தினால நீங்கபட்ட கஷ்டங்களைச் சொல்லுங்க. மருது தெரிஞ்சுக்கட்டும்'' என்றார் .

''நான் அரசு வேலையில் இருந்தேன். குடிக்கு அடிமையாகி ஆபிஸுக்கு ஒழுங்கா போகமாட்டேன். ஆபீஸ்ல உள்ளவங்க எவ்வளவோ சொல்லிப் பார்த்தாங்க. மெமோகூட குடுத்தாங்க. ஆனா நான் திருந்தலை. சரி இவன் எப்படியோ போகட்டும், நம்மால ஒருத்தனுக்கு வேலை போய் அவன் குடும்பம் கஷ்டப்படக் கூடாதுன்னு நினைச்சு எல்லாரும் கண்டுக்காம இருந்தாங்க. ஆனா நான் செஞ்ச தப்புக்கு கடவுள் எனக்கு தண்டனை குடுத்துட்டார். ஒருநாள் ராத்திரி நானும், என் நண்பனும் குடிச்சிட்டு தாறுமாறா வண்டியை ஓட்டி, மரத்துல மோதி விழுந்துட்டோம். என் நண்பன் அங்கயே இறந்துட்டான். அவன் குடும்பம் இப்ப என்னால அனாதையா நிக்குது. எனக்கும் கை, கால் முறிஞ்சு போச்சு. வேலையும் போயிடுச்சு. கடைசியில இங்க வந்து சேர்ந்துட்டேன்'' என்று சொல்லி அழுதார் முதல் நபர் .

''நான் ஐடி கம்பெனியில வேலை பார்க்கிறேன். கல்யாணமாகிப் பத்து வருஷம் ஆகுது. விளையாட்டா பார்ட்டியில குடிக்கப் பழகினேன். அப்புறமா விட முடியலை. என் மனைவி எவ்வளவோ சொல்லிப் பார்த்தா. நான் கேட்கலை. அதனால் இரண்டு குழந்தைகளையும் கூட்டிகிட்டு அவள் அம்மா வீட்டுக்குப் போயிட்டா. இப்ப டைவர்ஸ் நோட்டீஸ் அனுப்பியிருக்கா'' என்று சொல்லிப் புலம்பினான் இரண்டாவது இளைஞன் .

''நான் குடிக்கு அடிமையாகி குடும்பத்தைக் கவனிக்கலை. அதனால் என் மனைவி ஒரு மில் வேலைக்கு போனா. அங்கே இருந்த சூப்பர்வைசர் என் மனைவியை அவன் ஆசைக்கு இணங்கச் சொல்லிக் கட்டாயப்படுத்தி இருக்கான். மறுத்தா வேலையை விட்டுத் தூக்கிருவேன்னு மிரட்டியிருக்கான். பிள்ளைங்க பசியால் கஷ்டப்படக்கூடாதுன்னு என் மனைவியும் பணிஞ்சு போயிருக்கா. இது பல வருஷமா நடந்துருக்கு. இந்த உண்மை பன்னிரண்டாம் வகுப்பு படிக்கிற என்

மூத்த பொண்ணுக்குத் தெரிஞ்சிருச்சு. அம்மா இப்படித்தான் குடும்பத்தைக் காப்பாத்தியிருக்கான்னு தெரிஞ்சதும் என் பொண்ணு விஷத்தைக் குடிச்சு உயிரை விட்டுட்டா. என் மனைவிக்கு பித்து பிடிச்சிருச்சு. எல்லாம் என்னாலதான். இந்த பாழாப்போன குடிப்பழக்கம் இல்லைன்னா நான் ஒழுங்கா இருந்திருப்பேன்.. என் குடும்பமும் உருக்குலைஞ்சு போயிருக்காதே..'' என்று நெஞ்சில் அடித்துக் கொண்டு அழுதார் மூன்றாவது நபர்மருது . அதிர்ச்சியுடன் கேட்டுக் கொண்டிருந்தான்.

''இவங்க சொல்றதைக் கேட்டியா. உன் மனைவியும், மகளும் எவ்வளவு கஷ்டப்படுறாங்கன்னு தெரியுதா?. இனிமேல் குடிக்காதே மருது'' என்றார் மந்திரமூர்த்தி.

''கேட்டேன் சார். இனிமேல் சத்தியமா குடிக்கமாட்டேன். சாராய பாட்டிலைத் தொடக்கூடமாட்டேன்'' என்று கண்ணீர் மல்கக் கூறினான். அங்கிருந்து கிளம்பியவன் வசந்தி நடத்திய மாலை நேர இட்லிக் கடைக்கு வந்தான்சுற்றிலும் ஆண்கள் கூட்டம் .. அவர்களுக்கு நடுவே வசந்தியும், லீலாவும் வேலை செய்து கொண்டிருந்ததைப் பார்த்தான் .

''அம்மாடி... லீலா... நீ அம்மாவுக்கு உதவியா இரு. நான் வந்தவங்களுக்கு சாப்பாட்டை குடுக்கிறேன்'' என்றான். அம்மாவுக்கும், மகளுக்கும் ஆச்சரியமாக இருந்தது. சொன்னபடியே பரிமாறினான்.

கூட்டம் குறைந்ததும் ''இந்த ஸ்டூல்ல உக்காருய்யா. இனிமே கூட்டம் வராது. நீ மாத்திரை, மருந்து சாப்பிடுத ஆளு. ரொம்ப நேரம் நிக்காத'' என்று சொல்லி வசந்தி ஸ்டூலை இழுத்துப் போட்டாள்.

''ஆமாப்பா. கால் வலிக்கப் போகுது. உக்காரு..'' என்றாள் லீலா . அன்பையும் முதன்முறையாக அவள் கண்களில், மரியாதையையும் பார்த்தான். கால் கடுக்க நின்று சம்பாதிக்கும் அந்த அன்பு ஜீவன்கள், தனக்குக் கால் வலிக்கக்கூடாது என்று துடிப்பதைப் பார்த்ததும் மருதுவின் இதயம் இரண்டாகப் பிளப்பது போல் இருந்தது.

வசந்தியின் வாழ்வில் வசந்த காலம் தொடங்கியது.

முற்றும்

எவரெஸ்ட் சிகரம் தொட்ட முதல் தமிழ்ப்பெண் முத்தமிழ் செல்வி நாராயணன் அவர்களின் எவரெஸ்ட் பயண நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததற்காக "Supporting Hands - Scaling the Himalayas of Achievement" என்ற விருதை முத்தமிழ்செல்வி எனக்கு வழங்கினார். அவரது இல்லத்தில் நேற்று அவரிடமிருந்து நூலைப் பெற்றுக்கொண்ட தருணம் மறக்கமுடியாத அனுபவமாக அமைந்தது. வேலு நாச்சியாரன் சிலையும் வழங்கி சிறப்பித்தார்.

ஏழு கண்டங்களில் உள்ள மிக உயர்ந்த மலைச் சிகரங்களை ஏறி சாதனை படைத்துள்ளார் முத்தமிழ்ச்செல்வி



இனவரைவியல் 1 IPSOS

முனைவர் செ ராஜேஸ்வரி, மொழிபெயர்ப்பாளர், எழுத்தாளர், இதழாசிரியர்

இனவரைவியல் என்பது மானுடவியல் துறையில் சமுக மானுடவியல் பிரிவைச் சேர்ந்தது. மானுடவியல் என்பது கல்வியியல் சார்ந்தது ஆனால் இனவரைவியல் என்பது களப் பங்கேற்பு சார்ந்தது ஆகும். ஒரு இனத்தவர் வாழுமிடத்திற்குப் போய் அவர்களின் மொழியைக் கற்று அவர்களுடன் பல வருடங்கள் வாழ்ந்து அவர்களின் பழக்க வழக்கங்கள், வாழ்வியல் சடங்குகள், வழிபாட்டு முறைகள் போன்றவற்றை கூர்ந்து கவனித்து குறிப்பெடுத்துக் கொள்வதாகும். தரவு திரட்டுதல் என்றளவில் மட்டுமே களப் பங்கேற்பு முறை உதவும். பின்பு மானுடவியல் ஆய்க் கொள்கைகளின் படி இத்தரவுகளை பகுப்பாய்வு செய்து ஆய்வு முடிவுகளைக் கண்டறிய வேண்டும் அப்போது தான் மானுடவியல் பண்பியல் முறையில் இவ்வுலக மாந்தரின் பண்புகளைப் புரிந்துகொள்ள இயலும்.

இனவரைவியலின் விளக்கம்

இனவரைவியல் என்பது ஒரு சமுகம் அல்லது ஒரு பண்பாட்டை பகுப்பாய்வு செய்து ஆய்வு முடிவுகளைப் பதிவு செய்வதாகும். இன்ன வரைவியல் ஆய்வு ஓர் இனத்து மக்கள் அல்லது ஓர் இடம் அல்லது ஒரு நிறுவனம் பற்றியதாக அமைகிறது என்பர் சிம்சன் & கொலேமான் 2017.

பங்கேற்பு மற்றும் கூர்ந்து நோக்குதல் ஆய்வு முறை

இனவரைவியல் ஆய்வு முறை என்பதே பங்கேற்பு ஆய்வு முறை ஆகும். இவ் ஆய்வு முறையில் கூர்ந்து நோக்குதல் எனபது மிக இன்றியமையாததாகும். ஆராய்ச்சியாளர் சமுக, பண்பாட்டு நிகழ்ச்சிகளைக் கூர்ந்து நோக்கும் போது அவருக்கு மனத்தில் எந்த முன் முடிவுகளும் இருக்கக் கூடாது. பல மேனாட்டவர் தரவுகள் திரட்டும் போது தங்களின் மேனாட்டு கலாச்சாரமே உயர்ந்தது என்ற முன் முடிவோடு சேகரித்தனர். அது கூடாது. ஒரு இனத்து மக்களின் சமூகப் பண்புகள் அவர்களிடையே தோன்றி வளர்வதற்கு அவர்களின் வாழ்க்கை சூழலே

அடிப்படைக் காரணம் ஆகும் எனபதை மனத்தில் கொண்டு தரவுகளை திரட்டிப் பகுப்பாய்வு மேற்கொள்ள வேண்டும். அவ் இனத்து மக்களின் நோக்கில் அவர்களின் பழக்க வழக்கங்களை, உறவுமுறைகளை அணுக வேண்டும். இதனை native's point of view என்பர். அவ் இனத்து மக்களின் வாழ்க்கையும் அர்த்தமுள்ளது என்பதை ஆய்வில் உணர்த்த வேண்டும். அது மட்டமானது; நாகரிகமற்றது; பாமரத்தனமானது என்று முடிவு செய்ய கூடாது. இவ்வாறு ஒரு தலைப்பட்சமான முடிவுகளுக்கு வருவது இனவரைவியல் ஆராய்ச்சிக்கு உகந்தது அல்ல.

இனவரைவியல் ஆய்வுக்களத்தை எப்படி தெரிவு செய்வது?

ஒருவர் இனவரைவியல் ஆய்வில் இறங்கும் முன்பு அவருக்கு விருப்பமான அவருக்கு மகிழ்ச்சி தரக் கூடிய, ஆர்வம் நிறைந்த, மேல்திகமாக அறிந்து கொள்ள வேண்டும் என்ற தூண்டுதல் உடைய பண்புகளைப், பழக்க வழக்கங்களைக் கொண்டுள்ள ஓர் இனத்தை அல்லது இடத்தை, மக்கள் கூட்டத்தைத் தெரிவு செய்ய வேண்டும். மானுடவியல் கொள்கைகளைப் பின்பற்றி ஆராய்ச்சி செய்ய ஏதுவான களமாக அவரது ஆய்வுக்களம் இருக்கிறதா என்பதை உறுதி செய்துகொள்ளவும் வேண்டும்.

ஆரம்பத்தில் மலை வாழ் மக்கள், தீவில் வாழ்வோர் எனத் தொலை தூரத்தில் இருந்தவர்களை ஆய்வு செய்த மானுடவியலார் பின்னர் தங்களின் அருகில் வாழ்வோரை அறிந்துகொள்ள தொடங்கினர். நகர்ப்பகுதிகளில்

மற்றவர்களிடம் இருந்து ஒதுங்கி வாழும் இனத்தவர் பற்றியும் ஆராயத் தொடங்கினர். இதனை *'anthropology at home'* என்று அழைத்தனர்.

இனவரைவியல் ஆய்வாளரின் தகுதிகள்

இன வரைவியல் துறையில் நிலவியல், சமூகவியல், பண்பாட்டியல் மற்றும் அறிவு நுட்பம் சார்ந்த உலகமறியாத புதிய தரவுகளைத் திரட்டும் வகையில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். ஆய்வாளர் வெயிலோ மழையோ பனியோ பல ஆண்டுகள் தொடர்ந்து இருக்கவும் பல காத தொலைவு நடக்கவும் தனது சுமையைத் தானே சுமந்து மலை ஏறவும் இறங்கவும்; கிடைக்கும் உணவை உண்ணவும் பழகிக்கொள்ளவும் தகுதி உடையவராக இருக்க வேண்டும். பல வருடங்கள் களத்தில் அங்கு வாழும் மக்களோடு தங்கியிருக்கும் மனோதிடமும் உடல் வலிமையும் இருக்க வேண்டும். முதலில் மக்களின் மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டும் . மானுடவியலார் பெரும்பாலும் மொழிபெயர்ப்பாளர்களை விரும்புவதில்லை. அவர்களே ஆய்வுக்களத்தின் மொழியைக் கற்று அவர்களுடன் பேசிக் கலந்து பழகுகின்றனர்.

[iPSOS encyclopedia]

மானுடவியல் துறையில் இருந்து களப்பணி ஆய்வை மையமிட்டதாக வளர்ந்த ஒரு தரம் சார்ந்த ஆய்வு முறை [qualitative research] இனவரைவியல் ஆகும். ஓர் இனைத்து மக்களுடன் அதிக காலம் இருந்து பங்கேற்பு ஆய்வு முறையில் [participatory research method] அவர்களின் பண்பாட்டு நடைமுறைகளை உடனிருந்து கூர்ந்துநோக்கி [observation] ஆராய்ந்து ஆய்வு முடிவுகளைக் கண்டு தெளிவதாகும்.

முன்பு தொலைவில் உள்ள மக்களின் பண்பாட்டு நிகழ்வுகளைப் பழக்க வழக்கங்களை அறிந்துகொள்ள இனவரைவியல் வாய்வு பயன்பட்டது. ஆனால் தற்போது இவ் ஆய்வு சந்தைக் கலாச்சாரத்துக்கு மிகவும் உதவியாக இருக்கிறது. ஒரு பொருள், சேவை, நோய் அல்லது ஒரு வணிக முத்திரை *[brand]* போன்றவை தொடர்பான அன்றாட வாழ்வியல் சூழல்களை அறிந்து கொள்ள இனவரைவியல் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

தொழிநுட்ப முறைகள்

இன்றைய காலகட்டத்தில் இனவரைவியல் என்பது ஓர் இனத்து மக்களோடு உடனிருந்து களப்பணி மேற்கொள்வது மட்டுமன்று; மின்னனு

பொருட்களையும் பயன்படுத்தி ஆய்வை உயர் தொழிநுட்ப முறைகளோடு மேற்கொள்வதாகும். முன்னர் பங்கேற்பு உற்றுநோக்கல் முறையில் ஓர் இனத்து மக்களின் விழாக்களை ஆராயலாம். இப்போது மக்களிடம் எடுக்கும் பேட்டியைப் படம் பிடித்து வைத்தால் அவர்களின் முகக் குறிப்பு, குரலின் ஏற்ற இறக்கம் ஆகியவையும் ஆய்வுத் தரவாகப் பயன்படும்.

சூழ்நிலை சார்ந்தது

இனவரைவியல் துறையில் தற்போது சந்தை நோக்குடன் நடத்தப்படும் ஆய்வுகள் சூழ்நிலை சார்ந்ததாகவும் நடத்தப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒருவர் பீர் குடிப்பது பற்றி ஆய்வு செய்தால் அவரது வீட்டில் நடக்கும் எதிர்வினை, விருந்துகளில் ஏற்படும் மாற்றங்கள், மது கூடம் அல்லது உணவகங்களில் பருகும் போதுள்ள நடைமுறைகள், தெருவில் அவரது நடை உடை மாற்றங்கள் என அனைத்தும் ஆராயப்பட வேண்டும்.

உற்று நோக்கல் நுட்பம்

தகவலாளியிடம் தரவுகள் திரட்டும் போது ஒலி, ஒளிப்பதிவுக்கான [ஆடியோ, வீடியோ] எடுப்பதற்கான தொழில்நுட்பக் கருவிகளை எடுத்துச் சென்று பயன்படுத்தினால் தரவுகள் தெளிவாகக் கிடைக்கும். ஆய்வு முடிவுகளைத் துல்லியமாகப் பெற முடியும்.

பரிவான அணுகுமுறை [empathetic approach]

பரிவு என்பதைக் கற்றுக்கொடுக்க இயலாது என்றாலும் தற்போது வெளிநாடுகளில் இதையும் கற்றுக்கொடுக்கத் தொடங்கிவிட்டனர். மக்களைப் பேட்டி எடுக்கும்போ பரிவு என்பது மிகச் சிறந்த இனவரைவியல் ஆராய்ச்சியின் கருவியாக விளங்குகிறது. பரிவின் தேவையை கருத்திற்கொண்ட மானுடவியலார் 'இனவரைவியல் ஆய்வை நீங்கள் தெரிவு செய்வதில்லை; இனவரைவியல் தான் உங்களைத் தெரிவு செய்கிறது' என்றனர். மக்களிடம் பரிவோடு நடந்துகொள்பவர் மட்டுமே இனவரைவியல் ஆய்வு செய்ய முடியும். அவர்களே அத்துறைக்குப் பொருத்தமானவர்கள்.

கால அவகாசம் அதிகம் தேவை

இனவரைவியல் ஆய்வுக்கு மக்களோடு இருந்து தரவுகளைத் திரட்டியதற்கான ஆண்டுகள் போல மூன்று மடங்கு காலம் தரவுகளின்

பகுப்பாய்வுக்கும் ஆய்வுமுடிவுகளைப் பெறுவதற்கும் தேவை என்பதால் இந்த ஆய்வு அதிக ஆண்டுகள் நீடிக்கும்.

இலக்கு நோக்கிய நடத்தை மாற்றம்

அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் நடத்தை மாற்றம் இப்போது பிரபலமாகி விட்டது. இதற்கான காரணங்களைக் கண்டறிய ஒரு நிபுணர் குழு அமைக்கப்பட்டது. தனியார் நிறுவனங்களின் விளம்பரங்கள் அவற்றைப் பார்க்கும் மக்களை ஓர் இலக்கு நோக்கி நகர்த்துவதைக் கண்டறிந்தனர். மலிவான பொருட்களை வாங்கக் கூடாது என்று மக்கள் முடிவெடுத்திருப்பதை அவர்களுக்கு நினைவூட்டும் வகையில் இவ்விளம்பரங்கள் அமைக்கப்பட்டு விலை பற்றிய அக்கறை இல்லாமல் அவர்கள் பொருட்களை வாங்கும்படி

முடிவெடுக்கச் செய்கின்றன. இதனால் அதிக விலை கொடுத்து பொருள வாங்குவதை மக்கள் நாகரிகமாகக் கருதும் போக்கு வளர்ந்துவிட்டது. இது போன்ற நடத்தை மாற்றங்கள் மேனாடுகளில் வளர்ந்துவிட்டன.

பண்பாடு சார்ந்த நடத்தை மாற்றம்

பண்பாடு என்பது மானுடவியலின் இதயம் ஆகும். இனவரைவியல் ஆராய்ச்சியும் பண்பாடு சார்ந்ததே. ஒரு இனத்தவர் மற்றொரு இனத்தின் பண்பாட்டைப் பின்பற்றும் முறை தற்போது வளர்ந்துவிட்டது. [கரண்டியால்

உணவுண்ணும் மேனாட்டாரின் பண்பாட்டைப் பின்பற்றி இன்று தமிழர்களும் இட்லி மற்றும் வடையை கூட கரண்டியால் எடுத்து உண்கின்றனர்].

இவை ஒரு பொருளை சந்தைப்படுத்துதல் குறித்து செய்யப்படும் தற்காலத்திய இனவரைவியல் ஆராய்ச்சி ஆகும்.

அகநோக்கு ஆய்வும் புறநோக்கு ஆய்வும் [எமிக்/எட்டிக்]

ஒரு பண்பாடு அல்லது சார் பண்பாடு [துணைப் பண்பாடு] சார்ந்த நடைமுறையினை அதனைப் பின்பற்றுவோரின் நோக்கில் ஆராய்வது அகநோக்கு ஆய்வு முறை ஆகும். இதனை எமிக் என்பர். அதே பண்பாட்டு நடைமுறையை அதற்கும் அதனைச் சார்ந்திருக்கும் சார் பண்பாட்டு நடைமுறைக்குமான ஒற்றுமை வேற்றுமைகளை வெளியில் இருப்பவரின் கண்ணோட்டத்தில் ஆராய்வது புற நோக்கு ஆய்வு முறை ஆகும். இதனை ஆங்கிலத்தில் எட்டிக் என்பர். சர்ரே பல்கலைக்கழகத்தின் மானுடவியல் பேராசிரியர் கிறிஸ்டின் ஹைன் இந்த அகநோக்கு, புற நோக்கு ஆய்வு முறைகள் குறித்துத் தெளிவாக விளக்கி உள்ளார்.

இனவரைவியல் ஆய்வுமுறையின் தூண்கள்

உறவுமுறை, உணர்ச்சிகள், பண்பாடு, சுற்றுச் சூழல் ஆகிய நான்கும் இனவரைவியல் ஆய்வுமுறையின் தூண்கள் ஆகும்.

உறவுமுறைகள்:

ஓர் இனத்துக்குள் உறவுமுறை என்பது வரையறுக்கப்பட்ட ஒழுகலாறுகளை உடையது. தாய்க்கும் பிள்ளைக்கும் கூட அவர்களுடைய இனத்தால் விதிக்கப்பட்ட முறைகள் உண்டு. தாய் வழி சமுகம், தந்தை வழி சமூகம், மணவினைகள், சடங்கு செய்யும் உறவுமுறைகள் என விதிக்கப்பட்டுள்ளன. இதனை எவரும் மீற இயலாது.

உணர்ச்சிகள்:

உணர்ச்சிகளைப் பிரதிபலிக்க, வெளிப்படுத்த சில வரன்முறைகளை ஒவ்வொரு இனமும் விதித்து இருக்கிறது. அவ்வகையில் அழுகை, மகிழ்ச்சி, வெறுப்பு போன்ற உணர்ச்சிகளை ஒவ்வொரு இனமும் தனக்குரிய முறையில் வெளிப்படுத்துகின்றன. ஒரு பொருள், சேவை அல்லது ஒரு நபர் குறித்து ஒரு இனத்தவர் காட்டும் உணர்ச்சி அல்லது எதிர்வினை குறித்த ஆய்வு இனவரைவியலில் முக்கியத்துவம் பெறுகிறது.

பண்பாட்டு விதிகள்

பேசப்படாத விதிகளாக பண்பாட்டு விதிகளை ஓர் இனம் பின்பற்றி வருகிறது. ஓர் இனத்தில் பண்பாட்டு விதிகள் அடுத்த தலைமுறைக்குக் கற்றுத்தரப் படுகின்றன. அவ்வினத்தவரின் வாழ்க்கைச் சிக்கல்களோடு தொடர்புடையனவாகச் சிந்திக்கவும் செயல்படவும் சரியான வழியைக் காட்ட இப் பண்பாட்டு விதிமுறைகளை இளைய தலைமுறையினருக்கு கற்றுக் கொடுக்கின்றனர் என்று எட்கர் ஷீன் *[2o1o]*. பண்பாடு என்பது *'கற்கப்படும் நடத்தை'* அல்லது *'கற்பிக்கப்படும் நடத்தை'* ஆகும். இவ் ஆய்வில் ஒவ்வொரு பண்பாட்டு விதியும் ஒவ்வொருக்கும் எவ்வாறு முதன் முதலில் புதிதாக அறிமுகம் செய்யப்படுகிறது அல்லது கற்றுத்தரப் படுகிறது என்பதை ஆராய்ச்சியாளர் அறிய வேண்டும்.

சுற்றுச்சூழல்;

குறிப்பிட்ட இடத்தில் அல்லது சூழலில் ஒருவர் எவ்வாறு பழகுகிறார் என்பதை அறிந்துகொவது அந்த இனத்தைப் பற்றிய ஆராய்ச்சியில் முக்கிய இடத்தைப் பெறுகிறது. வெவ்வேறு இடங்களில் வேளைகளில் ஒருவரின் ஒழுகலாறுகளை ஆராய்ச்சியாளர் கூர்ந்து கவனிக்க வேண்டும். அவரிடம் அது குறித்து கேட்டுத் தெரிந்து கொள்வதால் கிடைக்கும் தகவல்களை விடக் கூர்ந்து கவனித்தறிவதால் அதிகம் தரவுகளைப் பெற முடியும்.

பரிவு என்னும் ஆய்வுப் பண்பு மூலமாகப் பெறும் ஆழமான புரிதல் மற்றும் விரிவான புரிதல் இனவரைவியல் ஆய்வில் முக்கியமானதாகும். பரிவு கொண்டு தகவலாளியை அணுகி அவரிடம் இருந்து அந்த இனத்தின் பண்பாட்டு நடத்தை முறைகள் பற்றி கேட்டறியும் போது புதிய புரிதல் ஆராய்ச்சியாளருக்கு உண்டாகும். விரிவான புரிதல் வணிகத் துறையில் நுகர்வோர் கலாச்சாரத்தை புரிந்துகொள்ள உதவும். ஏராளமான நடத்தைகள் ஆழ்மனத்தின் விருப்பினால் நடக்கின்றன. ஏன் அவ்வாறு நடக்கின்றனர் என்று அவர்களிடம் கேட்டால் அவர்களுக்குப் பதில் சொல்லத் தெரியாது. ஆனால் ஒரு ஆராய்ச்சியாளர் ஒரு இனத்தவரின் நடத்தை ஒவ்வொன்றையும் கூர்ந்து கவனித்து குறிப்பிட்ட நடத்தைக்கான காரணம் என்னவென்று உளவியல் ரீதியாகக் கண்டுபிடிக்கலாம்.

பூவின் பந்தம்

கவிஞர் சுசித்ரா

புடவை கட்டுகிற நாளிலாவது
ஒரு முழம் பூவைத்தால் என்ன?

சேலை உடுத்தும் போதெல்லாம்
எதிர்கொள்கிற கேள்வியை
புன்னகைத்துக் கடந்துவிடுதல்
சிரமமில்லை

தெருவில் உதிரிப்பூவிற்கும் போது
அதை வாங்குவதற்கென்றே
அழகழகான கிண்ணங்கள்
வைத்திருந்ததுண்டு

வீடு கட்டும் போதே
இங்கு தான் மாலையில் அமர்ந்து
பூகட்ட வேண்டும் என
இடத்தேர்வுகள் இருந்தன

வண்ண நூல்களுக்கென
தனிப் பெட்டி
மொட்டுத்தலை கொய்யாத
நீர் ஊறிய வாழை நார் தான்
விருப்பத்தேர்வு

ஊசி வைத்து பூகோத்தால்
அடர்த்தியாக வரும்...
அதில் விருப்பமில்லை
உதிரிப்பூக்களை
நெருக்கத் தொடுக்கவேண்டும்

தொடுக்கும் போதே மலரும்
பூக்கள்
உள்ளங்கையோடு பேசும்
அந்தி ரகசியம்
அத்தனை கிசுகிசுப்பானது

ஒவ்வொரு பூவோடும்
விரல் நுனி ஈரக்கதை
பேசியிருக்கும்

பூகட்டி நெடுநாள் ஆகிறது
சூடும் விருப்பம் தொலைத்தும்

வீட்டின் சாமிப்படங்களும்
ஒற்றைப் பூவுக்குப் பழகிவிட்டன/

தொடுத்த பூ இனுக்கு
யாராவது தரும் போது
மறுக்க மனமின்றிச்
செருகிக் கொள்வதோடு
தொட்டுத் தொடர்கிறது
பூவின் பந்தம்

ஜீவ தீபங்கள்

அ. திவ்யகுமாரி கண்ணம்மா, ஐயை உலக மகளிர் மன்றம்

பச்சப்பசேலென நெல் வயல்களும் தென்னைத்தோப்புகளும் சூழ்ந்த கொல்லங்கோடு தான் எங்கள் ஊர். மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் இதமான மலைச்சாரலும், ஆர்ப்பரிக்கும் சீதார்குண்டு நீர்வீழ்ச்சியும், அமைதியான போத்துண்டி அணையும் கடவுள் படைப்பிலேயே மிக அழகானது.

எங்க ஊரை எனக்கு ரொம்ப பிடிக்கும். எப்பவும் ஒரு மெல்லிய சாரல், மரத்து இலைங்கள்ல இருந்து சொட்டிக்கிட்டே இருக்குற மழைத்துளிகள்... அப்புறம் அந்த ஈரமான மண் வாசனை... எல்லாமே ரொம்ப மென்மையா, அமைதியா இருக்கும். ஆனா, இந்த அமைதியான ஊர்ல வளர்ந்த எனக்குள்ள மட்டும் எங்கிருந்து அந்த கோபம் வந்துச்சுன்னு தெரியல. எனக்கு அம்மா, அப்பா இல்ல. ஆனா, அந்த குறையை ஒரு நொடி கூட நான் நினைச்சுப் பார்க்காத அளவுக்கு, என்னோட தாத்தாவும் பாட்டியும் என்னை வளர்த்தாங்க. இந்த உலகத்துலயே ரொம்ப செல்லமான, ஆசீர்வதிக்கப்பட்ட பொண்ணு நானாதான் இருப்பேன். தாத்தா பாட்டிக்கு நான் அவ்ளோ செல்லம். எங்க அம்மா பாட்டிக்கு ஒரே பொண்ணு எனக்கு 2 வயசு இருக்கும் போதே ஒரு விபத்துல அம்மா அப்பா இரண்டு பேரும் போயிட்டாங்க... இப்போ நான் காலேஜ் படிக்குறேன்.

அன்னைக்கு... காலேஜ்ல என் உயிர் தோழியோட வந்த சண்டை, என் மனசை ரணமாக்கிருச்சு. வீட்டுக்குள்ள நுழையும்போது கோபத்துல என் உடம்பெல்லாம் நெருப்பா கொதிச்சுது. கோவத்துல காதுகளெல்லாம் அடைச்சு, சுத்தி இருக்குற உலகமே எனக்கு ஸ்தம்பித்த மாதிரி இருந்துச்சு.

என் கண் முன்னாடி தெரிஞ்சதெல்லாம் அந்தப் பழைய கருப்புக் குடைதான். அதை அப்படியே எடுத்து, என் மொத்த ஆத்திரத்தையும் அதுமேல காட்டி, சுவத்துல ஓங்கி வீசினேன். அது 'மளமள'ன்னு உடைஞ்சுடுச்சு, அதோட சின்ன சின்ன கம்பிகளும் துணிகளும் சில்லு சில்லா, தரையில சிதறித் தெறிச்சது.

கோபத்தோட வேகத்துல என் அறைக்குள்ள போய் கதவை சாத்திக்கிட்டேன்.

மறுநாள் மதியம்... கோபம் தணிஞ்சு நான் வெளிய வந்தப்ப, தாத்தா... அவர் எப்பவும் போடுற அந்த வெள்ளைக் கட் பனியனோட எதை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். தாத்தாவுக்கு வயசானதால கண் பார்வை ரொம்பக் கம்மி. தடிமனான கருப்பு பிரேம் போட்ட அந்த கண்ணாடிய விரலால தூக்கி விட்டு எதையோ பார்த்துகிட்டு இருந்தாரு.

என்ன பண்றீங்க தாத்தானு கிட்ட போய் பார்த்தா தான் தெரியுது அவர் உடைந்த குடையை ரிப்பேர் செய்து கொண்டு இருந்தாரு.

அதுக்கும் முந்தின நாள் தான் "கழுத்து ரொம்ப வலிக்குதுடா பூமிகா"ன்னு என்கிட்ட புலம்பிட்டு இருந்தார். ஆனா, அந்த வலியையும் பொருட்படுத்தாம, தன் மங்கலான பார்வையால, அந்த உடைந்த குடையோட பாகங்களை ஒவ்வொன்றா உத்து உத்து பார்த்து, குனிஞ்சு ஒட்டிக்கிட்டு இருந்தார். ஏதோ ஒரு சின்ன குழந்தை, தான் தொலைச்ச ஏதோ ஒன்றை திரும்பத் தேடுற மாதிரி இருந்துச்சு தாத்தாவோட அந்த நிலை.

எனக்கு ஒரு மாதிரி ஆயிடுச்சு. "தாத்தா, நேத்து ஏதோ கோவத்துல தூக்கிப் போட்டு உடைச்சிட்டேன். அது வெறும் பழைய குடைதானே... அதை ஏன் இப்படி கழுத்து வலிக்க உக்காந்து ஒட்டிட்டு இருக்கீங்க? விட்ருங்க தாத்தா! புதுசு வாங்கிக்கலாம்" அப்படின்னு கொஞ்சம் சலிப்போட சொன்னேன்.

தாத்தா மெதுவா நிமிர்ந்து, என்னைப் பார்த்தார். அவர் கண்கள்ல கண்ணீர் தெப்பமா lஇருந்துச்சு. "இல்லடா பூமிகா... இது வெறும் குடை இல்ல. உன் பாட்டி கடைசியா அன்னைக்கு வெளிய கிளம்பிப் போனப்ப, அவ கையில எடுத்துட்டு போன குடைடா இது..." அப்படின்னு மெதுவா சொன்னார்.

தாத்தா அதைச் சொன்ன அந்த நொடி... என் உலகமே அப்படியே உறைஞ்சு நின்ன மாதிரி ஆயிடுச்சு.

சுத்தி இருக்குற காத்து, அந்த ஈரமான சூழல், சத்தம் எல்லாமே மறைஞ்சு, ஒரு பயங்கரமான மௌனம் என்னைச் சூழ்ந்துச்சு. துக்கம் அப்படியே என்

தொண்டையை அடைச்சது. நெஞ்சுகுள்ள ஒரு பெரிய பாராங்கல் வந்து உட்கார்ந்தது போல, எச்சில் கூட விழுங்க முடியாத ஒரு வலி.

இதயத்தை யாரோ பலமா பிழிவது போல ஒரு மோசமான வலி உடம்பெல்லாம் பரவுச்சு.

போத்துண்டு அணை உடைஞ்சு வெள்ளம் வர்ற மாதிரி என் கண்ணுல இருந்து கண்ணீர் கொட்டுச்சு என் முகமே அப்படியே சுருங்கி, அழுகையை அடக்க முடியாம உதடுகள் நடுங்கினது. என் கோபத்தோட வேகத்துல, பாட்டியோட கடைசி நினைவை, தாத்தாவோட அத்தனை வருடக் காதலை அல்லவா நான் சிதைச்சிருக்கேன்? என் கோவத்துக்கு அந்த அன்போட மதிப்பு தெரியாம போயிடுச்சே!

பள்ளியில் படிக்கும் போது தோழிங்க ஸ்கூல்லயும் காலேஜ்லயும் ‘‘எங்களுக்கு தாத்தா பாட்டியே இல்லை’’, ‘‘லீவுக்குக் கூட நாங்க அவங்க வீட்டுக்கு போனதே இல்லை’’ன்னு ஏக்கத்தோடு சொன்னதைக் கேட்டிருக்கேன். ஆனா, நான் எவ்வளவு பெரிய பாக்கியசாலி! அம்மா அப்பாவை விட தாத்தா பாட்டிகிட்ட வளர்ற பிள்ளைங்க அத்தனை செல்லம், அத்தனை பாதுகாப்பானவங்கன்றதை பாட்டி இறந்தா அப்பதான் உணர்ந்தேன்.

என் நினைவுகள் அப்படியே என் பாட்டியை நோக்கி ஓடுச்சு. எங்க பாட்டி... என்ன போல இல்லங்க கொஞ்சம் உயரம் கம்மியா, நல்லா செவந்த நிறமா இருப்பாங்க. அவங்க தினமும் மஞ்சள் பூசித்தான் குளிப்பாங்க. அப்படி குளிக்கும் போது, அவங்களோட நெற்றி முடி ஓரங்கள்லயும், காதோரக் கிருதா முடிகள்லயும் அந்த மஞ்சள் நிறம் அப்படியே படிஞ்சிருக்கும். தலைக்குத் தேங்காய் எண்ணெய் பூசி, சின்னதா ஒரு ஜவுரி முடி வெச்சு, அழகா ஒரு கொண்டை சுத்திப்பாங்க. அந்த கொண்டையைச் சுற்றி மல்லி, கனகாம்பரம், மரிக்கொழுந்து, கார்குழலி பூக்கள் எல்லாம் கலந்து கட்டிய ஒரு ‘கதம்பச் சரம்’

எப்போதும் மணந்துட்டே இருக்கும். அந்த கனகாம்பரத்தின் நிறமும், கதம்பத்தின் வாசனையும் என் நினைவலைகள்ல இருந்து என்னைக்குமே அழியாது.

மதிய சாப்பாட்டுக்குக் கூட ஒரு ஓயர் பேக்ல சூடா சாப்பாடு போட்டு கொண்டு வருவாங்க. என் பேத்தி சூடா சாப்பிடணும்னு 5 கிலோமீட்டர் நடந்தே வருவாங்க. இன்னும் கூட அதெல்லாம் என் கண்ணுக்குள்ள இருக்கு.

பாட்டி எப்பவுமே வாயில் புடவைதான் கட்டுவாங்க. அவங்க உடம்புல எப்போதும் அந்தத் தேங்காய் எண்ணெய் வாசனையும், பான்ஸ் பவுடர் வாசனையும் கலந்தே இருக்கும். அவங்களோட புடவை முந்தானையில முகம் புதைச்சா கிடைக்கிற சுகமும் வாசனையும், இந்த உலகத்துல வேற எந்த சொர்க்கத்துலயும் கிடைக்காது!

தாத்தாவும் பாட்டியும் ஒருத்தர் மேல ஒருத்தர் வெச்சிருந்த அன்பு அத்தனை ஆழமானது. பாட்டி இப்போ எங்க கூட இல்லைனாலும், அவங்களோட நினைவுகள் மூலமா அவங்களை இன்னும் வாழ வைச்சுட்டு இருக்கார் தாத்தா.

"பாட்டியைத் திரும்பக் கூட்டிட்டு வர முடியாது பூமிகா... ஆனா அவ ஞாபகமா இருக்கிற பொருளை நம்மால பத்திரப்படுத்த முடியும்தானே? இன்னைக்கும் அவ ஒருநாள் நேர்ல வந்தா, அவளுக்கு இது தேவைப்படும்னுதான் இதைச் சேர்க்கிறேன்"னு தாத்தா சொன்னப்ப, என் கோபத்தால நான் செஞ்ச தப்பை நினைச்சு மனசுக்குள்ள அழுது தீர்த்தேன்.

அதன் பிறகு, என் வாழ்க்கையில எந்த ஒரு சூழ்நிலையிலயும் நான் கோபப்பட்டு எதையும் உடைச்சதே இல்லை. ஏன்னா, அன்னைக்கு என்னோட அந்த ஆத்திரமும் கோபமும் வேற எங்கேயோ போய் நிரந்தரமா தூங்க ஆரம்பிச்சிருச்சு.

இப்பவும் சில நேரம் தாத்தா அந்த அலமாரியைத் திறக்குறப்ப, மனசுக்குள்ள ஒரு மெல்லிய வலியோட அந்த பான்ஸ் பவுடர் வாசனை வரும். அந்த அலமாரிக்குள்ள, இன்னமும் பாட்டி திரும்பி வந்தா தேவைப்படும்னு தாத்தா மடிச்சு வச்சிருக்கிற, மடிப்பே கலையாத பாட்டியோட பழைய சேலைகளுக்கு நடுவே... என்னோட கோபமும், என்னோட துக்கமும், அடக்க முடியாத அழுகைகளும் பாட்டியோட தேங்காய் எண்ணெய் வாசனையோட சேர்ந்து பத்திரமா, நிரந்தரமா தூங்கிக்கிட்டு இருக்கு.

''வயசான காலத்துல, தாத்தாவையும் என்னையும் இயக்குற தெய்வமே நீ தான்'' உன்னை வளர்க்குறதும் உன்னை ஆளாக்குறதும்தான் நாங்க பெற்ற பெரிய பாக்கியம்''என்று பாட்டி அடிக்கடி சொல்லுவாங்க. 60 வயதிலும், என் பேத்திக்குச் சாப்பாடு சூடாகப் போய் சேர வேண்டும்னு 5 கிலோமீட்டர் தூரம் சளைக்காமல் நடந்து வருவாங்க.. அந்த அசாத்திய ஆற்றலுக்குப் பின்னால் இருந்தது என் மேல் அவங்க வைத்திருந்த பேரன்பு மட்டும்தான்.



பாட்டி இருக்கும்போது கிடைத்த அன்பை விட, அவர் இல்லாத இந்தத் தருணத்தில், தாத்தா அந்த நினைவுகளைப் பத்திரப்படுத்தும் ஆழத்தைப் பார்க்கும்போதுதான்... நான் என் வாழ்க்கையில் எவ்வளவு செம்மையோடும் முதிர்ச்சியோடும் நடந்துகொள்ள வேண்டும் என்பதை புரிய வைப்பது பாட்டியின் நினைவுகளே எனக்குக் கற்றுக் கொடுக்கின்றன.

என் கோபத்தை மறந்து, என் வாழ்க்கையைச் செம்மைப்படுத்திய அந்த உன்னதத் தீபங்கள்... என் தாத்தாவும் பாட்டியும் தான்!.

மங்கல அணி

ஜனக்புரி சீனிவாசன், மேனாள் பள்ளித் தலைமையாசிரியர், டில்லி

ஒரு பெண் திருமணமானவள் என்பதற்கு அடையாளமே அவளுக்கு அணிவிக்கப்படும் தாலியும் மெட்டியுமே!

சங்க இலக்கியங்களில் தாலி, நாண், புதுநாண், வேலம்பழ வடிவம், வேழி, கடிகை நூல் என்னும் பெயர்களில் வழங்கப் பட்டுள்ளதை திருமணம் பற்றிய பாடல்கள் மூலம் தெளியலாம்.

பழங்காலத்தில் பனை ஓலையினாலும் (தாலம்) நாணற்புல்லைக் (கோரைப்புற்களை) கயிறாகத் திரித்தும் அணியும் வழக்கம் இருந்தது. புதுநாண் என்றனர்.

புறநானூற்றுப் பாடல் ஒன்றின் மூலம் வேப்பம்பழ வடிவில் தாலி அமைத்துக் கட்டப்பட்டதாகத் தெரிகிறது. அதனால் தாலியை வேப்பம்பழ வடிவம் என்றும் கூறினர்.

கடிகை நூல் என்றும் தாலியைக் குறிப்பிட்டனர். முத்து, பவழம், மலர்கள் முதலியவற்றைக் கோர்க்கப் பயன்படுத்திய ஒருவகை நூலைக் கடிகை நூல் என்பர். கடிகை என்பதற்குக் கோர்வை என்றும் பொருள் கூறுவர். நூலால் கோர்க்கப்பட்டுத் தாலி அணியும் வழக்கம் இருந்தமையை அறியலாம்.

திருமணச்சடங்கு முக்கியப் பொருளாக இருந்த தாலி எப்போதும் கழட்டப்படாமல் அணியும் அணிகலனாக இருந்தது. குழந்தைகளுக்குக் கூட ஐம்படைத்தாலி அணிவித்தனர். பெண் குழந்தைகளின் பிறப்புறுப்பை மறைக்கும் படியாக ஆலிலை வடிவத்தில் கட்டும் வழக்கம் இன்றும் தமிழர்களிடையே பழக்கத்தில் இருப்பதைக் காணலாம்.

பிறப்புறுப்பை மறைக்கும்படியான உடைகளை அணியும் குறிப்பிட்ட வயது வந்தவுடன் கழுத்திற்குக் கீழே மறைப்பதற்கு வேண்டிய முழுநாண் எனப்படும் தாலி கட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

அச்சுத்தாலி, ஆமைத்தாலி என்னும் பெயர்கள் வழங்கப்படுவதை உணரலாம்.

அதே நிலையில் திருமண வயது வந்ததும் பெண்வீட்டார் எவ்வளவு சொத்து உடையவராக இருந்தாலும் மணமகன் பெண்ணின் கழுத்தில் தாலி கட்டும் வழக்கம் பண்டைக்காலம் முதலே தமிழ்ப் பண்பாடாக இருந்து வருகிறது.

பெண்ணின் உடலை மறைத்து பெண்ணைக் காப்பது கணவன் கடமை என்பதன் குறியீடாக தாலி கட்டப் படுவதாகக் கூறுவர். கணவனது உழைப்பினால் உருவாக்கப்படும் தாலிக்கு மகத்துவம் அதிகம்.

தாலி திருமணமான பெண்ணிற்கு வேலி. காலில் மெட்டியும் கழுத்தில் தாலியும் இவள் திருமணமானவள் என்பதைக்காட்டும் அறிகுறிகளாகும். இவ்விரண்டையும் பார்த்தவர்கள் பிறன்மனை நோக்காப் பேராண்மையர்களாகத் திகழ்ந்தனர். மணமானவள் என்பதைக்காட்டும் மங்கல அணியாகும் தாலி.

அந்தத் தாலிக் கயிறு பெண்ணின் கழுத்தில் இருக்கும் வரை பூவும் பொட்டும் அலளுக்குச் சொந்தம். 'மங்கல மடந்தையர்' என்றே அவளை அழைப்பர். அது அவள் கழுத்தில் இருக்கும் வரை, ஒருவரது இல்லத்தில் நடைபெறும் அனைத்துச் சுப நிகழ்வுகளிலும் அவளுக்கு முன்னுரிமை தரப்படும்.

இன்றும் மகனோ கணவனோ வெளியில் புறப்படும்போது மங்கலப்பெண் எதிரில் வந்தால் சுபசகுனம் என்றும் கருதப்படுகிறது. அதேசமயம் பூவும் பொட்டுமிழந்த பெண் எதிரில் வந்தால் சற்றுப் பொறுத்துப் போகும்படியும், உள்ளேசென்று நீர் அருந்திவிட்டுச் செல்லும்படியும் கூறும் வழக்கம்(சகுனம் பார்க்கும் வழக்கம்)இன்றும் நடைமுறையில் இருப்பதைக் காணலாம்.

மங்கல அணியன்றி பிறிதணி அணியாதவர்களாக அக்காலத்தில் திருமணமான பெண்கள் இருந்தனர். தற்காத்து ,தற்கொண்டானைப் பேணும் மனைவி தன் கணவனுக்கு ஏதேனும் நோய்வந்தாலும் கணவனது உடல் நோயைப்போக்க மருத்துவச் சிலவிற்காக தன் கழுத்தில் கட்டிய தாலிப்

பொன்னை அடகு வைத்தாவது(பொன்னிற்குப் பதில் மஞ்சள் கிழங்கைக் கட்டிக்கொண்டு) கணவனது உயிரைக் காப்பாற்றத் துடிக்கும் எத்தனையோ மனைவிமார்களை இன்றும் கிராமப் புறங்களில் காணலாம். கோவிலுக்குச் சென்றாலும் பிரசாதமாகக் கொடுக்கப்படும் மஞ்சள் குங்குமத்தை நெற்றியில் இட்டுக் கொள்வதோடு தன் தாலியில் இடும் வழக்கத்தையும் காண்கிறோம்.

சிலசமயங்களில் தாலிக்கயிறு நைந்து அறுந்து விட்டாலும் கணவன் உயிருக்கு ஆபத்து உண்டாகும் என வருந்தி தாலிபாக்கியம் தரும்படி இறைவனிடத்தில் வேண்டுவதையும் காண்கிறோம்.

மனைவி நாணம் இல்லாது பொது இடத்தில் உலவினால் கணவன் இருந்தும் என்ன பயன்? அவளால் கணவனுக்குத்தானே இழுக்கு!

கணவன் இறந்தால் ஊரார் பழிச் சொல்லுக்கு நாணி, ''கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில்'' என தன் உயிர் கொண்டு கணவன் உயிர் தேடுவாள் போல உயிர்நீத்த மனைவியை இலக்கியங்கள் மூலம் அறியலாம்.

''பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட யானோ அரசன் யானே கள்வன் மன்பதை உலகில் தென்புலங் காவல் என்முதல் கெடுக'' என மயங்கி வீழ்ந்து உயிர்நீத்த பாண்டிய மன்னனின் மனைவி கோப்பெருந்தேவியும் கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில் என இணையடி தொழுது உயிர்நீத்ததைச் சிலப்பதிகாரம் காட்டுகிறது.

இராவணன் மாண்டவுடன் அவன் மனைவி மண்டோதரியும் புலம்பி அவன்மேல் விழுந்து உயிர்நீத்ததைக் கம்பராமாயணம் புலப்படுத்துகிறது. கணவன் உடல் எரியூட்டியபோது மனைவியும் உடன்கட்டை ஏறும் வழக்கம் இருந்ததல்லவா!

தாலி இல்லாவிடில் தனக்கு வாழ்வு இல்லை என்று கருதிய தமிழ்ச் சமுதாயத்தில் கணவன் உயிருடன் இருக்கும்போதே தாலிக் கொடியைக் கழட்டி ஆணியில் மாட்டும் மனைவியரை என்ன சொல்வது! வெட்கக் கேடு!

ஆரம்பகாலத்தில் நாணற்புற்களாலும், வேப்பம்பழத்தினாலும் மஞ்சளாலும் கட்டப்பட்ட தாலிவடிவம் ,பழையன கழிதலும் புதியன புகுதலும் காலத்தின் கட்டாயமாகி விட்டநிலையில்

,கணவனின் செல்வ வளமை காட்ட வெள்ளியும் தங்கமும் தாலிக்கயிற்றில் இடம்பெறலாயின.

மாற்றத்தை ஏற்காதார் யாருளர்.!..

கோடானுகோடி சிலவு செய்தாலூம் திருமணத்தின் அடையாளச் சின்னமாக விளங்குவது தாலி கட்டும் சடங்கே! திருமணச் சடங்கின்போது மணமேடையில் மணமகன் மணமகள் கழுத்தில் மங்கலச் சூத்திரத்தை முடிக்கும் போது குருமார்கள் உரத்த குரலில் மந்திரம் முழங்க,மங்கல வாத்தியங்கள் பெருத்த அளவில் இசைக்க,மங்கல மடந்தையர் வாழ்த்துப் பாடல் இசைக்கப் படுவதைக் காண்கிறோம்..

அச்சமயத்தில் சிலர் கூறும் தீய சொற்கள் அமங்கலச் சொற்கள் மணமக்கள் காதுகளில் விழக்கூடாது என்பதற்காகவே அவ்வாறு நிகழ்த்தப் படுகிறது. திருமணத்திற்கு வந்த அனைவரின் மனமும் ஒரேமாதிரியாக இருக்கும் எனச் சொல்ல முடியுமா? தற்காலத்தில் திருமண அரசாங்கச் சான்றிதழ் பெறவும் தாலி அணிவிக்கும் சடங்கு ஒரு சாட்சியமாகத் தேவைப்படுகிறது.

எனவே பண்டைக்காலம் முதல் வழிவழியாக வரும் தாலிகட்டும் மரபை, முன்னோர் கடைபிடித்த பழக்க வழக்கங்களை முற்றிலும் தவிர்த்தல் கூடாது. நாகரிகத்தின் பெயரால், பிறநாட்டாருடன் கொண்ட தொடர்பால், பழகும் நிலையால் திருமணத்திற்குப் பிறகு பெண்கள் தாலிக்கயிறைக் கழட்டி ஆணியில் மாட்டும் நிலையையும், பீரோவில் வைத்துப் பூட்டும் நிலையையும் இன்று காணமுடிகிறது. பிறருடைய இல்லச் சுப நிகழ்ச்சிகளுக்குக் கணவனுடன் செல்லும் நிலை ஏற்படும்போது மட்டும் பிற அணிகலன்களுடன் தாலிக்கொடியும் கழுத்தில் ஏறி அழகுச் சாதனம்போல் அணிந்து கொண்டு செல்லும் மனைவியரையும் பார்க்கிறோம்.



இன்றும் சில குடும்பங்களில் வேறுபட்ட சமயத்தினருடனும், வேறு சாதியினருடனும் திருமணமாகும் நிலை ஏற்படும் போதும் பெண் வேறுபட்ட சமய/சாதியைச் சேர்ந்தவளாகி விட்டால், பெண்வீட்டார் வழக்கப்படி அவளது பெற்றோர் செய்து கொடுத்த திருமாங்கல்யத்தில் (பொன்தாலியில்) அவர்கள் சமயச்சின்னம் பொறிக்கப் பட்டிருந்ததைக் கழட்டி வைக்கச் செய்யும்

(திருமணம் முடிந்து கணவன் வீட்டிற்கு வந்து சில காலம் கழித்து) மாமியார்களையும் பார்க்க்கிறோம்.

(இரண்டு வீட்டார்களும் தனித்தனியாக தாலி வாங்கிக் கட்டச் செய்வதனால் வரும் விளைவு) இரண்டு மங்கல அணிகள் கட்டினாலும், மாமியார்காரி மருமகளிடம் தங்களது சமயச்சின்னம் பொறிக்கப்பட்ட மங்கல அணியைக் கழட்டி வைக்கச் சொல்லலாமே!

மங்கல அணிக்கு முக்கியத்துவம் கொடுத்த தமிழர் பண்பாட்டில் வந்தவர்கள் மங்கல அணியைக் கழட்டி வைக்கச் சொல்லுவதே பாபம்!

தற்செயலாகத் தாலிக்கயிறு நைந்து அறுந்தால் கூட கண்ணீர் வடிக்கும் மனைவிமார்கள் இருந்த நாட்டில் கணவன் உயிருக்குப் போராடும் நிலையில் தனக்குத் தாலி பாக்கியம் தரும்படி இறைவனிடம் வேண்டும் மனைவிமார்கள் நிறைந்த நாட்டில் நாகரிக வனிதையர் மங்கல அணியைக் கழட்டித் திரிவது அமங்கலமாகத் தோன்றவில்லையா?

இதற்குத்தானா பெண்வீட்டார் நல்ல முகூர்த்தநேரம் பார்த்தும், பல இலட்சக் கணக்கில் சிலவு செய்தும் ஆடம்பரமாகத் திருமணம் செய்து வைக்கிறார்கள்! கழட்டி வைப்பதற்குத் தங்கத் தாலி எதற்கு? பிற உலோகத்தால் தாலி செய்து கட்டிக் கொள்ளலாமே!

நாகரிகப் போர்வையில் திரியும் சில மாமியார்களும் உடந்தையாக இருக்கின்றனரே! நினைத்தால் வேதனையாகத்தான் உள்ளது வருத்தமும் உண்டாகிறது.

தற்காலத்தில் கள்வர்பயம் இருப்பதனால் ஒன்று களவாடப் பட்டாலும் மற்றொன்றை அணிந்து கொள்ள வாய்ப்பாக இருக்குமே எனச் சிலர் சப்பைகட்டு கூறும் மாமியார்களின் நாவினை அறுக்காமல் என்ன செய்வது! உலகம் திருந்தாதா!

தமிழர் மரபு காக்கப் படாதா!

ஒருபெண் மணமானவளா இல்லையா என்பதன் அடையாளம் தாலி! மங்கல அணியே பிறன்மனை நோக்கா ஒழுக்கக் கட்டுப்பாட்டை ஆடவர்க்கு உணர்த்தும்!

மணமான பெண்களே! மாமிமார்களே!
சிந்திப்பீர்! செயல்படுவீர் !
தமிழர் மரபைப் போற்றுவீர்! காப்பீர்!
மங்கலம் என்ப மனைமாட்சி!

தாய் அல்லவா..

கவிஞர் சாந்தினி பீ

எங்கே மறந்து போனாய்...
பருவத்தில் முளைத்த
காதலில் அமிழ்து மறந்து
போனாயோ ..
கணவனோடு கை சேர்த்து
நடந்த இல்லற
வாழ்க்கையின் இனிமையில்
மறந்து போனாயோ...
உன் வாரிசு ஒன்று
உருவானபோது அந்த வலி
பொருந்திய இனிமையில்
மறந்து போனாயோ....
முதல் பிறந்த நாளை
கொண்டாட காத்திருக்கும்
உன்னை அம்மா என்று
அழைக்கும் மழலையின்
மகிழ்ச்சியில் மறந்து
போனாயோ ....
நீ அம்மா வென்ற தாயே
மறந்து போனாயோ ...
உன்னை ஈன்றவளை மறந்து
போனாயோ ...
அவள் பிறந்த நாளை
மறந்து போனாயோ...
உன் சின்ன கரங்கள்
வரைந்த ஓவியங்கள் இன்னும் மறக்கவில்லை
பரவாயில்லை .,.
மறந்து போ...
மகிழ்ந்தே சொல்கிறேன் மறந்து போ....
உன் குடும்பத்தில் நீ மகிழ்ந்து போ....
என்னை மறந்து போ...
ஆயினும் நான் மகிழ்கிறேன்.. தாய் அல்லவா...
வாழ்க வாழ்க.

இயேசு அழைத்தார்

கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

”சமாதானம் பெற வாருங்கள். பரலோகத்திலிருக்கும் பரமபிதா அழைக்கிறார். பாவிகளை ரக்ஷிக்க தாவீதின் குமாரன் அழைக்கிறார். மதுரை தமுக்கம் மைதானம் மாலை 5.30 முதல் சங்கீதம் மற்றும் சுவிசேஷ ப்ரார்த்தனைகளும், ஜபமும். குருடர்கள் பார்க்கிறார்கள்! செவிடர்கள் கேட்கிறார்கள்! சப்பாணியர் நடக்கிறார்கள்! ஊமைகள் பேசுகிறார்கள்! அனைவரும் திரண்டு வருக.” என்று ஒவ்வொரு தெருவிலும் சுவற்றில் பெரிதாய் நோட்டிஸ்கள் ஒட்டப்பட்டு இருந்தன.

மாசி வீதி முக்குகளில் ஒலி பரப்பிகள் மூலம் வெண்ணிற அங்கி உடையில் கிறிஸ்துவ சகோதரர்கள், *“காணமல் போன ஆடுகளே! தடம் கண்டு மீளுங்கள். கர்த்தருடைய ராஜ்ஜியம் சமீபமாய் இருக்கிறது. மனந்திருந்ததலுக்கான நேரம் இன்றே! இப்போதே!”* என்று உரத்து அழைப்பு விடுத்துக் கொண்டிருந்தனர்.

நான் அப்போது மதுரையில் வடக்கு மாசி வீதியில் இருந்த ஒரு கிருத்துவப் பள்ளியில் ஏழாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். கிருத்துவப் பள்ளியில் ஆங்கிலம் நன்றாக கற்பிப்பார்கள் என்ற எண்ணம் என் தந்தையாருக்கு. சிறு வயது முதல் எனக்கு திக்கு வாய் தொந்தரவு உண்டு. வல்லினத்தில் ஆரம்பிக்கும் எந்த வார்த்தையும் எனக்கு சரளமாக வாயில் வராது, என் பெயர் உட்பட. வல்லின நெட்டெழுத்தில் ஆரம்பிக்கும் வார்த்தைகளை சொல்வது எனக்கு கிலியை தந்தன. பள்ளிக்கூடத்தில் சக மாணவிகளின் கிண்டலுக்கும் பரிகாசத்திற்கும் எப்போதும் நான் ஆளானேன். அந்தக் காலத்தில் செய்யுள் ஒப்புவித்தல் என்று ஒரு தேர்வு இருக்கும்;ஆங்கிலத்திலும், தமிழிலும். ஒருபோதும் நான் அதில் நான் தேர்ச்சி அடைந்ததே இல்லை. என் தந்தை இதற்காக அனைத்து வைத்தியங்களும் பார்த்துக் கொண்டிருந்தார். வேண்டாத தெய்வமும், போகாத கோயிலும் இல்லை.

அன்று மதியம் உணவருந்த வீட்டுக்குச் சென்று திரும்பும் வழியில் இந்த சுவரொட்டிகளை பார்த்தும், இவ்விதமான சாலையோர பிரசங்களையும் கேட்டு என் மனதில் ஒரு இனம்புரியாத ஒரு எழுச்சி உண்டானது.

நேராக எனது வகுப்பின் ஆசிரியையிடம் போனேன். கமலா எட்வர்ட் என்ற அந்த ஆசிரியை; தலை நரைத்துப்போன ஒரு வயதான ஆசிரியை. என் வயதிருக்கும்; என்று கேட்டால்; அதை எல்லாம் யோசிக்கும் வயதில்லை, எனக்கு, அப்போது. அவர் எப்போதும் ஆகாச வர்ண நீல சேலையோ பழுப்பு அல்லது வெளிர் மஞ்சள் சேலையோ அல்லது தூய வெண்மை நிற சேலையோதான் உடுத்தியிருப்பார்கள். கையில் உள்ள பையில் கூர்மையாக சீவப்பட்ட பென்சில்களும் பச்சை, நீலம் மற்றும் சிவப்பு மை அடைத்த பேனாக்களோடு இங்க், இங்க் ரப்பர், பென்சில் ரப்பர் பென்சில் சீவுவான், இவைகளை ஒரு தட்டையான பிஸ்கட் டப்பியில் வைத்திருப்பார்கள். இன்னொரு டப்பியில் கலர் பென்சில்களும் பேனாக்களும் ரப்பர்களும் பென்சில் சீவுவான்களும். எவராவது எதையாவது, கொண்டு வரவில்லை எனில்; தெரிசா டீச்சர் போல் திட்ட மாட்டார்கள். முட்டிங்கால் போடச் சொல்ல மாட்டார்கள். பெஞ்சு மேல் ஏறி நிற்கச் சொல்ல மாட்டார்கள். " தேவனுக்கு மகிமை," என்று மூன்று தரம் சொல்லச் சொல்வார்கள். நெற்றியில் சிலுவைக் குறி போடுவார்கள். அப்புறம். தனது டப்பியிலிருந்து பென்சிலோ, அழி ரப்பரோ, பென்சில் சீவுவானையோ எடுத்துத் தருவார்கள். திருப்பி தந்தால், "நீயே வெச்சுக்க; அப்பதான் இனி மறக்க மாட்டாய்."

என்பார். எனக்கு அவரை ரொம்ப பிடித்திருந்தது. அவருக்கு என்னைப் பிடிக்குமா;என்று கேட்டால்,அது எனக்குத் தெரியாது.

அவரிடம் போய், "டீச்சர் நான் ஊமையா?" என்று கேட்டேன். அதைக் கேட்டவுடன், அவருக்கு மிகவும் கோபம் வந்து விட்டது "யார் உன்னை அப்படி கூப்பிட்டார்கள்? நான் வந்து கேட்கிறேன்" என்று எழுந்தார்கள். நான் பயந்து விட்டேன். "இல்லே! டீச்சர்! நானேதான் கேட்கிறேன். இன்று நான் வரும் வழியில் ஒரு சுவரொட்டியைப் பார்த்தேன். ஜபம் செய்தால் ஊமைகள் பேசுவார்கள் என்று போட்டிருந்தது. நான் ஊமை அல்லவே. பேச்சு தானே திக்குகிறது. ஜபம் பண்ணினால் திக்குவாய் போய் விடுமா? ஜபம் என்றால் என்ன டீச்சர்?" என்று கேட்க; அவர் கண்ணில் ஒரு அமைதி வந்தது. "உண்மையான விஸ்வாசம் இருக்கும் மனதிற்கு ஏசு செவி சாய்ப்பார்" என்று தான் முழந்தாளிட்டு என்னையும் முழந்தாளிடச் சொன்னார். சிறிது நேரம் ஏதோ முணுமுணுத்து விட்டு "அல்லேலூயா" என்று சற்றே உரத்துச் சொன்னார். சிலுவை குறியை என் நெற்றியில் இடும் சமயம் "இன்று மாலை, நான் உன்னுடன், உன் வீட்டுக்கு வருகிறேன்." என்றார்.

எனக்கு அதில் மிகவும் பெருமை. மாலை டீச்சருடன் வீட்டுக்குப் போனபோது, அப்பாவும் வந்து விட்டிருந்தார். அம்மா காஃபி கொண்டு வந்து கொடுத்தார்கள். டீச்சரும் அப்பா- அம்மாவும் சிறிது நேர உரையாடலுக்குப் பின், அப்பா, "சரி டீச்சர். நாங்களும் எத்தனையோ வைத்தியம் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறோம். குழந்தைக்கு குணமானால் சரி. இதையும் செய்து பார்க்கிறோம். ஆனால் உங்கள் மதத்திற்குள் அவளை செலுத்தி விடாதீர்கள்." என்றார்.

''சார்! அந்த பாவப்பட்ட வேலையை நான் ஒரு போதும் செய்ய மாட்டேன். என்னை நம்புங்கள். நானே வீட்டுக்கு வந்து அழைத்துப் போகிறேன் நானே திரும்பவும் கொண்டு வந்து விடுகிறேன். நீங்கள் ஆண்டவரை நம்பி என்னிடம் குழந்தையை ஒப்புக் கொடுங்கள்.'' என்றார்.

மறுநாள் மாலை மூன்றரை மணி அளவில் மீண்டும் டீச்சர் வீட்டிற்கு வந்து, என்னை தமுக்கம் மைதானத்திற்கு அழைத்துப் போனார்கள். கூட்டமான கூட்டம். அனைவரும் வெண்மையான ஆடையில் இருந்தனர். உயரமான மேடையின் மேல் யாரோ நாலைந்து பேர் பேசிக்கொண்டு இருந்தனர். சில நேரம் உரத்து பாடினார்கள். முழங்காலிட்டு முணு முணுப்பாய் ஏதோ சொல்வது என் தந்தை காலையில் சந்தியாவந்தனம் செய்யும்போது சொல்லும் மந்திரம் போல் இருந்தது. வேடிக்கையாகவும் வினோதமாகவும் இருந்த அந்தக் கூட்டத்தில் நான் காணாமல் போய் விடுவேனோ என்ற பயமும் இருந்தது. டீச்சர் கையை இருக்கப் பிடித்துக்கொண்டு இருந்தேன் திடீரென, ''வைத்தியநாதன் மகள் கற்பகம் என்ற சிறுமிக்கான ஜபம்!'' என்று கேட்க; நான் திடுக்கிட்டேன். டீச்சர் வழி நடத்த நானும் டீச்சரும் அந்த பெரிய மேடைக்கு சென்றோம். அங்கிருந்த ஒருவர் என்னை முழங்காலிட்டு கண்ணை மூடச் சொல்ல டீச்சரும் நானும் எங்களை ஒப்புக் கொடுத்தோம்.

''இந்த சிறுமிக்கு பிறவியிலேயே ஏற்பட்டு இருக்கும் திக்குவாயிலிருந்து பரிபூரண குணம் அடைய கர்த்தராகிய ஏசுவின் பெயரால், இறைஞ்சுகிறோம்.எல்லாம் வல்ல ஆண்டவனே! இந்த சிறு பிள்ளையை ஜபத்தின்

நிமித்தமாக ஆசிர்வதியும்.'' என்று சொல்லி, பைபிளிலிருந்து ஏதோ வாசிக்க கூட்டம் முழுவதும் ஏதோ முணுமுணுத்து ஜபம் செய்தது. ''அல்லேலுயா!'' என்ற கோஷம் தமுக்கம் மைதானம் முழுவதும் எதிரொலிக்க; நான் திடுக்கிட்டு கண் திறந்தேன். முழந்தாளில் இருந்ததினால் கால்கள் வலிக்க எழுந்து நின்றேன். கூட்டம் என்னைப் பார்த்து கை உயர்த்தி ஆசிர்வதித்தது. ஐந்து நிமிடங்களுக்குப் பின் அந்த கூட்டம் நடத்துபவர், கமலா எட்வர்ட் டீச்சரிடம் ஒரு பைபிள் கொடுக்க; டீச்சர் அதில் தன் கையொப்பம் இட்டு எனக்கு கொடுத்தார்கள். ''இப்போதிலிருந்து நீ சொஸ்தம் ஆகிவிட்டாய். இனி உனக்கு வாய் திக்காது. நாவு நிற்காமல் தயங்காமல் பேசுவாய். நிதானமாக பேசி, பழகு. மனதில் ஒரு முறை பேசிப் பார்த்து பிறகு பேசு. ஆண்டவர் உனக்கு பூரண ஆசிர்வாதம் தருகிறார்.'' என்று சொல்ல எனக்கு மனதில் ஏதோ உருகுவது போல் இருந்தது. மனமாற இறைவனிடம் வேண்டினேன். எந்த இறைவனிடம் என்று கேட்டால் இன்று வரை பதில் இல்லை, என்னிடம் அந்தக் கேள்விக்கு.

டீச்சர் என்னை எனது வீட்டில் கொண்டு வந்து விட்டார். என் பெற்றோர்களிடம் அவளுக்கு குணமாகி விட்டது; என்று மட்டும் சொல்லி கிளம்பினார் கமலா டீச்சர் மறுநாள் பள்ளிக்கூடத்தில், இன்னொரு விஷயமும் கற்றுக் கொடுத்தார். ''வல்லினங்களை உச்சரிக்கும் முன், மனதிற்குள்ளாக, ''அ'' என்னும் அட்சரத்தை சொல்லிவிட்டு பேசு. நாவு நிற்காது.'' என்றார்.

டீச்சர் சொன்னதைப் போல் நிதானமாக பேசிப் பழக படிப்படியாக, எனது திக்குவாய் குறைந்தது. ஆங்கிலம் பேசும் போது திக்கல் அறவே இருக்காது. தமிழில் பேசும் போது எனக்கு திக்குவாய் என்று எவராலும் கண்டு பிடிப்பது கடினம். மிகவும் மனவெழுச்சியில் இருக்கும் சமயம் சற்றே தடுமாறும். நானே யோசிப்பேன்; சிலசமயம். எனக்கு திக்குவாய் நின்றது; அந்த கூட்டு பிரார்த்தனையாலா; அல்லது டீச்சர் கற்றுக் கொடுத்த அந்த வழி முறையினாலா , என்று. இரண்டும்தான் என்று என் மனம் சொல்ல; இன்றுவரை என் மனம் கர்த்தரின் நாமத்தை மகிமை படுத்துவதிலிருந்து ஓயவில்லை. இன்றும் டீச்சர் கொடுத்த பைபிளை படித்துக் கொண்டிருக்கிறேன். கமலா எட்வர்ட் டீச்சர் கொடுத்த பைபிள் இன்றுவரை என் கையில், என் நாவை வழி நடத்தும் கர்த்தாவாய் இருக்கிறது. ஆமென்!

பெருஞ்செயலர் பெரியார்

கவிஞர் மாலதி இராமலிங்கம்

பெருஞ்செயல்கள் புரிந்தவர் அவர் பெரியார்!
பெருமைமிகு ஆளுமையிவர் அறியார் யார்?
பொதுவுடமை சிந்தனைகளுக்குச் சிறகு விரித்தார்!
பொதுதான் ஆண் பெண்ணென்று சிக்கலெடுத்தார்!

சாதியொழிப்பும், சமூக நீதியும், சமூகத்தில்
சமத்துவமும், சகோதரத்துமும், சமமெனும் தர்மமும்
சுயமரியாதையும், சுயநலம் அற்ற தொண்டும்
சீரிய சீர்திருத்தக் கொள்கைகளும் கொண்டார்!

பயமறியாதப் பண்பு நெறிகளை வளர்த்து,
பகுத்தறிவுக் கூர்மைப் பார்வையுடன் நின்று,
புத்திக்கும், பொதுவறிவுக்கும், பொருத்திப் பார்க்கும்
புத்தகப் படிப்பிற்கும், உலகறிவிற்கும் ஈர்க்கும்

பொன்னான மொழிகளால் பூமியைத் திருத்தியும்,
போராட்டங்கள், தியாகங்கள் பலவே செய்தும்,
பொதுத்தொண்டில் போர்முனைகள் நிறைய கண்டும்,
பொதுவாழ்வில் கட்டுப்பாடும், உறுதியும் பெற்றும்,

அறியாமை, மூடநம்பிக்கையினை முழுதாய் அகற்ற,
அர்த்தம் அற்ற சம்பிரதாயங்களை ஒழிக்க,
அவரூன்றிய சீரிய விதைகளை வளர்க்க,
அரும்பாடு பட்டாரே சொற்களுண்டோ உரைக்க?

தீண்டாமைக் கொடுமைதனை தீயதென எதிர்த்தே,
தீண்டாதே மதுவை எனவும் எச்சரித்தே,
தோழர் என்றே அன்பாக விளித்தே,
தேசத்தில் புரட்சித்தீ மூட்டினார் நிறைத்தே!

தமிழ்ப்பெண் ஆளுமைகள் -3

எழுத்தாளர் அகிலா

artahila@gmail.com கோவை

- **உங்களைப் பற்றியும், உங்கள் இலக்கியப் பின்னணி மற்றும் எழுத்துலகப் பயணம் குறித்தும் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்த முடியுமா?**

பெண்கள் மேம்பாட்டு மின்னிதழாக விளங்கும் "சக்தி" இதழின் வாசகர்களுக்கு என்னுடைய அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் அகிலா, மனநல ஆலோசகர். நவீன இலக்கியத்தில் ஆய்வுக் கட்டுரைகள், சிறுகதைகள், நாவல்கள், மொழிபெயர்ப்புகள், பயண நூல்கள் எனப் பல்வேறு தளங்களில் தொடர்ந்து இயங்கி வருகிறேன். இதுவரை மொத்தம் 26 நூல்கள் எழுதியிருக்கிறேன். நூல் திறனாய்வுகள், இலக்கியக் கூட்டங்கள் மற்றும் இலக்கியம் சார்ந்த பல்வேறு நிகழ்வுகளிலும் தொடர்ந்து பங்கேற்று வருகிறேன்.

பொறியியலில் இளங்கலைப் பட்டம், கணினியியலில் முதுகலைப் பட்டம், மனநலம் மற்றும் உளவியல் துறையின் மீது ஏற்பட்ட ஆர்வத்தால் உளவியலில் முதுகலைப் பட்டம் பெற்றதுடன், உளவியல் சார்ந்த இரண்டு பட்டயப் படிப்புகளையும் (PG.Diploma) முடித்து தற்போது மனநல ஆலோசகராக கோயம்புத்தூரில் பணியாற்றி வருகிறேன்.

என்னுடைய கணவர் புகழேந்தி, காவல்துறை அதிகாரியாகப் பணியாற்றியவர். எங்களுடைய ஒரே மகன் நவீன், தனது குடும்பத்துடன் இங்கிலாந்தில் வசித்து வருகிறார்.

இலக்கியம் மற்றும் மனநலம் மட்டுமல்லாமல், நவீன ஓவியத்திலும் எனக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. கோயம்புத்தூரில் உள்ள சித்ரகலா அகாடமியுடன் இணைந்து செயல்பட்டு வருகிறேன். அப்ஸ்ட்ராக்ட் (Abstract), செமி அப்ஸ்ட்ராக்ட் (Semi-Abstract) வகையிலான ஓவியங்களை வரைந்திருக்கிறேன். என்னுடைய

ஓவியங்கள் பல ஓவியக் கண்காட்சிகளில் பெண் ஓவியர்கள் என்ற வகைமையிலும் இடம்பெற்றுள்ளன. ஆக, ஓவியம், மனநலம், இலக்கியம் — இந்த மூன்று தளங்களிலும் தொடர்ந்து இயங்கி வருகிறேன்.

- **உங்கள் இலக்கியப் பயணம் எப்போது, எவ்வாறு தொடங்கியது? எழுத்துத் துறைக்கு வருவதற்கு உங்களைத் தூண்டியது எது?**

நான் எழுத்துக்களைக் கூட்டி வாசிக்கத் தொடங்கிய காலத்திலிருந்து புத்தகங்களை வாசித்து வருகிறேன். என்னுடைய வாசிப்பு உலகம் மிகவும் பரந்துபட்டது. அதிலிருந்தே எழுத்துப் பயணம் தொடங்கியது என்றுக் கொள்ளலாம். வாசிப்பிற்கான முக்கியக் காரணமாக என்னுடைய பெற்றோரைச் சொல்லலாம். தகப்பனார் துரைராஜ் காவல்துறை அதிகாரி; தீவிர வாசிப்பாளர். புனைவு, அபுனைவு என இருவகை வாசிப்பும் அவரிடம் உண்டு. புனைவுக்கு அப்பால் அபுனைவு நூல்களையும் தேடிப் படிக்கும் பழக்கத்தை அவரிடமிருந்தே கற்றுக்கொண்டேன்.

தாய் சுந்தரி. பொதுஜன இதழ்களில் வெளிவரும் நாவல்கள் மட்டுமே வாசித்த அந்தகால பெண்மணியாக அவர் இல்லாமல் சிறுகதைகளையும் வாசிப்பதில் விருப்பமுடையவர். அவரிடமிருந்துதான் தமிழில் சிறுகதைகளை வாசிக்கும் பழக்கம் எனக்கு உருவானது. பள்ளிப் பருவத்திலேயே, குறிப்பாக எட்டாம், ஒன்பதாம் வகுப்பு படித்த காலத்தில், ஜெயகாந்தன், அம்பை ஆகியோரின் படைப்புகளை வாசிக்கத் தொடங்கிவிட்டேன். அவர்கள் என் விருப்பமான எழுத்தாளர்களாக இருந்தார்கள். என் பதின்பருவத்தை அவர்களின் எழுத்து செதுக்கியது என்றால் மிகையில்லை.

கவிதைதான் எழுத்தின் துவக்கம். விருப்பமாக தொடங்கிய ஒன்று, காலப்போக்கில் என் தொழிலாகவும் மாறிப்போனது. புனைவு இலக்கியத்தைப் பொறுத்தவரை, கவிதையிலிருந்து சிறுகதைகள் என்று நகர்ந்தேன். கல்கி, கணையாழி, இணைய இதழ்களில் எழுதியிருக்கிறேன். நாவல் எப்போதும் பெரிதாய் என் விருப்பத்தில் இல்லாதபோதும் சிறுகதைக்குள் அடங்காத உணர்வுகளை நாவல்களாக மாற்றினேன்.

அபுனைவு சார்ந்து, நவீன இலக்கியம் குறித்த விமர்சனப் பார்வைகள், கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகள், படைப்பாளர்கள் குறித்த உரைகள், திறனாய்வுக்

கட்டுரைகள், நூல் திறனாய்வுகள் என எழுதியிருக்கிறேன். அவற்றைக் கட்டுரை நூல்களாக வெளியிட்டுள்ளேன். என்னுடைய இருதய அறுவைச் சிகிச்சை அனுபவத்தை மையமாக வைத்து சுய அனுபவ நூல் ஒன்றும் வெளிவந்துள்ளது. பயண இலக்கியமாக இங்கிலாந்து சென்று வந்த அனுபவங்களை வைத்து 'இங்கிலாந்தில் 100 நாட்கள்', 'இங்கிலாந்தின் நதிக்கரையில்' ஆகியவை வெளிவந்துள்ளது.

மொழிபெயர்ப்புத் துறையிலும் தொடர்ந்து இயங்கி வருகிறேன். வேட்டையாளர் மற்றும் சூழலியல் ஆர்வலர் ஜிம் கார்பெட், திருநங்கை அக்கை பத்மஷாலி உள்ளிட்டோரின் படைப்புகளைத் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறேன். சிறு வயதிலிருந்து புத்தகங்கள் மீதிருந்த ஈர்ப்பும், தொடர்ந்து இருந்துவந்த வாசிப்பனுபவமும் இன்றும் என்னை இலக்கியத்துறையில் இயங்க வைக்கிறது.

- **இதுவரை நீங்கள் எழுதி வெளியிட்டுள்ள நூல்கள் எத்தனை? குறிப்பிடத்தக்க நூல்கள் குறித்து சுருக்கமாகக் கூற முடியுமா?**

சின்ன சின்ன சிதறல்கள், சொல்லிவிட்டு செல், மழையிடம் மௌனங்கள் இல்லை, மணலில் நீந்தும் மீன்கள், ஆதிமனுஷியும் பேராழியும், *I Named the Village* (ஆங்கிலம்) - கவிதை தொகுப்புகள்

நாங்கதாங்க பெண்கள், நின்று துடித்த இதயம், சமகால இலக்கியம் தொகுதி ஒன்று, சமகால இலக்கியம் தொகுதி இரண்டு, வாசிப்பின் வழி உரைகள் - சமகால இலக்கிய தொகுதி மூன்று - கட்டுரை நூல்கள்

மிளகாய் மெட்டி, மண் சட்டி, சீமாட்டி, *Elephant Corridor* (ஆங்கிலம்) - சிறுகதை தொகுப்புகள்

தவ்வை, அறவி, *Veins of Memory* (ஆங்கிலம்), சம்முகம் (குறுநாவல்) – நாவல்கள்

கோயில் புலியும் குமாவுன் ஆட்கொல்லிகளும், நீண்ட பயணத்தில் சிறிய தொடக்கம் -மொழிபெயர்ப்பு நூல்கள்

இங்கிலாந்தில் 100 நாட்கள், இங்கிலாந்தின் நதிக்கரையில் - பயண நூல்கள்

காட்டிடைவெளி, மழைப்பறவைகள், *Ahilas Cook Book* – மின்னூல்கள் போன்ற நூல்கள் வெளிவந்துள்ளன.

சிறுகதைகள் என் விருப்பத் தேர்வு. சிறிதான கதைக்குள் ஆழமான உணர்வுகளையும் வாழ்க்கையின் நுட்பமான தருணங்களையும் பதிவு செய்ய முடிவது அதன் சிறப்பு. இருந்தும் எனது சுய அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதிய 'நின்று துடித்த இதயம்' நூல் குறிப்பிடத் தகுந்தது. இருதய அறுவைச் சிகிச்சையை எதிர்கொண்ட ஒரு பெண்ணின் அனுபவத்தை வெளிப்படையாகப் பதிவு செய்த முதல் தமிழ் நூலும் இதுதான் என்பதில் எனக்குப் பெருமிதமே. ஒரு பெண்ணாக, அறுவைச் சிகிச்சையின்போது என் உடலும் மனதும் எதிர்கொண்ட நிலை, வலிகள், பயங்கள், அவற்றிலிருந்து மீண்டு வந்த விதம் ஆகியவற்றை வெளிப்படையாக எழுதுவது எளிதான ஒன்றாக இருக்கவில்லை. அந்த அனுபவத்தை எந்தத் தயக்கமும் இல்லாமல் எழுத்தில் பதிவு செய்ய முடிந்தது.

இதனுடன் என் முதல் நாவலான 'தவ்வை'யைக் குறிப்பிட நினைக்கிறேன். நாவல்கள் என் பெருவிருப்பில் இல்லையெனினும் 'தவ்வை' நாவலின் கரு மனதில் உருவானபோது, இதை ஒரு சிறுகதைக்குள் சுருக்காமல் நாவலாக விரிவுபடுத்த வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. அவ்வாறு எழுதப்பட்ட அந்த நாவல் வாசகர்களிடையே நல்ல வரவேற்பையும் பாராட்டையும் பெற்றது. 1900 களின் தொடக்கக் காலங்களில் ஆணாதிக்கத்தின் கீழ் வாழ்ந்த பெண்களின் வாழ்க்கையையும் அவர்களின் உணர்வுகளையும் விரிவாக வெளிப்படுத்துவதற்கான ஒரு உரைநடை வடிவமாக அது அமைந்தது.'தவ்வை' நாவல் அளித்த வாசக நம்பிக்கையே அடுத்த நாவலான 'அறவி'யை எழுதுவதற்கும் ஊக்கமாக அமைந்தது. இது மூன்று தலைமுறைப் பெண்களின் வாழ்க்கையையும் அவர்களது அனுபவங்களையும் மையமாகக் கொண்ட நாவல். இந்த நாவல் கடந்த கால பெண்களின் வாழ்வியல் தொடர்ச்சியாக இல்லாமல் நவீன பெண்களின் சிந்தனை மாற்றங்கள், சமூக நிலைபாடுகளை உள்ளடக்கிய பார்வை கொண்ட ஒரு படைப்புப் பரிசோதனையாகவும் 'அறவி' அமைந்தது. அந்த முயற்சியில் எனக்குக் கிடைத்த வாசக வரவேற்பை ஒரு வெற்றியாகவே கருதுகிறேன்.

- ***உங்கள் முதல் நூல் வெளியானபோது உங்களுக்கு ஏற்பட்ட அனுபவம் எப்படி இருந்தது?***

முதல் நூல் 'சின்னச் சின்ன சிதறல்கள்' கவிதைத் தொகுப்பு. அந்தக் காலகட்டம் பெண் கவிதைகளின் காலம். அப்போது கோவை இலக்கியச் சந்திப்புகளில் நூல்களைத் திறனாய்வுச் செய்யும் பணிகளிலும் ஈடுபட்டிருந்தேன். நூல் திறனாய்வாளராகப் பல நூல்களை அணுகியிருந்தாலும், ஒரு படைப்பாளியாக என்னுடைய சொந்த நூலை வெளியிட வேண்டும் என்ற உந்துதல் இயல்பாகவே எனக்குள் இருந்தது. அந்த உந்துதலின் வெளிப்பாடாகத்தான் என்னுடைய முதல் கவிதை நூல் வெளிவந்தது.

இன்று வெளிவரும் கவிதை தொகுப்புகள் குறிப்பிட்ட கருப்பொருள் வகைமை (பெண் மையக் கவிதைகள், சூழலியல் மற்றும் பாலியல் சார்பு கவிதைகள்) கொண்டவைகளாக இருப்பதைக் காணமுடியும். சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன் அவ்வாறில்லை. முதல் கவிதை நூல் வெளிவந்த காலகட்டத்தில் கவிதைகள் குறித்த அணுகுமுறை வேறாக இருந்தது. அதுவரை எழுதியிருந்த கவிதைகளைத் தொகுத்து நூலாக்கம் செய்வதே நோக்கமாக இருந்தது. அதனால் அது ஒரு குறிப்பிட்ட கருப்பொருளுக்குள் கட்டமைக்கப்பட்ட தொகுப்பாக இல்லாமல், என்னுடைய பல்வேறு சிந்தனைகளின் 'சின்னச் சின்ன சிதறல்கள்' ஆகவே அமைந்தது. இன்று அந்த நூலைத் திரும்பிப் பார்க்கும்போது, எழுத்தில் முதிர்ச்சி தேவைப்பட்ட காலத்தின் படைப்பாக எனக்கே தோன்றலாம். ஆனால் அதுதான் என்னுடைய முதல் நூல்; ஒரு படைப்பாளியாக, ஒரு நூலாசிரியராக அடையாளப்படுத்திய முதல் அனுபவம் அது. எத்தனை நூல்கள் அதற்குப் பிறகு வெளிவந்திருந்தாலும், 'சின்னச் சின்ன சிதறல்கள்' எனக்கு

எப்போதும் முதல் படைப்பின் தனித்துவமான மகிழ்ச்சியையும் நினைவையும் கொடுக்கக்கூடியது எனலாம்.

- **இதுவரை வெளியிட்ட நூல்களில் உங்களுக்கு மிகவும் நெருக்கமான அல்லது பிடித்தமான நூல் எது? அதற்கான காரணம் என்ன?**

ஒரு பெண்ணாக என்னுடைய பயண அனுபவங்களைப் பதிவு செய்த பயண நூல்கள் எனக்குத் தனிப்பட்ட வகையில் மிகவும் பிடித்தமானவை.

இணையத்தில் பயணக் காணொளிகள் பலவற்றைப் பார்க்கிறோம். குறிப்பாகப் பெண்கள் தங்களுடைய பயண அனுபவங்களை சமூக ஊடகங்களில் காணொளிகளாகப் பகிர்ந்துகொள்வதும் அதிகரித்திருக்கிறது. ஆனால் அவற்றை ஒரு நூலாகப் பதிவு செய்யும்போதுதான் அது காலம் கடந்தும் நிலைத்திருக்கக்கூடிய ஓர் ஆவணமாக மாறுகிறது என்று நான் நம்புகிறேன். அந்த எண்ணம்தான் என்னுடைய பயண அனுபவங்களை நூல்களாக எழுதத் தூண்டியது.

நான் பயண நூல்களை எழுதத் தொடங்கியபோது, பெண்கள் எழுதிய பயண இலக்கியங்களைத் தேடிப் பார்த்தேன். ஒப்பீட்டளவில் பெண்களின் பயண அனுபவங்கள் நூல்களாகப் பதிவு செய்யப்பட்டிருப்பது குறைவாகவே இருப்பதாக எனக்குத் தோன்றியது. ஒரு பெண் தன்னுடைய பார்வையில் ஒரு புதிய நிலத்தையும், சமூகத்தையும், பண்பாட்டையும் எவ்வாறு பார்க்கிறாள் என்பதைப் பதிவு செய்ய வேண்டும் என்ற விருப்பம் எனக்குள் ஏற்பட்டது.

என்னைப் பொறுத்தவரை பயணம் என்பது ஓர் இடத்திற்குச் சென்று அங்குள்ள சுற்றுலாத் தலங்களைப் பார்த்துவிட்டு வருவது மட்டுமல்ல. ஒரு புதிய நாட்டிற்குச் செல்லும்போது அங்குள்ள மக்களின் வாழ்க்கை முறை, சமூக அமைப்பு, பண்பாடு, வரலாறு, அரசியல், இயற்கை வளங்கள், நதிகள், மலைகள், நிலப்பரப்பு என அனைத்தையும் கவனிக்க விரும்புவேன். குறிப்பாக, ஒரு பெண்ணின் பார்வையில் அந்தச் சமூகம் எப்படித் தெரிகிறது? என்பதையும் பதிவு செய்ய முயன்றிருக்கிறேன். அந்த வகையில் இரண்டாவது பயண நூலான 'இங்கிலாந்தின் நதிக்கரையில்' முழுக்க முழுக்க ஓர் ஆய்வு நூலாக அமைந்தது.

இங்கிலாந்தின் சமூக அமைப்பு எப்படி இருக்கிறது, அதன் அரசியல் எதைப் பேசுகிறது, அங்குள்ள நதிகளும் மலைகளும் நிலப்பரப்பும் மக்களின் வாழ்க்கையை எவ்வாறு வடிவமைக்கின்றன, இயற்கை மற்றும் எரிசக்தி வளங்கள் அவர்களின் பொருளாதாரத்திலும் வரலாற்றிலும் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன, சில மூலப்பொருட்களுக்காக அவர்கள் ஏன் பிற நாடுகளைச் சார்ந்திருக்க வேண்டியிருந்தது போன்ற பல்வேறு அம்சங்களையும் ஆராய்ந்து அந்த நூலில் பதிவு செய்திருக்கிறேன். நான் பார்த்த நிலத்தையும் மக்களையும் சமூகத்தையும் வரலாற்றையும் புரிந்துகொள்ள முயன்ற பதிவுகளாக அமைந்திருக்கின்றன என்ற வகையில் பயண நூல்கள் என் மனதுக்கு மிகவும் நெருக்கமானவை.

- **உங்கள் படைப்புகளில் பெண்களின் வாழ்க்கை, உணர்வுகள் மற்றும் சமூகப் பிரச்சினைகள் எந்த அளவுக்கு இடம்பிடிக்கின்றன?**

என்னுடைய சிறுகதைகளில் பெரும்பாலானவை பெண்களை மையப்படுத்தியவையாகவே இருக்கும். ஆனால் நான் எழுதும் பெண்கள் ஒரே மாதிரியானவர்கள் அல்ல. அதுபோல, எந்தக் கதையிலும் நான் தீர்வுகளை முன்வைப்பதில்லை. பெண்களின் பிரச்சினைகளைப் போராட்டத் தொனியில் எழுதுவது என் எழுத்துமுறை அல்ல. மாறாக, அன்றாட வாழ்க்கைக்குள் மிக இயல்பாக மறைந்திருக்கும் சில நுண்ணிய விஷயங்களை வாசகர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

'அறவி' நாவலில், சித்தரிக்கப்பட்டிருக்கும் மூன்று தலைமுறைப் பெண்களின் சிந்தனைகளுக்கும் வாழ்க்கைத் தேர்வுகளுக்கும் இடையில் நேரும் மாற்றங்களை நுட்பமான முறையில் கொடுத்திருக்கிறேன். அதேபோல், என் சிறுகதையொன்றில், தந்தையின் எதிர்ப்பை மீறி, காதலித்தவனுடன் வீட்டைவிட்டு வெளியேற நினைக்கும் பெண் அச்செயலை எதிர்க்காமல் இருக்கும் தாயை நோக்கி தொடுக்கும் கேள்வியின் பதிலில் தான் பெண் வாழ்வின் பிடிமானக் கயிறு இன்றும் ஆணின் கைகளில் இருப்பதைக் காட்டும்.

//காதலித்தவனைத் திருமணம் செய்துகொள் அல்லது உன் அப்பா சொல்பவரைத் திருமணம் செய்துகொள். ஆனால் உன் வாழ்க்கையில் ஒவ்வொரு கட்டத்திலும் உனகானவன் பிடித்திருக்கும் கயிற்றின் நீளத்திற்குள்தான்

உன்னுடைய சுதந்திரம் தீர்மானிக்கப்படுகிறது. நீ வீட்டு வாசல் வரை செல்வதும், அதைத் தாண்டி வீதி வரைச் செல்வதும், வேலைக்குச் செல்வதும், பேச்சுச் சுதந்திரத்தின் அளவு என்ன என்பதைக்கூட அவன் கையிலிருக்கும் கயிற்றின் நீளம் தான் தீர்மானிக்கிறது//

அந்தக் கதையில் அந்தப் பெண்ணின் தீர்வாக எதையும் எடுத்துரைக்கவில்லை. மாறாக, அவளின் சுதந்திரம் அவளிடமே இருக்க என்ன செய்யவேண்டும் என வாசிப்பாளரைச் சிந்திக்கவே சொல்கிறேன். அதுதான் என்னுடைய எழுத்தின் அடிப்படையான அணுகுமுறையும் கூட. பெண்களின் பிரச்சினைகளுக்குத் தீர்ப்புச் சொல்வதைவிட, அவர்களின் வாழ்க்கைக்குள் இருக்கும் சொல்லப்படாத உணர்வுகளையும் நுண்ணிய சமூகச் சிக்கல்களையும் பதிவு செய்து, வாசகர்களைச் சிந்திக்க வைப்பதையே என்னுடைய எழுத்தின் முக்கிய நோக்கமாகக் கருதுகிறேன்.

காயம், தொதா, நாங்க வெயிலுக்குப் பொறந்தவங்க, மண்சட்டி, சீமாட்டி போன்ற பல கதைகளை இவ்வாறான முறைமையில் தான் இருக்கின்றன.

- ***ஒரு பெண் எழுத்தாளராக உங்களுடைய இலக்கியப் பயணத்தில் நீங்கள் எதிர்கொண்ட முக்கியமான சவால்கள் என்ன?***

இது மிக முக்கியமான கேள்வி. நான் படைப்புலகிற்கு வந்து கிட்டத்தட்ட இருபது ஆண்டுகள் ஆகின்றன. இந்த இருபது ஆண்டுகாலப் பயணத்தில் ஒரு பெண் எழுத்தாளராகப் பல்வேறு அனுபவங்களையும் சவால்களையும் எதிர்கொண்டிருக்கிறேன்.

முதலில், ஒரு பெண் சில கட்டமைப்புகளை உடைத்து வெளிப்படையாக எழுதுவது இன்றைக்கும் அவ்வளவு எளிதானதாக இல்லை. அந்த வகையில் என்னுடைய எழுத்தில் தொடர்ந்து பல முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறேன். பயணங்களை எழுதியிருக்கிறேன்; என்னுடைய இருதய அறுவைச் சிகிச்சை அனுபவத்தையும் பதிவு செய்திருக்கிறேன். சில தயக்கங்களையும் சமூகக் கட்டுப்பாடுகளையும் தாண்டித்தான் இத்தகைய விஷயங்களை என்னால் எழுத முடிந்தது.

புனைவுகளிலும் சில மரபான பார்வைகளை உடைக்க முயன்றிருக்கிறேன். குறிப்பாக, இலக்கியத்தில் பெண் எவ்வாறு சித்தரிக்கப்படுகிறாள் என்ற கேள்வி எனக்கு எப்போதும் முக்கியமானது. நீண்ட காலமாக ஆண் எழுத்தாளர்களின் பார்வையில் பெண் எவ்வாறு வர்ணிக்கப்பட்டாளோ, சில பெண் எழுத்தாளர்களின் படைப்புகளிலும் அதே பார்வை தொடர்வதைப் பார்க்க முடிகிறது. ஒரு பெண் தன்னைப் பற்றிப் பேசும்போதுகூட, ஆண் உருவாக்கிய பெண் குறித்த பிம்பங்களுக்குள்ளேயே தன்னைப் பார்த்துக்கொள்ள வேண்டுமா? என்ற கேள்வி எனக்குள் இருந்தது. பெண்ணின் காதல், விருப்பம், துயரம் போன்ற உணர்வுகளைப் பெரும்பாலும் ஆணின் பார்வையிலிருந்தே இலக்கியம் பேசியிருக்கிறது. என்னுடைய படைப்புகளில் அந்தப் பார்வையை உடைக்க முயன்றிருக்கிறேன் எனலாம்.

அதேபோல் குடும்பம் என்ற அமைப்பில், அதன் பண்பாட்டையும் மரபையும் உறவுகளையும் காப்பாற்ற வேண்டிய முழுப் பொறுப்பும் பெண்ணுடையது என்ற ஒரு பிம்பம் தொடர்ந்து உருவாக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய கதைகளில் பெண்ணை அத்தகைய ஒரு 'பண்பாட்டுக் காவலராக' மட்டும் சித்தரிக்க நான் விரும்புவதில்லை.

பெண் படைப்பாளி ஒருவர் தான் உதடுகள், மார்புகள் என்ற சொற்களைக் கூட தனது கதைகளில் பயன்படுத்துவதில்லை என்று குறிப்பிட்டார். காரணம் கேட்டபோது, அது குடும்பத்தில் எழுதும் பெண்ணுக்கு உகந்ததல்ல என்றார். இந்த சித்திரம் ஆணாதிக்கத்தின் பெண் பிம்பம். அவர் வீட்டில் மாமியார் அல்லது கணவர் அவரது கதைகளைப் படித்துவிட்டு கருத்துரைத்தப் பின்புதான் பத்திரிக்கைக்கு அனுப்புவதாகச் சொன்னார். இது எந்த வகையிலான பெண்ணெழுத்து சுதந்திரம் என்று எனக்குப் புரியவில்லை. ஒருகட்டத்தில் அவர் எழுதுவதை நிறுத்திக்கொண்டார். எழுதுவதற்கு தன்னிடம் கதைகள் இல்லையென்று சொன்னார். அதாவது 'வரையறைகளுக்கு உட்பட்டு' என்பது புரியும் நமக்கு.

இவற்றைக் கடந்து, இலக்கிய உலகத்திற்குள்ளேயே ஒரு பெண் எழுத்தாளர் எதிர்கொள்ளும் புறஉலகு சவால்கள் பலவுண்டு. 'பெண் எழுத்துதானே, என்ன இருக்கப் போகிறது? குடும்பப் பிரச்சினைகளும் அழுகைக் கதைகளும்தானே இருக்கும்?' என்ற அலட்சியமான பார்வை இன்னும் முழுமையாக ஆண்

படைப்பாளிகளிடமும் சில வாசகர்களிடமும் இருந்து மறைந்துவிடவில்லை. பெண்ணின் எழுத்து என்பது அவளுடைய சொந்தத் துயரங்களைச் சொல்லி அழுவது மட்டுமே என்ற பிம்பம் பல தலைமுறைகளாகக் கட்டமைக்கப்பட்டிருக்கிறது. பெண் எழுத்து அதைக் கடந்த மிகப் பெரிய உலகத்தையும் அரசியலையும் சமூகத்தையும் பேசக்கூடியது என்பதை நிரூபிப்பதற்கே பல தலைமுறைகள் தேவைப்பட்டிருக்கின்றன. இன்றும் அந்த நிலை முழுமையாக மாறிவிட்டதாக என்னால் சொல்ல முடியாது.

இதன் இன்னொரு வெளிப்பாட்டையும் இலக்கியச் சூழலில் பார்க்கிறேன். நேர்காணல்களிலோ இலக்கிய உரையாடல்களிலோ ஓர் ஆண் படைப்பாளர் தன்னுடன் இயங்கும் சக ஆண் படைப்பாளர்களின் பெயர்களை இயல்பாகவும் பெருமையாகவும் குறிப்பிடுகிறார். ஆனால் அதே ஊரில், அதே இலக்கியத் தளத்தில் அவருக்கு நிகராக இயங்கிக்கொண்டிருக்கும் ஒரு பெண் படைப்பாளரின் பெயரைச் சொல்வதில் சிறியதாய் ஒரு தயக்கம் இருப்பதை நான் கவனித்திருக்கிறேன். அது ஏன் என்று என்னால் உறுதியாகச் சொல்ல முடியாது. தனக்கு நிகராக ஒரு பெண் படைப்பாளியை அங்கீகரித்து நிறுத்துவதில் மனத்தடை இருக்கலாம். அது கொஞ்சம் வருத்தமளிக்கக்கூடிய விஷயம்தான்.

அதனால், ‘இலக்கிய உலகில் எனக்கான இடத்தை நான் முழுமையாக அடைந்துவிட்டேன்’ என்று சொல்வதைவிட, எனக்கான இடத்தை நோக்கி இன்னும் நகர்ந்து கொண்டிருக்கிறேன் என்றுதான் சொல்வேன். என்னைப் போலவே பல பெண் படைப்பாளிகளும் தங்களுடைய எழுத்தின் வழியாகத் தங்களுக்கான இடத்தையும் அங்கீகாரத்தையும் தொடர்ந்து உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பயணமே பெண் எழுத்தின் மிக முக்கியமான சவாலும், அதே நேரத்தில் அதன் பலமும் என்று நான் நினைக்கிறேன்.

- **குடும்பப் பொறுப்புகளுக்கும் எழுத்துப் பணிக்கும் இடையே எவ்வாறு சமநிலையை ஏற்படுத்தினீர்கள்?**

இந்தக் கேள்வியை இன்னொரு விதமாகவும் அணுகலாம் என்று நினைக்கிறேன். வேலைக்குச் செல்லும் ஒரு பெண் தனது குடும்பப் பொறுப்புகளுக்கும் பணிக்கும் இடையே எவ்வாறு சமநிலையை

ஏற்படுத்துகிறாளோ, அதேபோலத்தான் எழுதும் ஒரு பெண்ணும் குடும்பத்திற்கும் தனது எழுத்துப் பணிக்கும் இடையே சமநிலையை உருவாக்குகிறாள்.

பெண்கள் வேலைக்குச் செல்வது இன்று புதிதான ஒன்றல்ல. ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பெண்களின் கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரச் சுதந்திரம் போன்றவை நமது இலக்கியங்களிலும் சமூக உரையாடல்களிலும் தொடர்ந்து பேசப்பட்டு வருகின்றன. அந்தக் காலகட்டத்தில் எழுதிய இந்துமதி, வாஸந்தி, சிவசங்கரி, லஷ்மி போன்ற பெண் எழுத்தாளர்களின் படைப்புகளிலேயே இவை பெரும் பங்கு வகித்தன. அந்தக் காலத்தில் வேலைக்குச் செல்லும் பெண்களிடம், ''வேலையையும் குடும்பத்தையும் எப்படிச் சமாளிக்கிறீர்கள்?'' என்று கேட்கப்பட்டது. பெப்சி நிறுவனத்தின் தலைமை பொறுப்பிலிருந்த இந்திரா நூயி அவர்களிடம் அன்று இந்த கேள்வி வைக்கப்பட்டது. இன்று அதே கேள்வி எழுதும் பெண்களிடம், ''குடும்பப் பொறுப்புகளுக்கும் எழுத்துக்கும் இடையில் எப்படி நேரம் ஒதுக்குகிறீர்கள்?'' என்று கேட்கப்படுகிறது. என்னைப் பொறுத்தவரை இரண்டுக்கும் பெரிய வேறுபாடு இல்லை

எழுத்தும் ஒரு முக்கியமான பணி என்பதை முதலில் நாம் உணர வேண்டும். வேலைக்குச் செல்லும் ஒரு பெண் தனது பணிக்காக நேரத்தை ஒதுக்குவதுபோல, எழுதும் பெண்ணும் தனது எழுத்துக்காக ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கிக்கொள்ள வேண்டும்.

ஆனால் இதில் ஒரு சிக்கல் இருக்கிறது. ஒரு பெண் வேலைக்குச் சென்றால்

அதற்கான வருமானம் கிடைக்கிறது என்பதால் குடும்பம் அதை எளிதாக ஏற்றுக்கொள்கிறது. ஆனால் எழுத்தைப் பொறுத்தவரை, ''இதனால் என்ன கிடைக்கிறது? வருமானம் வருகிறதா? பணம் கிடைக்கிறதா? எதுவுமே கிடைக்காதபோது குடும்பத்திற்கான நேரத்தை ஒதுக்கிவிட்டு ஏன் எழுத வேண்டும்?'' என்ற கேள்விகள் சில குடும்பங்களில் எழுகின்றன. கணவர், மாமியார், மாமனார் என்று குடும்பத்தின் பல தரப்பிலிருந்தும் இத்தகைய கேள்விகளை ஒரு பெண் எதிர்கொள்ள வேண்டியிருக்கலாம். அந்த இடத்தில்தான் குடும்பத்திற்குப் புரிதலை ஏற்படுத்துவது மிகவும் முக்கியமானதாகிறது.

பெண்ணின் எழுத்து என்பது அவளுடைய தனிப்பட்ட பொழுதுபோக்கு மட்டுமல்ல. அது சமூகத்திற்குத் தேவையான ஒரு பதிவு. ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் ஒரு பெண் எழுதிய சிறுகதையோ, நாவலோ, கட்டுரையோ அந்தக் காலத்தின் பெண்களின் வாழ்க்கை, மனநிலை, சமூகச் சூழல் ஆகியவற்றைப் பதிவு செய்யக்கூடிய காலத்தின் ஆவணமாகவும் அமையலாம். பெண் எழுத்தின் இந்த முக்கியத்துவத்தை முதலில் நாம் உணர்ந்து, பின்னர் நம்முடைய குடும்பத்தினருக்கும் புரியவைக்க வேண்டும். அதனால், ''குடும்பத்தையும் எழுத்தையும் சமாளிப்பது மிகவும் கடினம்'' என்று சொல்லி பெண்களைப் பயமுறுத்துவதைவிட, ''முயற்சி செய்யுங்கள்'' என்றுதான் நான் சொல்வேன். குடும்பத்தினருடன் தொடர்ந்து பேசுங்கள்; உங்கள் எழுத்து உங்களுக்கு ஏன் முக்கியம் என்பதைப் புரியவையுங்கள். அந்தப் புரிதல் ஒரே நாளில் வந்துவிடாது. அதை உருவாக்குவதுதான் சற்று சிரமமான பகுதி. ஆனால் தொடர்ந்து முயற்சி செய்தால் குடும்பமும் ஒரு கட்டத்தில் 'இது அவளுடைய முக்கியமான பணி' என்பதைப் புரிந்துகொள்ளத் தொடங்கும்.

என்னுடைய வாழ்க்கையிலும் அந்தப் புரிதலை உருவாக்குவதற்கான முயற்சிகளை நான் செய்திருக்கிறேன். இன்று என்னுடைய கணவர், பிள்ளை என குடும்பத்தில் அனைவரும் என்னுடைய எழுத்தைப் புரிதலோடு அணுகுகிறார்கள். எனவே குடும்பப் பொறுப்புகளுக்கும் எழுத்துப் பணிக்கும் இடையே சமநிலையை உருவாக்குவதில் நேர மேலாண்மை மட்டும் முக்கியமல்ல. எழுத்து

என்பது தனக்கான ஓர் இடம், தனக்கான ஒரு பணி, அதே நேரத்தில் சமூகத்திற்குத் தேவையான ஒரு பங்களிப்பு என்ற புரிதலைக் குடும்பத்திற்குள் உருவாக்குவதுதான் மிக முக்கியம்.

- ***உங்களுடைய எழுத்துப் பயணத்தில் இதுவரை பெற்றுள்ள முக்கியமான விருதுகள் மற்றும் பாராட்டுகள் குறித்து கூற முடியுமா? அவற்றில் உங்களுக்கு மிகவும் சிறப்பானதாகவும் மறக்க முடியாததாகவும் இருப்பது எது?***

விருதுகள் ஒரு வகையில் அங்கீகாரங்கள் என்பதை மறுப்பதற்கில்லை.

எனது இலக்கியப் பயணத்தில் திருப்பூர் சக்தி விருது (2014), கஸ்தூரி சீனிவாசன் அறநிலையம் திருமதி ரங்கம்மாள் சிறந்த நாவல் விருது – 'அறவி' நாவல் (2025), சௌமா இலக்கிய படைப்பாளுமை விருது (2021), திருப்பூர் இலக்கிய படைப்பாளுமை விருது (2021), நெருஞ்சி படைப்பாளுமை விருது (2018), அசோகமித்திரன் நினைவு இலக்கிய விருது (2019), இன்குலாப் நினைவு விருது (2023), பாரதியார் விருது (2021), சிறந்த படைப்பாளி விருது (2016, 2018, 2022, 2025) (தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கம்), பைந்தமிழ்ச் சோலை இலக்கியப் பேரவை சிறந்த புதினம் விருது - 'சம்முகம்' குறுநாவலுக்கு (2018), வல்லினச்சிறகுகள் அன்பரசு நினைவு விருது – 'மண்சட்டி' சிறுகதை தொகுப்பு (2021) போன்ற பல விருதுகளைப் பெற்றுள்ளேன்.

சமூக விருதுகளாக, பெண் சாதனையாளர் விருது (இலக்கியம்) (2016) (ஜெசீஸ் (JCI)), தமிழ் தாரகை விருது (இலக்கியம்) (2017) (சிவோகா அமைப்பு), பெண்ணியச் சிந்தனைச் சிகரம் விருது (2020) (தமிழ்நாடு நர்சரி பிரைமரி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளிகள் நலச்சங்கம்), சிங்கப்பெண்ணே 2022 விருது (2022) (கதிர் கலை அறிவியல் கல்லூரி), மிளிர் 2024 விருது (2024) (ரத்னம் கல்வி குழுமம், கோவை), சாதனை பெண்மணி 2024 விருது (2024) (ஏ ஜே கே கலை அறிவியல் கல்லூரி, கோவை) பெற்றுள்ளேன்.

இந்த விருதுகளில் எனக்கு மிகவும் நெருக்கமானவை என்று கேட்டால், முதன்முதலாக கிடைத்த திருப்பூர் சக்தி விருதையும் அண்மையில் கஸ்தூரி சீனிவாசன் அறநிலையத்திடமிருந்து, 'திருமதி ரங்கம்மாள் நாவல் விருது' என்னுடைய 'அறவி' நாவலுக்குக் கிடைத்ததையும் குறிப்பிட்டுச் சொல்லலாம். நான் எழுத்துத் துறைக்கு வருவதற்கு முன்பிருந்தே பல ஆண்டுகளாக ஓவியத்

துறையில் இயங்கி வந்திருக்கிறேன். ஒரு நவீன ஓவியராகவும் செயல்பட்டிருக்கிறேன். சித்ரகலா அகாடமி சார்பாக கஸ்தூரி சீனிவாசன் கலைக்கூடத்தில் பல ஓவியக் கண்காட்சிகளை நடத்தியிருக்கிறோம். என்னுடைய ஓவியங்களும் அதே கலைக்கூடத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றன. அன்று ஒரு ஓவியராக என்னுடைய படைப்புகள் இடம்பெற்ற அதே இடத்திலிருந்து, பல ஆண்டுகளுக்குப் பிறகு நான் தேர்ந்தெடுத்த இன்னொரு படைப்புத் துறையான இலக்கியத்தில், என்னுடைய 'அறவி' நாவல் தேர்ந்தெடுக்கப்பட்டு விருது பெறுவது எனக்கு மிகவும் நெகிழ்ச்சியான அனுபவமாக இருந்தது. ஓவியத்திலிருந்து எழுத்துக்கு வந்து, தொடர்ந்து பல நூல்களை எழுதி, இன்று ஒரு நாவலாசிரியராக அதே அமைப்பின் அங்கீகாரத்தைப் பெறுவது என்னுடைய படைப்புப் பயணத்தின் ஒரு அழகான வட்டம் நிறைவடைவதைப் போன்ற உணர்வைத் தருகிறது.

ஒரு படைப்பாளிக்கு விருது என்பது இறுதி இலக்கு அல்ல. ஆனால் சரியான தருணத்தில் கிடைக்கும் ஓர் அங்கீகாரம், ''இன்னும் எழுத வேண்டும்; இன்னும் சிறப்பாகப் படைக்க வேண்டும்'' என்ற உத்வேகத்தை நிச்சயமாகத் தருகிறது.

- **உங்கள் படைப்புகள் வாசகர்களிடையே ஏற்படுத்திய வரவேற்பும் தாக்கமும் குறித்த உங்கள் அனுபவம் என்ன?**

ஒரு படைப்பாளிக்கு வாசகர்களின் வரவேற்பு என்பது மிகவும் முக்கியமானது. நான் ஆரம்பத்தில் கவிதைகளை இணையத்திலும் குறிப்பாக முகநூல் மற்றும் வலைப்பதிவுகளில் எழுதிக் கொண்டிருந்தபோது, கவிதைக்கான வாசகர்கள் அமைந்தனர். அது அப்போதைக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தாலும், இணையத்தில் இன்று படித்த ஒன்றை நாளையே மறந்துவிடக்கூடிய சூழலும் இருக்கிறது. ஆனால் அச்சில் வெளிவரும் ஒரு நூல் காலம் கடந்தும் நிலைத்திருக்கும் ஓர் ஆவணமாக மாறுகிறது. அதனால்தான் அச்சு நூல்களுக்கு நான் எப்போதும் முக்கியத்துவம் கொடுக்கிறேன். 'மழையிடம் மௌனங்கள் இல்லை' கவிதை நூலுக்கான வாசகர்கள் அனேகம்.

வாசகர்களிடம் மிக அதிகமான தாக்கத்தையும் விவாதத்தையும் ஏற்படுத்திய படைப்பு என்று சொன்னால், என்னுடைய முதல் நாவலான 'தவ்வை'யைக் குறிப்பிடுவேன். அந்த நாவலைப் பற்றி நிறைய வாசகர்கள் எழுதியிருக்கிறார்கள்;

என்னிடம் நேரடியாகப் பல கேள்விகளையும் முன்வைத்திருக்கிறார்கள். ஒரு படைப்பு வாசிக்கப்பட்டு முடிந்த பிறகும் வாசகருக்குள் கேள்விகளை உருவாக்குகிறது என்றால், அதுவே அந்தப் படைப்பின் வெற்றி என்று நினைக்கிறேன்.

'தவ்வை'யில் வரும் உறவுகள் குறித்தும் வாசகர்கள் பல கேள்விகளை எழுப்பியிருக்கிறார்கள். நாவலில் தொண்ணூறு வயதைக் கடந்த முதிய பெண்ணாக வரும் தவ்வை நாவலின் இறுதியில் இறந்து போகாமல் இருந்தது அவருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. அவள் இறக்க வேண்டிய அவசியம் குறித்து நான் அவரிடம் கேட்டபோது, ஒரு பெண்ணுடைய வாழ்க்கை சமூகத்தின்

வழக்கமான வரையறைகளிலிருந்து மாறுபட்டதாக இருந்தால், கதையின் முடிவில் அவள் தண்டிக்கப்பட வேண்டும் அல்லது இறந்துவிட வேண்டும் தானே, அதுதானே முறை என்றார். இப்படிப்பட்ட முடிவுகளை இலக்கியத்திலும் சமூகத்திலும் நாம் தொடர்ந்து பார்த்துப் பழகியிருக்கிறோம். அந்தப் பண்பாட்டுக் கட்டமைப்பிலிருந்து வெளியே வந்து சிந்திக்க வேண்டும் என்பதற்காகத்தான் தவ்வை தொண்ணூறு வயதைக் கடந்தும் அங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறாள் என்றேன்.

திருநெல்வேலி வட்டாரத்தைப் பின்னணியாகக் கொண்ட படைப்புகளை அந்தப் பகுதியைச் சேர்ந்த வாசகர்கள் வாசிக்கும்போது, அதில் வரும் இடங்களையும் மனிதர்களையும் வாழ்க்கை முறையையும் தங்களுடைய அனுபவங்களோடு அடையாளப்படுத்திக் கொண்டு என்னிடம் பகிர்ந்திருக்கிறார்கள். தவ்வையில்

வரும் வட்டார மொழி எழுத்துமுறையை எழுத்தாளர் நாஞ்சில் நாடன் அவர்கள் பாராட்டியது மறக்கமுடியாதது.

என்னைப் பொறுத்தவரை வாசகர்களின் பாராட்டு மட்டுமே ஒரு படைப்பின் வெற்றி அல்ல. ஒரு வாசகர் படைப்போடு உரையாட வேண்டும்; கேள்வி கேட்க வேண்டும்; மறுக்க வேண்டும்; விவாதிக்க வேண்டும்; அப்படி ஒரு வாசகனைச் சிந்திக்க வைக்கும் இடத்தை என்னுடைய எழுத்து உருவாக்கும்போதுதான், என் படைப்பு அவரை உண்மையாகச் சென்றடைந்திருக்கிறது என்று நான் நினைக்கிறேன்.

- **உங்களுடைய படைப்புப் பயணத்தில் மொழிபெயர்ப்புக்கு முக்கிய இடமுள்ளது. மொழிபெயர்ப்புத் துறையில் நீங்கள் எதிர்கொண்ட அனுபவங்கள் மற்றும் சவால்கள் குறித்து கூற முடியுமா?**

  மொழிபெயர்ப்பு என்பது எனக்கு மிகவும் விருப்பமான ஒரு துறை. புனைவு, அபுனைவு இரண்டிலும் எனக்கு ஆர்வம் இருந்தாலும், மொழிபெயர்ப்பின் மீது தனிப்பட்ட ஈடுபாடு எப்போதுமே அதிகமாக இருந்திருக்கிறது

  என்னைப் பொறுத்தவரை மொழிபெயர்ப்பு என்பது ஒரு மொழியிலுள்ள சொற்களை இன்னொரு மொழிக்கு மாற்றுவது மட்டுமல்ல. அந்த மொழிக்குப் பின்னால் இருக்கும் நிலப்பரப்பு, பண்பாடு, மனிதர்கள், வாழ்க்கை முறை, வரலாறு, சமூகச் சூழல் ஆகிய அனைத்தையும் புரிந்துகொண்டுதான் மொழிபெயர்க்க வேண்டும். அதனால் வரிக்கு வரி, சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பதில் சிறந்த மொழிபெயர்ப்பாளருக்கு உடன்பாடு இருக்காது. புனைவாக இருந்தாலும் அபுனைவாக இருந்தாலும், மூலப் படைப்பின் ஆன்மாவையும் அதன் பண்பாட்டுச் சூழலையும் இலக்கு மொழிக்குக் கொண்டு வருவதுதான் மொழிபெயர்ப்பாளரின் முக்கியமான பொறுப்பு என்று நினைக்கிறேன்.

  சிறுவயதிலிருந்தே ஜிம் கார்பெட்டின் நூல்களை மிகவும் விரும்பிப் படித்திருக்கிறேன். வேட்டைக்காரராக மட்டுமல்லாமல், இயற்கை மற்றும் வனவிலங்குகள் மீது ஆழமான புரிதல் கொண்ட ஒரு சூழலியலாளராகவும் அவரது எழுத்துகள் என்னை ஈர்த்தன. அதனால் அவரது நூலைத் தமிழில்

மொழிபெயர்க்கும் வாய்ப்பு கிடைத்தபோது மிகுந்த ஆர்வத்துடன் அந்தப் பணியை மேற்கொண்டேன்.

'கோயில் புலியும் குமாவுன் ஆட்கொல்லிகளும்' என்ற முதல் மொழிபெயர்ப்பில்தான் மொழிபெயர்ப்பின் உண்மையான சவால்களை இன்னும் ஆழமாக உணர்ந்தேன். இமாலயப் பிரதேசத்தின் பறவைகள், தாவரங்கள், விலங்குகள், அங்குள்ள நிலவியல் சார்ந்த சொற்கள், வேட்டைக்குப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கிகள் மற்றும் அவற்றின் பாகங்கள் எனப் பலவற்றுக்கும் பொருத்தமான தமிழ்ச் சொற்களைக் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது. குறிப்பாக அப்பகுதிக்கு ஐரோப்பாவிலிருந்து இமாலயப் பிரதேசத்திற்கு வலசையாக வரும் பறவைகளின் பெயர்களைத் தமிழில் சரியாகக் குறிப்பிடுவது மிகுந்த தேடலைக் கோரியது. அதனால் பல சொற்களுக்கான ஆங்கிலப் பெயர்களையும் அவற்றின் பொருத்தமான தமிழாக்கங்களையும் தொகுத்து சொற்களஞ்சியமாக *(Glossary)* வழங்க வேண்டிய தேவை ஏற்பட்டது. ஒரு மொழிபெயர்ப்பாளர் வெறுமனே மொழி தெரிந்தவராக மட்டும் இருந்தால் போதாது; சில நேரங்களில் ஒரு ஆய்வாளரைப் போலவும் செயல்பட வேண்டியிருக்கிறது என்பதை அந்த அனுபவம் எனக்குக் கற்றுக்கொடுத்தது.

என்னுடைய ஆரம்பகால மொழிபெயர்ப்புப் பணிகளில் பல சந்தேகங்களும் இருந்தன. ஒரு சொல்லுக்கான விளக்கத்தை எங்கே கொடுப்பது, அடிக்குறிப்பாகத் தருவதா, நூலின் இறுதியில் சொற்களஞ்சியமாகத் தொகுப்பதா போன்ற நுணுக்கமான விஷயங்களில் மூத்த மொழிபெயர்ப்பாளர்களிடம் ஆலோசனைகளைப் பெற்றிருக்கிறேன். குறிப்பாக எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர் முனைவர் ராஜேஸ்வரி அவர்களிடமும் மொழிபெயர்ப்பாளர் கே நல்லதம்பி ஐயாவிடமும் மொழிபெயர்ப்பின் பல நுட்பங்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டேன். அவர்களிடமிருந்து கற்றுக்கொண்ட விஷயங்கள் என்னுடைய மொழிபெயர்ப்புப் பயணத்தில் மிகவும் உதவியாக இருந்திருக்கின்றன.

அதேபோல், அக்கை பத்மஷாலி எழுதிய திருநங்கைச் சமூகத்தை மையமாகக் கொண்ட 'நீண்ட பயணத்தின் சிறிய தொடக்கம்' நூலை மொழிபெயர்த்த அனுபவமும் எனக்கு மிகவும் முக்கியமானது. அந்த நூலை மொழிபெயர்க்கும்போது பாலினம், பாலியல் அடையாளம், மாற்றுப்பாலினத்தவர், திருநங்கைச் சமூகம், *LGBTQ+* அடையாளங்கள் மற்றும்

ஹிஜ்ரா பண்பாடு சார்ந்த பல சொற்களை மிகவும் கவனமாக அணுக வேண்டியிருந்தது.

அங்கே ஒரு சொல்லைத் தவறாகத் தேர்ந்தெடுப்பது வெறும் மொழிபெயர்ப்புப் பிழையாக மட்டும் இருக்காது; ஒரு சமூகத்தின் அடையாளத்தையே தவறாகப் பிரதிநிதித்துவப்படுத்திவிடக்கூடும். எனவே அந்தச் சமூகத்தினர் தங்களை எவ்வாறு அடையாளப்படுத்துகிறார்கள், எந்தச் சொற்களைப் பயன்படுத்துகிறார்கள் என்பதைத் தேடிப் படித்த பிறகே பொருத்தமான தமிழ்ச் சொற்களைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது. குறிப்பாக பாலினத்தைக் குறிக்கும் பிரதிப்பெயர்கள் உள்ளிட்ட பல இடங்களில் மிகுந்த கவனம் தேவைப்பட்டது.

இதற்கு மாறாக, என்னுடைய 'தவ்வை' நாவல் ஆங்கிலத்திற்கு மொழிபெயர்ப்பாளர்கள் ஒளிவண்ணன் மற்றும் ரெஜினா சந்திரா ஆகியோரால் மொழிபெயர்க்கப்பட்டபோது இன்னொரு விதமான சவாலைப் பார்க்க முடிந்தது. அந்த நாவல் பெருமளவில் நெல்லை வட்டார வழக்கில் எழுதப்பட்டது. வட்டார மொழியில் இருக்கும் சில சொற்களுக்கு நேரடியான ஆங்கில இணைச்சொல் இருக்காது. அப்படிப்பட்ட சொற்களை மொழிபெயர்த்துவிட்டால் அந்த மண்ணின் தனித்தன்மையே காணாமல் போய்விடும்.

உதாரணமாக, சமையலறைப் பாத்திரம் ஒன்றைக் குறிக்கும் 'போணி' போன்ற வட்டாரச் சொல்லை முழுமையாக ஆங்கிலப்படுத்தாமல், அந்தச் சொல்லை ஒலிபெயர்ப்பாகவே வைத்துவிட்டு அதன் பொருளைச் சொற்களஞ்சியத்தில் விளக்குவது போன்ற அணுகுமுறைகள் பயன்படுத்தப்பட்டன. இப்படிச் செய்வதன் மூலம் மொழிபெயர்ப்பிலும் அந்த வட்டாரத்தின் மணத்தையும் பண்பாட்டு அடையாளத்தையும் தக்கவைக்க முடிகிறது.

பெண்களின் உடல் மற்றும் உடலியல் சார்ந்த நுணுக்கமான விஷயங்களைப் பேசும் நூல்களை மொழிபெயர்க்கும்போதும் வேறுவிதமான சவால்கள் ஏற்படுகின்றன. மருத்துவம், உடலியல், பாலினம் சார்ந்த சொற்களுக்கு அறிவியல் துல்லியமும் இருக்க வேண்டும்; அதே நேரத்தில் வாசகருக்குப் புரியக்கூடிய மொழியிலும் அவை அமைய வேண்டும். அந்தச் சமநிலையை உருவாக்குவதற்கு நிறைய வாசிப்பும் தேடலும்

தேவைப்படுகிறது. தற்சமயம் அச்சுக்குச் செல்லவிருக்கும் 'பெண்ணுடலுக்கு ஒரு சாத்திரம்' நூலும் அத்தகையதே.

வெளியில் இருந்து பார்க்கும்போது இவையெல்லாம் மொழிபெயர்ப்பில் ஏற்படும் சிறிய சிக்கல்களாகத் தோன்றலாம். ஆனால் என்னைப் பொறுத்தவரை மொழிபெயர்ப்பில் 'சிறிய தவறு' என்று எதுவும் கிடையாது. இன்று நாம் தேர்ந்தெடுக்கும் ஒரு சொல் நாளை நூற்றுக்கணக்கான வாசகர்களிடம் சென்று சேரும். பின்னாளில் ஒருவர் அந்த நூலை வாசிக்கும்போது, "இந்தச் சொல்லை இப்படியா மொழிபெயர்த்திருக்கிறார்கள்?" என்ற கேள்வி எழாத அளவுக்குப் பொறுப்புடனும் துல்லியத்துடனும் செயல்பட வேண்டும்.

அதனால்தான் மொழிபெயர்ப்பை நான் வெறும் மொழிமாற்றமாகப் பார்க்கவில்லை. ஒரு மொழியின் நிலத்தையும், பண்பாட்டையும், வரலாற்றையும், மனிதர்களையும் இன்னொரு மொழியின் வாசகர்களிடம் பொறுப்புடன் கொண்டு சேர்க்கும் படைப்புச் செயலாகவே பார்க்கிறேன். அந்தத் தேடலும் சவாலும்தான் மொழிபெயர்ப்பின் மீது எனக்கு இருக்கும் ஈடுபாட்டை இன்னும் அதிகரிக்கச் செய்கிறது.

- **நீங்கள் உளவியல் ஆலோசகராகவும் செயல்பட்டு வருகிறீர்கள். உளவியல் ஆலோசனைத் துறையில் பெற்ற அனுபவங்கள் உங்கள் எழுத்திலும் கதாபாத்திரப் படைப்பிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளனவா?**

நிச்சயமாகத் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. என்னுடைய கதைகளுக்கான மனிதர்களையும் அவர்களின் மனநிலைகளையும் நான் என்னைச் சுற்றியுள்ள இந்தச் சமூகத்திலிருந்துதான் கவனிக்கிறேன். நாம் சந்திக்கும் ஒவ்வொரு மனிதரிடமும் ஏதோ ஒரு மனப்போராட்டம், அழுத்தம், ஏக்கம் அல்லது வெளியில் சொல்ல முடியாத ஒரு காயம் இருக்கலாம். அவற்றை நுட்பமாகக் கவனிப்பதற்கு என்னுடைய உளவியல் பார்வை மிகவும் உதவுகிறது.

அதே நேரத்தில் ஒரு விஷயத்தை மிகத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். உளவியல் ஆலோசனைக்காக என்னிடம் வருபவர்களின் தனிப்பட்ட அனுபவங்களை நான் என்னுடைய கதைகளுக்குப் பயன்படுத்துவதில்லை. அது என்னுடைய தொழில்முறை அறமும் அல்ல. ஆலோசனைக்காக ஒருவர்

என்னிடம் பகிர்ந்துகொள்ளும் விஷயங்களின் தனியுரிமையையும் நம்பகத்தன்மையையும் பாதுகாப்பது மிகவும் முக்கியமானது

ஆனால் உளவியல் துறையில் இருப்பதால் மனித மனதையும் உறவுகளையும் இன்னும் நுணுக்கமாகப் புரிந்துகொள்ள முடிகிறது. தாய்–மகன், தந்தை–மகள், கணவன்–மனைவி, பெற்றோர்–பிள்ளைகள் என்று ஒவ்வொரு உறவுக்குள்ளும் வெளியில் தெரியாத பல அடுக்குகள் இருக்கின்றன. அன்பு இருக்கும் இடத்திலேயே இடைவெளியும் இருக்கலாம்; நெருக்கம் இருக்கும் இடத்திலேயே முரண்பாடும் இருக்கலாம். சில உறவுகளில் சொல்லப்படாத கோபம், ஏக்கம், குற்றவுணர்வு, நிராகரிப்பு போன்றவையும் இருக்கலாம். இந்த நுண்ணிய மனநிலைகள்தான் என்னுடைய பல சிறுகதைகளின் அடிப்படையாக அமைந்திருக்கின்றன.

என்னுடைய படைப்புகளைப் பற்றி எழுத்தாளர் சவீதா பேசும்போதுகூட இந்த உளவியல் கூறுகளைச் சுட்டிக்காட்டியிருக்கிறார். குறிப்பாக என்னுடைய சில கதைகளில் உறவுகளுக்கிடையே உருவாகும் சிறிய இடைவெளிகள், மனமுறிவுகள், முரண்பாடுகள் போன்றவை எவ்வாறு உளவியல் நுட்பத்துடன் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன என்பதை அவர் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார்.

என்னைப் பொறுத்தவரை உறவுகளை நல்ல உறவு, மோசமான உறவு என்று இரண்டு முனைகளில் மட்டும் பார்க்க முடியாது. உதாரணமாக ஓர் ஆண்–பெண் உறவில் ஒரு குறிப்பிட்ட மனச்சிக்கல் உருவாகும்போது, அது அந்த உறவை

முற்றிலுமாகப் பிரிவை நோக்கிக் கொண்டுசெல்கிறதா? அல்லது அந்தச் சிக்கலைக் கடந்தும் அந்த உறவு வேறொரு புரிதலுடன் தொடர்ந்து பயணிக்கிறதா? என்பதைப் புரிந்துகொள்வதில் உளவியல் பார்வை மிகவும் முக்கியமானது. அந்தப் பார்வை கதாபாத்திரங்களை உருவாக்கும்போதும் எனக்கு உதவுகிறது. ஒரு கதாபாத்திரம் என்ன செய்கிறது என்பதைவிட, அது ஏன் அப்படிச் செய்கிறது என்பதுதான் எனக்கு முக்கியம். அதன் செயலுக்குப் பின்னால் இருக்கும் மனநிலை, கடந்தகால அனுபவம், உறவுச் சிக்கல்கள் போன்றவற்றைப் புரிந்துகொள்ள முயல்கிறேன்.

அதனால்தான் சில நேரங்களில் என்னுடைய கதைகளை வாசித்தவர்கள், ''இது எனக்கும் நடந்திருக்கிறது'', ''நானும் இப்படித்தான் உணர்ந்திருக்கிறேன்'' என்று சொல்கிறார்கள். எல்லா உணர்வுகளையும் எல்லோராலும் வெளிப்படையாகப் பேசிவிட முடியாது. பலர் தங்களுடைய வலிகளையும் ஏக்கங்களையும் மனதுக்குள்ளேயே வைத்துக்கொண்டு வாழ்கிறார்கள். அவர்கள் சொல்ல முடியாத அல்லது சொல்லவியலாத ஒன்றை ஒரு படைப்பாளி தனது கதாபாத்திரத்தின் வழியாகச் சொல்லும்போது, அந்த வாசகர் அந்தக் கதாபாத்திரத்தில் தன்னையே பார்க்கிறார். அந்த இடத்தில்தான் உளவியலும் இலக்கியமும் ஒன்றோடொன்று மிக அழகாக இணைகின்றன என்று நான் நினைக்கிறேன்.

எனவே உளவியல் ஆலோசனைத் துறை என்னுடைய கதைகளுக்கான சம்பவங்களைத் தருகிறது என்று சொல்வதைவிட, மனிதர்களையும் அவர்களுடைய உறவுகளையும் உணர்வுகளையும் இன்னும் ஆழமாகவும் நுட்பமாகவும் பார்க்கக்கூடிய ஒரு பார்வையை எனக்குக் கொடுத்திருக்கிறது என்று சொல்வதே சரியாக இருக்கும். அந்தப் பார்வையின் தாக்கம் என்னுடைய சிறுகதைகளிலும் நாவல்களிலும் கதாபாத்திர உருவாக்கத்திலும் நிச்சயமாக இருக்கிறது.

- ***கல்லூரி மாணவர்களைச் சந்தித்து அவர்களுடன் தொடர்ந்து உரையாடி வருகிறீர்கள். இன்றைய மாணவர்கள் எதிர்கொள்ளும் முக்கியமான பிரச்சினைகள் என்ன? அவர்களுடன் உரையாடிய அனுபவத்தில் நீங்கள் பகிர விரும்பும் கருத்துகள் என்ன?***

இன்றைய மாணவர் சமூகம் மிகவும் புத்திசாலித்தனமான தலைமுறை என்று நான் நினைக்கிறேன். அவர்களிடம் தகவல்களைப் புரிந்துகொள்ளும் திறனும், புதிய விஷயங்களை மிக வேகமாகக் கற்றுக்கொள்ளும் ஆற்றலும் அதிகமாக இருக்கிறது. அதே நேரத்தில், அவர்களுக்கு அதிகமான கவனமும் வழிகாட்டுதலும் தேவைப்படுவதாகவும் நான் உணர்கிறேன்.

குறிப்பாக அவர்களிடம் நான் கவனிக்கும் ஒரு விஷயம் கவனத்தைத் தொடர்ந்து ஒரே இடத்தில் வைத்திருப்பதில் இருக்கும் சிரமம். ஒருவர் பேசும்போதோ, வகுப்பு எடுக்கும்போதோ முதல் சில நொடிகளுக்குள் அவர்களின் கவனத்தை ஈர்த்துவிட்டால் தொடர்ந்து நம்மைக் கவனிப்பார்கள். இல்லையென்றால் மிக விரைவாக அவர்களுடைய கவனம் வேறொரு திசைக்குச் சென்றுவிடுகிறது. பொறுமையும் தொடர்ச்சியான கவனமும் சற்றுக் குறைந்துவருவதைப் பார்க்க முடிகிறது.

இன்றைய மாணவர்களுக்கு பல்வேறு மன அழுத்தங்கள் இருக்கின்றன. நட்பு, காதல், நட்பா உறவா என்ற குழப்பம், படிப்பை முடித்ததும் மேற்படிப்பைத் தொடர்வதா அல்லது வேலைக்குச் செல்வதா என்ற கேள்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரம் மற்றும் எதிர்காலம் குறித்த அச்சம், திருமணம் குறித்த குடும்பத்தின் எதிர்பார்ப்புகள், பெற்றோருடனான கருத்து வேறுபாடுகள் எனப் பல விஷயங்கள் அவர்களுக்குள் மனஅழுத்தத்தை உருவாக்குகின்றன.

இப்படிப்பட்ட மனஅழுத்தங்களிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ள அவர்களுக்கு ஏதாவது ஒரு படைப்புச் செயல்பாடு இருக்க வேண்டும் என்பதை நான் தொடர்ந்து வலியுறுத்துகிறேன். ஓவியம், இசை, இலக்கியம் என்று அது எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். ஓவியம் என்றால் முறையாகப் பயின்று ஒரு மரபான ஓவியத்தைத்தான் வரைய வேண்டும் என்பதில்லை. மனதில் என்ன தோன்றுகிறதோ அதை வண்ணங்களாக வெளிப்படுத்தலாம். அந்த ஓவியத்தில் அவர்களுடைய அப்போதைய மனநிலையின் பிரதிபலிப்பு இருக்கலாம்.

அதேபோல் மாணவர்களிடம் எழுதுவதையும் வலியுறுத்துவேன். கல்லூரிக் காலத்தில் கவிதைகள், கதைகள் என்று எழுதுபவர்கள், கல்லூரியை விட்டு வெளியேறிய பிறகு ஓரிரு ஆண்டுகள் தொடர்ந்துவிட்டு, வேலை, திருமணம், குடும்பம், குழந்தைகள் என்று வாழ்க்கையின் அடுத்தடுத்த கட்டங்களுக்குள்

செல்லும்போது அந்தப் படைப்புப் பழக்கத்தை நிறுத்திவிடுகிறார்கள். அவர்களிடம் நான் தொடர்ந்து சொல்வது ஒன்றுதான்: உங்களுடைய படைப்புத்திறனை விட்டுவிடாதீர்கள். உங்களுடைய வேலை என்பது மிக முக்கியமான ஒன்றாக இருக்கலாம். ஆனால் எழுத்தோ, ஓவியமோ, இசையோ வாழ்க்கையின் அழுத்தங்களுக்கு மிகப்பெரிய மனவிடுதலையைத் தரக்கூடியதாக அமையும் என்பதே என் கருத்து.

இவற்றில் குறிப்பாக எழுத்தை நான் அதிகமாகப் பரிந்துரைக்கிறேன். ஏனென்றால் மனதிற்குள் தேங்கியிருக்கும் விஷயங்களை வார்த்தைகளாக எழுதும்போது ஒரு வகையான விடுதலை கிடைக்கிறது. அது கவிதையாகவோ, கதையாகவோ, நாட்குறிப்பாகவோ அல்லது நமக்காக மட்டுமே எழுதப்பட்ட சில வரிகளாகவோ இருக்கலாம். நாம் எழுதும் அனைத்தையும் புத்தகமாக வெளியிட வேண்டும் என்பதோ, சமூக ஊடகங்களில் பகிர வேண்டும் என்பதோ அவசியமில்லை. நம்முடைய கோபம், ஏமாற்றம், மனஅழுத்தம், மகிழ்ச்சி, காதல், கொண்டாட்டம் என மனதிற்குள் இருக்கும் எதையும் எழுதுவதன் மூலம் வெளிப்படுத்த முடியும். எனவே இன்றைய மாணவர்களுக்கு நான் சொல்ல விரும்புவது, ''உங்கள் படிப்பு மற்றும் தொழிலோடு சேர்த்து உங்களுக்கான ஒரு படைப்புலகத்தையும் உருவாக்கிக்கொள்ளுங்கள்'' என்பதுதான்.

- **இளம் தலைமுறை பெண் எழுத்தாளர்களுக்கு நீங்கள் வழங்க விரும்பும் அறிவுரை என்ன? இலக்கியத்தில் தங்களுக்கான தனித்துவமான குரலை அவர்கள் எவ்வாறு உருவாக்கிக் கொள்ள வேண்டும்?**

இன்றைய இளம் தலைமுறை பெண் எழுத்தாளர்களை நான் மிகவும் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். குறிப்பாக இப்போது நிறையப் பெண்கள் கவிதைகளைத் தாண்டி சிறுகதைகள் எழுதுவதற்கு முன்வருகிறார்கள். அது மிகவும் பாராட்டப்பட வேண்டிய மாற்றம் என்று நினைக்கிறேன். எங்களுடைய காலத்தில் பலரும் கவிதையிலிருந்து எழுதத் தொடங்கி, சிறுகதையை நோக்கி நகர்வதற்கே இரண்டு, மூன்று ஆண்டுகள் எடுத்துக்கொண்டோம். ஆனால் இன்றைய இளம் பெண்கள் நேரடியாகச் சிறுகதைகளை எழுதத் தொடங்குவதைப் பார்க்கும்போது மகிழ்ச்சியாக இருக்கிறது.

ஒரு காலத்தில், ஒரு பெண்ணுக்குக் கிடைக்கும் குறைந்த நேரத்திற்குள் கவிதைதான் எழுத முடியும்; நான்கு அல்லது ஐந்து வரிகள், அதிகபட்சமாகப் பத்து வரிகள் எழுதிவிட்டு குடும்பப் பொறுப்புகளுக்குத் திரும்பிவிட வேண்டும் என்பது போன்ற ஒரு பொதுவான எண்ணம் இருந்தது. ஆனால் இன்று பெண்கள் அதைத் தாண்டி, இரண்டு மூன்று பக்கங்களோ அதற்கும் மேலாகவோ கதைகளை எழுதுகிறார்கள் என்றால், அவர்கள் தங்களுடைய எழுத்துக்கென நேரத்தை உருவாக்கிக் கொள்கிறார்கள் என்று பொருள். அதை நாம் வரவேற்க வேண்டும்.

அதே நேரத்தில், இலக்கியத்தில் தனக்கான இடத்தை உருவாக்கிக்கொள்வது எளிதானதல்ல. யாரும் யாருக்கும் இலக்கியத்தில் ராஜபாட்டை அமைத்துக் கொடுக்க முடியாது. அதற்கு குறுக்குவழியும் கிடையாது. இன்று நாம் மதிக்கும் பல படைப்பாளிகளும் அவமானங்கள், நிராகரிப்புகள், வாய்ப்புகள் கிடைக்காமல் போன தருணங்கள் எனப் பலவற்றைக் கடந்துதான் தங்களுக்கான இடத்தை உருவாக்கியிருக்கிறார்கள்.

பெண் எழுத்தாளர்களுக்கும் இதுபோன்ற அனுபவங்கள் வரலாம். தங்களுடைய திறமையும் எழுத்தும் சரியாகக் கவனிக்கப்படவில்லை என்ற எண்ணம் ஏற்படலாம். அந்தத் தருணங்களில் எழுத்தின் மீதான பிடிப்பை விட்டுவிடுவது மிகவும் எளிது. ஆனால் எது நடந்தாலும் தொடர்ந்து எழுதுவதும், அதைவிட முக்கியமாகத் தொடர்ந்து வாசிப்பதும்தான் அவசியம். இளம் படைப்பாளிகளிடம் நான் குறிப்பாக வலியுறுத்த விரும்புவது வாசிப்பு. நாம் ஒரு கவிதையோ கதையோ எழுதும்போது, "இந்தச் சிந்தனை எனக்குத் தோன்றியிருக்கிறது; இதை நான் ஏன் எழுதக்கூடாது?" என்று நினைக்கலாம். நிச்சயமாக எழுதலாம். ஆனால் அதே சிந்தனை ஏற்கனவே இலக்கியத்தில் எத்தனை விதமாக எழுதப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமல்லவா? அது தெரிந்தால்தான், "இதே விஷயத்தை நான் இன்னொரு பார்வையில் பார்க்க முடியுமா? வேறொரு வடிவத்தில் சொல்ல முடியுமா?" என்ற அடுத்தகட்டச் சிந்தனை உருவாகும். அதற்குத்தான் பரந்த வாசிப்பு தேவைப்படுகிறது. மூத்த படைப்பாளிகளை மட்டுமல்ல; சமகால எழுத்தாளர்களையும் இளம் படைப்பாளிகளையும் வாசிக்க வேண்டும். நமக்கு முன்னால் என்ன எழுதப்பட்டிருக்கிறது, சமகாலத்தில் என்ன எழுதப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை அறிந்தால்தான் நம்முடைய எழுத்து எங்கே நிற்கிறது என்பதையும் புரிந்துகொள்ள முடியும்.

அதேபோல் பெண்களின் எழுத்து குறிப்பிட்ட சில கருப்பொருள்களுக்குள் மட்டுமே சுழன்றுகொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. குடும்பம், அப்பா, அம்மா, காதல், திருமணம், மாதவிலக்கு போன்றவை பெண்களின் வாழ்க்கையில் முக்கியமானவைதான். அவற்றை எழுதக்கூடாது என்று நான் சொல்லவில்லை. ஆனால் பெண்ணின் உலகம் அதோடு முடிந்துவிடுவதில்லை. சமூகம், அரசியல், அறிவியல், சூழலியல், தொழில்நுட்பம், பயணம், வரலாறு என்று அவள் பேசுவதற்கும் எழுதுவதற்கும் மிகப் பெரிய உலகம் இருக்கிறது. அந்த எல்லைகளைத் தாண்டி எழுத முயற்சி செய்ய வேண்டும்.

அதுபோல, முதல் நூல் வெளிவந்தவுடனேயே பெரிய வரவேற்பு கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கக்கூடாது. முதல் நூல் வெளிவந்ததும் ''என்னை ஏன் யாரும் கவனிக்கவில்லை?'' என்ற ஏமாற்றம் ஏற்படலாம். ஆனால் ஒரு படைப்பாளியின் எழுத்து எப்படிப்பட்டது என்பதை வாசகர்கள் புரிந்துகொள்வதற்கே காலம் தேவைப்படுகிறது. மூன்று, நான்கு நூல்கள் வெளிவந்த பிறகுதான் ''இவருடைய எழுத்தின் தன்மை இதுதான்; இவருடைய குரல் இதுதான்'' என்று வாசகர்கள் அடையாளம் காணத் தொடங்குவார்கள். அதனால் உடனடி அங்கீகாரத்தைவிட, நம்முடைய எழுத்து யாரைச் சென்றடைகிறது என்பதுதான் முக்கியம்.

அதேபோல் ஒரு குறிப்பிட்ட இலக்கியக் குழுவுக்குள் மட்டுமே தொடர்ந்து எழுதிக்கொண்டிருப்பதிலும் ஒரு சிக்கல் இருக்கலாம். ஆரம்பத்தில் அந்தக் குழு நமக்கு ஊக்கத்தையும் அடையாளத்தையும் கொடுக்கலாம். ஆனால் ஒரு கட்டத்தில் நம்முடைய எழுத்து மாறும். இரண்டு மூன்று நூல்களுக்குப் பிறகு புதிய வடிவங்களில் எழுத வேண்டும், நவீனமான கதைக்களங்களை முயற்சி செய்ய வேண்டும் என்ற எண்ணம் வரலாம். அப்போது அந்தக் குழுவின் எதிர்பார்ப்புகள் நம்முடைய எழுத்தின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தக்கூடாது. குழுவின் அடையாளத்தைவிட படைப்பாளியின் தனித்துவமான அடையாளம் முக்கியம். ஒரு கட்டத்தில் அந்த எல்லைகளிலிருந்து வெளியே வந்து பொதுவான இலக்கியத் தளத்தில் நின்று எழுதுவதற்கான துணிச்சல் வேண்டும்.

என்னுடைய எழுத்துப் பயணத்திலும் நான் எந்த ஒரு குழுவையும் முழுமையாகச் சார்ந்திருக்க வேண்டும் என்று நினைத்ததில்லை. ''என்னுடைய எழுத்து சேர வேண்டிய இடத்திற்குச் சென்றடையும்; அதை வாசிக்க

வேண்டியவர்கள் வாசிப்பார்கள்; அவர்களே எனக்கான வாசகர்களாக உருவாவார்கள்'' என்ற நம்பிக்கையுடன்தான் தொடர்ந்து எழுதியிருக்கிறேன்.

எனவே இளம் பெண் படைப்பாளிகளுக்கு நான் சொல்ல விரும்புவது ஒன்றுதான்:

நிறைய வாசியுங்கள். தொடர்ந்து எழுதுங்கள். நிராகரிப்புகளால் சோர்ந்துவிடாதீர்கள். உடனடி அங்கீகாரத்தை எதிர்பார்க்காதீர்கள். எந்தக் குழுவின் அடையாளத்திற்குள்ளும் உங்களைச் சுருக்கிக்கொள்ளாதீர்கள். மற்றவர்களின் குரலைப் பின்பற்றாமல், தொடர்ந்து எழுதுவதன் வழியாக உங்களுக்கான குரலை நீங்களே கண்டடையுங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, உங்கள் எழுத்தின் மீது நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கைதான் உங்களுடைய தனித்துவமான குரலை உருவாக்கவும், அந்தக் குரலை இலக்கியத்தில் நிலைநிறுத்தவும் உதவும்.

- **இனி வெளிவரவிருக்கும் உங்கள் படைப்புகள் மற்றும் நீங்கள் மேற்கொண்டு வரும் இலக்கியம், மொழிபெயர்ப்பு, உளவியல் சார்ந்த பணிகள் குறித்து வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புவது என்ன?**

என்னுடைய உளவியல் சார்ந்த பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன. குறிப்பாக கோவிட் காலகட்டத்தில் உளவியல் ஆலோசகராக அதிகமான பணிகளை மேற்கொண்டேன். அந்தக் காலத்தில் மனஅழுத்தம், தனிமை, அச்சம் போன்ற பல்வேறு பிரச்சினைகளுடன் இருந்தவர்களுடன் பணியாற்றுவதற்கான வாய்ப்பு கிடைத்தது. அதற்குப் பிறகும் தனிப்பட்ட முறையில் மனநல ஆலோசனை *(Psychological Counselling)* வழங்குவதைத் தொடர்ந்து செய்து வருகிறேன்.

இலக்கியப் படைப்புகளைப் பொறுத்தவரை, தற்போது ஒரு புதிய நாவல் நிறைவடையும் தருவாயில் இருக்கிறது. 'பெண்ணுடலுக்கு ஒரு சாத்திரம்' என்ற மொழிபெயர்ப்பு நூல் காலச்சுவடு பதிப்பகத்தின் வழியாக 2027 சென்னை புத்தகக் காட்சியை முன்னிட்டு வெளிவர இருக்கிறது. இதைத் தவிர மேலும் இரண்டு மொழிபெயர்ப்புப் பணிகளையும் மேற்கொண்டு வருகிறேன். அதேபோல் உளவியல் சார்ந்த ஒரு நூலையும் தற்போது எழுதிக்கொண்டிருக்கிறேன். அது நிறைவடைந்ததும் வெளியிடத் திட்டமிட்டிருக்கிறேன். பயண இலக்கியத்தில்

அடுத்ததாக ஸ்காட்லாந்து பயண அனுபவங்களை மையமாகக் கொண்ட மற்றொரு நூலும் வெளிவர உள்ளது.

இவற்றோடு சமகாலத் தமிழ்ச் சிறுகதைகள் குறித்த ஆய்வுக் கட்டுரை நூல் ஒன்றும் எழுத்தில் இருக்கிறது. இரண்டாயிரத்துப் பிறகான ஆண்டுகளில் வெளிவந்த பெரும்பாலான சிறுகதைத் தொகுப்புகளை வாசித்து, அவற்றின் கருப்பொருள்கள், அணுகுமுறைகள் மற்றும் சமகாலச் சிறுகதைகளில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களை ஒருங்கிணைத்துப் பதிவு செய்யும் முயற்சி அது. இந்தப் பணி வாசிப்பை அதிகம் கோருவதால் சற்று அதிகமான நேரத்தை எடுத்துக்கொள்கிறது. அதனால் சிறிது காலதாமதம் ஏற்பட்டாலும், அதையும் ஒரு முக்கியமான ஆய்வு நூலாகக் கொண்டுவர வேண்டும் என்ற எண்ணத்தில் தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறேன்.

இப்படி நாவல், மொழிபெயர்ப்பு, உளவியல், பயண இலக்கியம், ஆய்வு எனப் பல தளங்களில் தொடர்ந்து என்னால் இயங்க முடிவதற்கு அடிப்படையான காரணம் ஒன்றுதான் — வாசிப்பின் மீது எனக்கிருக்கும் மிகப்பெரிய ஈடுபாடு.

தொடர்ந்து வாசிக்கும்போதுதான் இலக்கியத்தின் மீதான ரசனையும் ஈடுபாடும் விரிவடைகின்றன. புதிய கருத்தாக்கங்களை நோக்கி நகர முடிகிறது. குறிப்பாக இன்றைய நவீன இலக்கியம் எந்தத் திசையை நோக்கிச் செல்கிறது என்பதைப் புரிந்துகொள்ள வாசிப்பு மிகவும் அவசியம். அந்தப் புரிதல்தான் நம்முடைய எழுத்தையும் காலத்திற்கேற்ப மாற்றவும் செம்மைப்படுத்தவும் உதவுகிறது என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

எனவே வாசகர்களுக்கும், குறிப்பாக எழுத விரும்புகிறவர்களுக்கும் இறுதியாக நான் சொல்ல விரும்புவது மிகவும் எளிமையான ஒன்றுதான். எழுதிக்கொண்டே இருங்கள்; அதைவிட முக்கியமாக, வாசித்துக்கொண்டே இருங்கள். நல்ல வாசிப்புதான் நல்ல எழுத்தின் அடிப்படை!

நன்றியும் அன்பும்!

பேட்டி எடுத்தவர்: மேனகா நரேஷ்

பேரன்பின் தீராவேட்கை

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர், இலங்கை

திடீர் ஞாபகங்கொள்ளலும்,
திடீர் அழைப்பெடுத்தலும்—
பேரன்பன்றி வேறென்ன?

காரணமில்லாமல் நினைவுக்கு வருபவர்களே,
மனதின் மிக ஆழத்தில் குடியிருப்பவர்கள்
ஆன்மத்தில் அங்கீகரிக்கப்பட்டவர்கள்

எந்தக் காரணமுமின்றி
ஒருவரை நினைத்துக்கொள்வதும்,
எந்தத் தேவையுமின்றி
அவரின் குரலைத் தேடுவதும்—

மனதுக்குள்
மறைத்துவைத்திருக்கும்
ஒரு நேசத்தூறலின் நாமம்
மீண்டும் மீண்டும்
விழித்துக்கொள்வதுதானே...
சிலிர்த்து ஈரம் கசிவதுதானே..

தொலைவில் இருந்தாலும்
தொட்டுவிடும் அளவுக்கு
நெருக்கமாக இருப்பது—
பேரன்பன்றி வேறென்ன?

அழைக்கத் தோன்றும்
அந்த ஒரு கணத்தில்,
எல்லையற்று
நீண்டு கொண்டே போகிறது.....
பேரன்பின் தீராவேட்கை!!

சங்ககாலத் தமிழர்களின் மரபணு – வரலாற்றைத் தேடும் புதிய ஆய்வு

அ. திவ்யகுமாரி கண்ணம்மா DIAE
ஐயை உலக மகளிர் மன்றம்.

கீழடி–கொந்தகை, ஆதிச்சநல்லூர், சிவகளை ஆகிய தொல்லியல் தளங்களில் கிடைத்த மனித எச்சங்களின் DNA ஆய்வு புதிய தகவல்களை வெளிக்கொண்டு வருகிறது.

சங்ககாலத் தமிழகத்தின் வரலாற்றை அறிய இதுவரை தொல்லியல் பொருட்கள், கல்வெட்டுகள், இலக்கியங்கள் எனப் பல்வேறு ஆதாரங்கள் பயன்படுத்தப்பட்டு வந்த நிலையில், தற்போது அவற்றுடன் பண்டைய DNA ஆய்வும் இணைந்துள்ளது.

மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் மரபியல் துறையில் செயல்படும் Ancient DNA ஆய்வகத்தில், தமிழகத்தின் பல்வேறு தொல்லியல் அகழாய்வுகளில் கிடைத்த மனித எச்சங்கள் உள்ளிட்ட உயிரியல் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. இந்த ஆய்வகத்தின் நோக்கமே பண்டைய DNA மற்றும் பிற உயிரியல் தரவுகளைப் பயன்படுத்தி தமிழகத்தின் தொன்மையான மக்கள்தொகை, வேளாண்மை, உணவுப் பழக்கம், விலங்குகள் மற்றும் தாவரங்களின் வரலாறு உள்ளிட்ட பல்வேறு அம்சங்களை அறிவியல் ரீதியாக ஆராய்வதாகும்.

தற்போது வெளியாகியுள்ள தகவல்களின்படி, கீழடி தொல்லியல் தொகுதியுடன் தொடர்புடைய கொந்தகை புதைமேடு, ஆதிச்சநல்லூர் மற்றும் சிவகளை ஆகிய இடங்களில் இருந்து கிடைத்த மனித எச்சங்களின் DNA மாதிரிகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இந்த ஆய்வில், கொந்தகை மாதிரிகளில் இருந்து 75,000-க்கும் மேற்பட்ட மரபணுக் குறியீடுகள் (genetic markers) செயலாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல், ஆதிச்சநல்லூர் மாதிரிகளில் சுமார் 9,000 markers-ம், சிவகளை மாதிரிகளில் சுமார் 6,000 markers-ம் பெறப்பட்டுள்ளதாக மதுரை காமராஜர் பல்கலைக்கழக மரபியல் துறைத் தலைவர் பேராசிரியர் ஜி. குமரேசன் தெரிவித்ததாக வெளியாகியுள்ள செய்திகளில் கூறப்பட்டுள்ளது.

இந்த ஆரம்பகட்ட மரபணுத் தரவுகள், தென்னிந்தியர்கள், இலங்கை மக்கள் மற்றும் பரந்த தெற்காசிய மக்கள்தொகைகளுடன் மரபணு நெருக்கம் காணப்படுவதாக சுட்டிக்காட்டுகின்றன. இந்த முடிவுகள் உலகின் மிகப்பெரிய மனித மரபணு மாறுபாட்டுத் தரவுத்தொகுப்புகளில் ஒன்றான 1000 Genomes Project தரவுகளுடன் ஒப்பிடப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, இது இன்னும் முழுமையாக வெளியிடப்பட்ட இறுதி ஆய்வு முடிவு அல்ல என்பதுதான். ஆய்வுக் குழு மேலும் பல கட்ட பகுப்பாய்வுகளை மேற்கொண்ட பின்னரே முழுமையான தரவுத்தொகுப்பு வெளியிடப்படும் என்று கூறியுள்ளது. எனவே, தற்போதைய தகவல்களை ஆரம்பகட்ட ஆய்வு முடிவுகள் என்ற நிலையிலேயே அணுகுவது அறிவியல் ரீதியாகப் பொருத்தமானது.

2025ஆம் ஆண்டில் சுமார் 4,000 முதல் 5,000 குறியன்கள் (markers) வரை செயலாக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது கொந்தகை மாதிரிகளில் சுமார் 75,000 குறியன்கள் (markers) வரை பெறப்பட்டிருப்பது இந்த ஆய்வின் தொழில்நுட்ப முன்னேற்றத்தை எடுத்துக்காட்டுகிறது.

இந்தத் தரவுகள் வெளியானால், பண்டையத் தமிழகத்தில் வாழ்ந்த மக்களின் மரபணு அமைப்பு, அவர்களுக்கும் இன்றைய தென்னிந்திய

மக்களுக்கும் இடையிலான மரபணுத் தொடர்புகள், மேலும் தெற்காசியாவின் பிற மக்கள்தொகைகளுடனான தொடர்புகள் பற்றிய கேள்விகளை ஆராய்வதற்கு உதவும் முக்கியத் தரவுகள் கிடைக்கக்கூடும்.

கீழடி மட்டுமல்ல; கொந்தகையும் முக்கியம்:

சங்ககாலத் தமிழகத்தைப் பற்றிய ஆய்வுகளில் கீழடி ஏற்கெனவே முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. கீழடி அகழாய்வுகளில் செங்கல் கட்டுமானங்கள், வடிகால் அமைப்புகள், தொழில்சார் செயல்பாடுகளுக்கான சான்றுகள் மற்றும் தமிழ்-பிராமி எழுத்துப் பொறிப்புகள் உள்ளிட்ட பல்வேறு தொல்லியல் ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

ஆனால் கீழடிக்கு அருகிலுள்ள கொந்தகை புதைமேடு, அங்கு வாழ்ந்த மக்களின் மனித எச்சங்களை ஆய்வு செய்வதற்கான வாய்ப்பை வழங்குகிறது. இதன் காரணமாகவே கொந்தகை மாதிரிகளின் *DNA* ஆய்வு முக்கியத்துவம் பெறுகிறது.

மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் பண்டைய மரபணுத் *(Ancient DNA)* திட்டம், கொந்தகை மட்டுமின்றி சிவகளை, ஆதிச்சநல்லூர், கொடுமணல், மயிலாடும்பாறை உள்ளிட்ட பல தொல்லியல் தளங்களில் இருந்து கிடைத்த உயிரியல் மாதிரிகளை ஆய்வு செய்வதற்காக உருவாக்கப்பட்டது. உலகளாவிய மரபணுத் தரவுகளுடன் பண்டைய *DNA*-வை ஒப்பிட்டு, மக்கள்தொகை நகர்வு மற்றும் தொடர்புகளைப் புரிந்துகொள்வதும் இந்தத் திட்டத்தின் நோக்கங்களில் ஒன்றாகும். தமிழர்கள் முக அமைப்பை மீட்டெடுக்கும் முயற்சிகளும் நடைபெறுகின்றன.

கொந்தகையில் கிடைத்த மனித எச்சங்கள் தொடர்பான ஆய்வுகள் *DNA*-வுடன் மட்டும் நின்றுவிடவில்லை. அங்குப் புதைக்கப்பட்டிருந்த பண்டைய மனிதர்களின் எலும்புக்கூடுகளை அடிப்படையாகக் கொண்டு அவர்களின் முக அமைப்பை மறுகட்டமைக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதனால், ஒருபுறம் *DNA*, மறுபுறம் எலும்பியல் மற்றும் முக மறுகட்டமைப்பு என வெவ்வேறு அறிவியல் முறைகள் மூலம் பண்டைய தமிழக மக்களைப் புரிந்துகொள்ளும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

சங்ககால மக்களின் உணவு:

மரபணு ஆய்வுகளின் மற்றொரு முக்கியமான நோக்கம், அக்கால மக்களின் உணவு மற்றும் வேளாண்மையைப் புரிந்துகொள்வதாகும்.

மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் ஆய்வுகளில் தொல்லியல் பொருட்களில் காணப்படும் புரதங்கள், கொழுப்புச் சத்துகள் மற்றும் பிற

உயிர்வேதியியல் தடயங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. குறிப்பாக பண்டைய மண்பாண்டங்களில் கண்டறியப்பட்ட *cholesterol* சார்ந்த தடயங்கள், இறைச்சி உணவு உண்டதற்கான சான்றுகளாக ஆய்வுகளில் எடுத்துக்கொள்ளப்பட்டன.

பண்டையத் தமிழகத்தில் பல்வேறு வகையான நெல் மற்றும் திணை *(foxtail millet)* போன்ற சிறுதானியங்கள் பயன்படுத்தப்பட்டதையும் ஆய்வுகள் ஆராய்கின்றன.

ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் பிற தொல்லியல் மாதிரிகளில் இருந்து கிடைக்கும் கரிம மூலக்கூறுகள் மூலம், அக்கால உணவுகளில் அரிசி, நெய், பருப்பு வகைகள், கீரைகள், பால், வெள்ளரிக்காய், நிலக்கடலை மற்றும் தேங்காய் போன்ற உணவுப் பொருட்கள் இடம்பெற்றதற்கான ஆதாரங்கள் உள்ளன. இந்த அறிவியல் தரவுகள் தனியாகப் பார்க்கப்படுவதில்லை. அவை சங்க இலக்கியங்களில் காணப்படும் உணவு மற்றும் வாழ்வியல் குறிப்புகளுடனும் ஒப்பிடப்படுகின்றன.

குறுந்தொகை, புறநானூறு, அகநானூறு, பொருநராற்றுப்படை போன்ற இலக்கியங்களில் காணப்படும் குறிப்புகள், தொல்லியல் மற்றும் ஆய்வகத் தரவுகளுடன் ஒப்பிட்டு ஆராயப்படுகின்றன.

இதன் மூலம் இலக்கியத்தில் பதிவாகியுள்ள வாழ்வியல் தகவல்களையும், தொல்லியல் பொருட்களில் கிடைக்கும் அறிவியல் தடயங்களையும் ஒன்றுடன் ஒன்று ஒப்பிட்டுப் பார்க்க முடிகிறது.

அடுத்த கட்டம் — முழுமையான ஆய்வு முடிவுகள்:

மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் மரபியல் துறை, பண்டைய தமிழகத்தின் மரபணு வரலாறு மட்டுமின்றி, வேளாண்மை, உணவுப் பழக்கம், நெசவு மற்றும் சங்ககால நாகரிகத்தின் பிற அம்சங்கள் தொடர்பாகவும் பல ஆய்வுகளைத் தயாரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொத்தம் ஒன்பது ஆய்வுக் கட்டுரைகள் தயாராகி வருவதாகவும், அவற்றை சர்வதேச உயர் *(peer-reviewed)* ஆய்விதழ்களில் வெளியிடுவதற்கான பணிகள் நடைபெறுகின்றன. இதனால், தற்போது வெளியாகியுள்ள *75,000*-க்கும் மேற்பட்ட

மரபணுக் குறியீடுகள் குறித்த தகவல்களை ஓர் இறுதி முடிவாக அல்லாமல், விரிவான ஆய்வுக்கான தொடக்கத் தரவாகவே பார்க்க வேண்டும்.

ஆய்வுக் குழு முழுமையான தரவுகளை வெளியிட்டு, அவை சர்வதேச அறிவியல் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட *(peer review)* பின்பே இந்த மரபணுத் தொடர்புகளின் வரலாற்று முக்கியத்துவம் இன்னும் தெளிவாகப் புரியும். ஆனால் ஒரு விஷயம் மட்டும் இப்போதே தெளிவாகிறது.

கீழடி, கொந்தகை, ஆதிச்சநல்லூர், சிவகளை போன்ற இடங்களில் கிடைக்கும் சான்றுகள் இனி மண்ணுக்குள் கிடைத்த பொருட்களின் வரலாறாக மட்டும் இருக்கப்போவதில்லை. அந்த மண்ணில் வாழ்ந்த மனிதர்களின் *DNA*, உணவு, வேளாண்மை, தொழில் மற்றும் வாழ்வியல் ஆகியவற்றையும் அறிவியல் முறையில் வாசிப்பதற்கான புதிய வாய்ப்பு உருவாகியுள்ளது.

சங்ககாலத் தமிழகத்தின் வரலாற்றை இனி இலக்கியம் மட்டும் சொல்லப்போவதில்லை.

தொல்லியல் சொல்லும்.

வேதியியல் சொல்லும்.

உயிரியல் சொல்லும்.

அவற்றுடன், பண்டைய *DNA*-வும் சொல்லத் தொடங்கியுள்ளது.

இந்த ஆய்வுகளின் முழுமையான முடிவுகள் வெளியாகும் போது, பண்டைய தமிழக மக்களின் மரபணு வரலாறு குறித்து இன்னும் தெளிவான அறிவியல் படம் கிடைக்கக்கூடும்.

செண்பகா மாறிவிட்டாள்

கவிஞர் இரம்யா நடராஜன்

செண்பகாவின் நடவடிக்கைகளை கவனித்துக் கொண்டுதான் வந்தான் அமுதன். அம்மாவிடம் கேட்ட போது கூட "பெண் குழந்தைங்க பருவம் வந்துட்டா அப்டி தான் ப்பா" என்று கூறினாள். அது அவன் மனதுக்கு சமாதானம் அளிப்பதாக இல்லை. எப்போதும் தன்னையே சுற்றி வரும் அவன் குட்டித் தங்கை செண்பகா இப்போதெல்லாம் முகம் பார்த்து கூட பேசுவதில்லை.

அன்று ஊர் திருவிழாவிற்குச் செல்லக் கிளம்பிக் கொண்டிருந்தார்கள். பேருந்து பயணம் என்பது அத்தனை விரும்புபவள் தான் செண்பகா. எப்போதும் சாளர இருக்கை தனக்குத் தான் வேண்டுமென்று சண்டைப் போடுவாள். அப்படி கிடைக்காவிட்டால் கடைசி இருக்கையோ அல்லது ஓட்டுனருக்கு எதிர்புறம் உள்ள இருக்கையோ தான் வேண்டும் என்பாள். நடுவில் இருக்கை கிடைத்தாலும் நின்று கொண்டே தான் வருவாள்.

இன்று பேருந்தில் ஏறியவுடன் அவளுக்காக சாளர இருக்கையை விட்டுக்கொடுத்தான் அமுதன். அவள் வேண்டாம் என்று மறுத்துவிட்டு பேருந்தின் நடுவில் தாவணியை நன்றாகப் போர்த்தியபடி அம்மாவை இறுக்கி நெருக்கி அமர்ந்துகொண்டாள். வேடிக்கை பார்க்கவும் இல்லை. பாட்டை கேட்டு கூடவே பாடவும் இல்லை. கண்களை மூடிக்கொண்டாள். அது உறக்கம் இல்லை என்பது நன்றாகத் தெரிந்தது. அவளுக்கு ஊர்த் திருவிழா வர மனம் இல்லை என்பதை அவள் முகம் காட்டியது.

வெளியூரில் கல்லூரியில் சேர்ந்திருந்தான் அமுதன். எப்போதாவது விடுமுறையில் தான் வருவான். போன முறை வந்து போன பிறகு தான் செண்பகா தாவணிப் போட்டாள். ஆசை ஆசையாக அவளைக் காண வந்தவனுக்கு பேரதிர்ச்சி காத்திருந்தது. எப்போதும் அணைத்துக் கொள்ளும் அவள் யாரோ அன்னியனைப் பார்ப்பது போல பார்த்துக் கொண்டு நின்றாள். அவனுடன் சரிக்கு சரி வாயாடும் அவள் அவனைக் கண்ணுக்கு கண் பார்த்து பேசவும் தயக்கம் காட்டினாள். துள்ளி

ஓடித் திரிந்தவள் இப்படி கூட்டுக்குள் அடைபட காரணம் என்னவாக இருக்கும் என்று யோசித்தான் அமுதன்.

ஊர்த் திருவிழா வெகு சிறப்பாக நடந்துக் கொண்டிருந்தது. கூட்டமும் பாட்டும் கடைகளும் அரட்டைகளும் என களை கட்டியது. தோழிகளோடு செண்பகா காலையில் வெளியே சென்றால் இரவு தேடிப் பிடித்து தான் கூட்டி வரவேண்டும். கூட்டமோ சத்தமோ எதுவுமே ஒரு பொருட்டாக இருந்ததில்லை. இந்த முறை அவள் வீட்டிற்குள்ளேயே இருந்தாள். வீதியில் சாமி வரும்போது வெளியே வந்து பார்த்துவிட்டு மற்ற நேரங்களில் வீட்டினுள்ளேயே இருந்தாள். அவளது தோழிகள் வந்து அழைத்த போதும் ஏதோ ஒன்று சொல்லி போக மறுத்தாள்.

இவளின் போக்குகளைக் கவனித்துக் கொண்டே வந்தவன் அவளிடம் பேசிவிட வேண்டும் என்று தீர்மானித்தான்.

"செண்பாகுட்டி ஏன் மா ஒரு மாதிரியாவே இருக்க. வெளிய போக மாட்டேங்கற. கலகலன்னு இருக்க மாட்டேங்கற.. என்னாச்சு உனக்கு. உடம்பு எதும் சரியில்லையா" என்று அவள் நெற்றியில் கை வைத்துப் பார்த்தான். உடனே அவன் கையை தட்டிவிட்டவள், "தொடாத என்னை" என்று கத்தினாள். கண்கள் கலங்கி இருந்தன. சட்டென சமாளித்துக் கொண்டு, "ஒன்னுல. எனக்கு கூட்டத்துல

போக விரும்பம் இல்ல. அமைதியா வீட்டுக்குள்ள இருக்க தான் பிடிச்சிருக்கு" என்று சொல்லிவிட்டு சென்றாள். உறைந்து நின்றான் அமுதன்.

அவள் சொன்ன வார்த்தைகள் ஏதேதோ எண்ணங்களை கிளப்பி விட்டது. "தொடாதே" இது புதிது. அவன் கவனித்த வகையில் அப்பாவிடம் கூட தள்ளியே நிற்கிறாள். நல்ல வெக்கையிலும் படுக்கும் போது தலை முதல் கால்வரை இழுத்து போர்த்திக் கொள்கிறாள். அமுதனுக்கு படபடப்பு அதிகரித்தது. அவளின் மாற்றத்திற்கு காரணத்தை அவன் மனம் பூதக்கண்ணாடி கொண்டு காட்டியது. மிரண்டான். அவளது தோழிகள் எவருடனாவது பேசலாம் என்று தீர்மானித்தான்.

"தெரிலங்கண்ணா.. திடீர்னு தான் இப்படி ஆகிட்டா. தாவணிக்கு அப்றம் தான் ண்ணா பள்ளிகூடத்துல கூட அப்படி தான் உம்முனு இருக்கா. படிக்கறா நல்லா. ஆனா மத்தபடி விளையாடறது கேலி கிண்டல் எதுவும் இல்ல. என்னாச்சுன்னு நாங்களும் கேட்டுப் பாத்துட்டோம். ஒன்னும் சொல்ல மாட்டேங்கறா" என்றாள் அவள் தோழி. செண்பகா மனதளவில் எதனாலோ பாதிக்கப் பட்டிருக்கிறாள் என்பதை உணர்ந்தான். அதைச் சரி செய்ய வேண்டும் என்று தீர்மானித்தான். வழிகள் தெரியாமல் தான் தவித்தான்.

அன்று அமுதனின் வற்புறுத்தலில் சந்தைக்குச் சென்றாள் செண்பகா. திரும்பி வரும்போது ஓட்டமும் நடையுமாக அழுத படி வீட்டினுள் வந்தாள். அவளின் கலக்கத்தைக் கண்ட அமுதன் அவளைச் சமாதானப்படுத்த எண்ணி அவள் அருகில் சென்று அமர்ந்தான். முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"என்னாச்சு மா.. ஏன் டா அழற"

"ஒன்னுல நீ போ"

"சொல்லு செண்பா குட்டி.... எதுனாலும் நான் பாத்துக்கறேன்" அவனை தலைத்தூக்கி ஆழமாக ஒரு முறை பார்த்தாள். வெறுப்புடன் ஒரு சிரிப்பை உதிர்த்தாள்.

"என்ன செண்பா... எதுக்கு அந்த பார்வை அந்த சிரிப்பு. எதுனாலும் சொல்லு டி. மனசுக்குள்ள பூட்டி வச்சா பைத்தியம் தான் பிடிக்கும். உன் பிரச்சனை தான் என்ன..சொல்லு" என்று சற்று உரத்தக் குரலில் கேட்டான்.

"சொன்னா தீர்த்துவச்சுடுவியா... நீயும் ஆண்பிள்ளை தான.. போடா போ" என்று அவனைத் தள்ளிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டாள்.

அவளின் படுக்கியில் கிடந்து அழுது கொண்டிருந்தாள்.

பேருந்தில் இடமே இல்லை. எப்படியும் ஊருக்கு போய் ஆக வேண்டும். கவுன் போட்டுக்கொண்டிருந்த குட்டி செண்பகா அப்பா கையை பிடித்துக் கொண்டு நின்றிருந்தாள். பேருந்தின் ஆட்டத்தில் பிடிமானம் இல்லாமல் இருந்தவளைப் பார்த்த அப்பா அவளைக் கடைசி இருக்கையின் நடுவில் இருந்தவர் மடியில் அனுமதி கேட்டு அமர வைத்தார். சிறிது தூரம் சென்றதும் செண்பகாவிற்கு அந்த இடத்தில் ஊறல் எடுத்தது. நெளிந்தாள். அப்பாவை பிடித்து இழுத்தாள். நீ சும்மா உட்காரு என்று அதட்டினார். அமைதியாக அமர்ந்து கொண்டாள். தன் கைகளால் அப்பாவின் சட்டைப் பிடித்துக் கொண்டாள். ஊர் வந்து சேர்வதற்குள் அந்த இடத்தில் எரிச்சல் அதிகமானது. அந்த எரிச்சல் இப்போது வரை மனதில் இருக்கிறது.

இன்று பேருந்தில் கூட்டம் அதிகம் இல்லை. சாளர இருக்கைக் கிடைத்தது. சாளரத்தின் எதிர் காற்றில் முகம் கொடுத்துக் கொண்டு வந்தாள். பாவாடை சட்டையில் ஒற்றை பின்னலில் பூச்சரம் காற்றில் அசைய பேருந்து பாட்டுடன் பாடிக்கொண்டு வந்தாள். திடீரென அவள் முதுகில் ஏதோ ஊறியது போல இருந்தது. பூச்சரம் என்று தான் முதலில் நினைத்தாள். இப்போது அந்த ஊறல்

இருக்கைக்கும் சாளரத்திற்கும் இடையில் இருந்த அந்த இடைவெளியில் நுழைந்தது. மெல்ல மெல்ல அவளின் இடைக்கு மேல் பரவியது. இதுவரை அங்கு யாராவது தொட்டால் கூச்சமும் அறுவருப்பும் வரும் என்பதை அறியாதிருந்தாள். தெளிய வைக்கப்பட்டாள். சட்டென முன் நகர்ந்து அமர்ந்தாள். கைகளை இறுக கட்டிக்கொண்டாள். திரும்பிப் பார்க்கவும் தைரியம் வரவில்லை. நின்றுகொண்டிருந்த அம்மாவிடம் தானும் நின்று கொள்வதாக சொன்னாள். 'அமைதியா உக்காரு' என்றாள் அம்மா. வியர்த்தது. அப்படியே அந்தப் பயணம் தொடர்ந்தது. சாளர இருக்கை முள் இருக்கை ஆனது.

திருவிழா என்றால் வீடு முழுதும் சொந்தமும் பந்தமும் கூடும் இடமாகத் தான் இருக்கும். ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள் செண்பகா. ஏதோ ஒரு வருடலில் தூக்கம் கலையத் தொடங்கியது. அது பரிச்சயமான தொடுதலாக இல்லை என்பதால் அமைதியாகக் கண்களை மூடிக்கொண்டிருந்தாள். அப்பாவோ அம்மாவோ வரும் வரை அசையாதிருக்க வேண்டும் என்று எண்ணிக்கொண்டாள். தலையில் ஆரம்பித்த அந்த வருடல் கன்னம் தாண்டி கழுத்து தாண்டி இறங்கி நின்றது. அந்த வருடல் அந்த இடத்திலேயே நிலை கொண்டது. செய்வதறியாமல் இருந்தாள் செண்பகா. மனதுக்குள் அம்மா அம்மா என்று கூச்சலிட்டாள்.

அம்மாவும் வந்தாள். வந்தவள், வருடிய கைகளில் அன்பாகக் காப்பி கொடுத்துக் கொண்டிருந்தாள். வருடல் தொடர்ந்தது. பேச்சும் தொடர்ந்தது. சட்டென எழுந்து

அமர்ந்தாள். ''ஏய் பாத்து பாத்து அண்ணா கையில சூடா காப்பி'' என்று பதறினாள் அம்மா. தூரத்து அண்ணனோ கிட்டத்து அண்ணனோ, உறவுகள் உதட்டளவே என்று உணர்ந்தாள்.

''சும்மா மடியில உக்காரு. தாத்தா தான'' என்று வேட்டியை வழித்துவிட்டுக் கொண்டு தன் தொடையில் இழுத்து அமர வைத்துக் கொண்டார் சிறுவயதில் அவளுக்கு பெயர் வைத்தவர். ''இந்தக் கம்மல் நல்லாருக்கு.. இந்த வளைவி புதுசா.. இந்தச் செயின் ரொம்ப எடுப்பா இருக்கு.. அதென்ன டாலர்..'' என்று கைகள் மேய்ந்த போது உள்ளுக்குள் அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது. இடுப்பை வளைத்த கைகளில் தடவல் தொடர்ந்தது. ஏதோ ஒரு உள்ளுணர்வில் படாரென்று எழுந்து ஓடினாள் செண்பகா. அங்கு நின்றுகொண்டிருந்த அமுதனின் நண்பன் மீது மோதி நின்றாள். அவனைக் கண்டதும் அமுதனைக் கண்டது போல அழத் தொடங்கினாள். அவளை அணைத்து ஆறுதல் சொன்னான். தனது சைக்கிளில் வீட்டிற்கு கொண்டு விடுவதாக சொன்னான். அவளும் அமர்ந்தாள்.

சைக்கிள் வீட்டிற்கு செல்வதற்கு பதிலாக குளத்தங்கரை சென்றது. என்ன என்று யோசிப்பதற்குள் ஆலமர மறைவில் வண்டியை நிறுத்தினான். இறங்கினாள் செண்பகா. அடுத்த நொடி அவளை இறுக அணைத்துக் கொண்டான். திமிறினாள். அவனது பிடியிலிருந்து விடுபட முடியவில்லை. ''அண்ணா அண்ணா வீட்டுக்கு போலாம்'' என்று மெதுவாக அழுதபடி சொன்னாள்.

''போகலாம் இரு. அங்க நடந்தது யார் கிட்டயும் சொல்லக்கூடாதுல..அப்ப நீயும் கட்டிக்கோ.. சும்மா கொஞ்ச நேரம்..ம்ம்ம்..இல்லனா...'' அழுதுகொண்டே அவன் சொன்னதை செய்தாள். அவன் அணைப்பில் இருந்த சூடும் அவள் மேல் படும் அவனுடலும் அறுவருப்பைத் தந்தது. வாந்தி வந்துவிட்டால் பரவாயில்லை போல இருந்தது. சிறிது நேரம் கழித்து அவனுக்கு வியர்த்தது. அவளை அணைத்த கைகளை விடுவித்தான். அவன் சைக்கிள் எடுக்கும்வரை கூட நிற்காமல் வேகமாக ஓடினாள் செண்பகா. வயது கூட யாருமே அன்னியர் தான் என்று மனதில் பதியும் வரை ஓடினாள்.

அன்று மனதின் எழும் அச்சங்களையும் குழப்பங்களையும் அமுதனிடம் பேச வேண்டும் என்று தான் அவனைத்தேடி கிணற்றடிக்கு வந்தாள்.

"டேய் எங்கிருந்து டா கொண்டு வந்த.. அவளுக்கு தெரிஞ்சா அவ்ளோ தான். எங்க குடு எனக்கும் குடு டா" என்று அமுதனும் அவன் நண்பர்களும் அந்த கிணற்றடியில் பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் இருப்பது அவள் காதுகளில் நன்றாக விழுந்தது. யாருடையதோ உள்ளாடையும் உட்பொருளும் அங்கு பேச்சுப் பொருள் ஆனது. இந்த கேலி பேச்சுகளையும் அது தொடர்ந்த சில உள் பேச்சுகளையும் கேட்டதும் அங்கிருந்தும் ஓடினாள். விலகி நிற்பதும் ஒடுங்கிப் போவதுமே தனக்கான இடம் என்று தீர்மானத்துடன் அமைதியானாள்.

வேதனையும் அறுவருப்பும் பக்கம் பக்கமாக தின்றுக்கொண்டிருந்தது. அப்படியே தான் ஒரு ஆணாகிவிடக் கூடாதா என்றிருந்தது. சமயத்தில் திருநம்பியாக மாறிவிடலாமா என்று கூட தோன்றியது. அம்மாவின் சேலையைக் கொண்டு தன் மார்பை அழுத்தி கட்டிக்கொண்டாள். 'இப்படியே கட்டியிருந்தா வளராம போயிடும் நல்லது' என்று எண்ணிக்கொண்டாள்.

குளியலறையில் பல்லி கரப்பான் தன்னையே பார்ப்பதாக நினைத்துக் கொண்டாள். உடை மாற்றும் போதும் சுவரில் கண்கள் முளைப்பது போல பீதி வந்தது. தன் வீட்டிலேயே கதவின் சாவி போடும் ஓட்டையை துணியால் மூடினாள். கோடையோ வாடையோ முழுதும் போர்த்திக் கொண்டு தான் படுத்தாள். உள்ள புழுங்கலுக்கு உடல் புழுங்கல் பெரிதாக தெரியவில்லை.

கூட்டத்தில் செல்லும்போது ஆயிரம் கைகள் எங்கிருந்தோ முளைத்து வந்து தடவுவதாக மிரண்டாள். ஏற இறங்க பார்க்கும் கண்கள் பறந்து வந்து அவளை தழுவுவதாக தவித்தாள். அலங்காரங்களைத் தவிர்த்தாள். காற்றின் தொடுதலிலும் சில நேரங்களில் திக்கென்று மிரண்டாள். இத்தனை அழுத்தத்தில் ஒரு வருடம் முன்னதாகவே பூப்படைந்தாள்.

படுக்கையில் அழுதழுது உறங்கிக் கொண்டிருந்த செண்பகாவைக் கண்டான் அமுதன். தன் உயிரின் துடிப்பென இருக்கும் அவள் உள்ளுக்குள் குமுறுவதை எண்ணிக் கலங்கினான். அவளையே பார்த்துக்கொண்டிருந்தான். அவன் தவறு என்ன என்று அவனுக்குப் புரியவில்லை. ஆனாலும் அவள் கால்களை மெல்ல வருடினான். அவன் கண்ணிலிருந்து ஒரு துளிக் கண்ணீர் அவள் பாதங்களை தொட்டது.

யாரோ ஒருத்தி!

கவிஞர் வித்யா மனோகர்

இங்கு தான்
இந்த இருளில்தான்
நான் என்னை
விதைத்தேன்

இருளில் ஆழ்ந்து
இருளைப் பருகிக்
காத்திருந்த
அப்பொழுதில்தான்
மௌனத்தின்
அடைமழை பெய்தது

என்னுள்
துளிர்த்தன
சொற்கள்...
பத்து
நூறு
ஆயிரம்...

மௌனத்தில் துளிர்த்த
அச்சொற்களுக்கு
நான் கொஞ்சம்
கருணை ஊட்டினேன்...
என்னைச்
சுற்றிலும்
உள்ளொளியின்
பேரொளி!

மனங்கொத்திப்
பறவையொன்று
சொல் கொத்திப்
போனது
கூட்டுக்குள் தாலாட்டு!

போகிற போக்கில்
சொற்களை
அள்ளிச் சென்றது
காற்று
மூங்கில் காட்டில்
இசை Sவெள்ளம்!

ஈரச் சொற்களை
நேசிக்கும்
யாரோ ஒருத்தி
வந்து நின்றாள்
கைவசம் இருந்த
சொற்களையெல்லாம்
கையளித்தேன்

பிறகு
மௌனமாக
மீண்டும் என்னை
விதைத்தேன்
அதே இருளில்...

அந்த
யாரோ ஒருத்திக்கு
என் சாயல் என்பது
இப்போது ஏன்
என் ஞாபகத்தில்
வருகிறது!?

அறிவதனை அறிந்து வாழ்க!

முனைவர் இல. ஜெயந்தி, சென்னை.

அறிவு என்பது பொருள்களை உணரும் தன்மை, புத்தி, அறியவேண்டுவன முதலான பல பொருள்களில் வழங்கி வந்துள்ளது.

சடப் பொருட்களிலும், அனைத்து தோற்றப் பொருட்களிலும், உயிர்களிடத்தும் உள்ளார்ந்த இயக்கமாக இயங்கிக் கொண்டிருக்கும் அறிவையே தெய்வமாக அறிந்தனர் முன்னோர்.

'தனக்கு வெளியே பல தெய்வங்கள் இருப்பதாக நினைத்து வீணாகத் தேடும் முயற்சியில் ஈடுபட்டிருந்த மனிதன், உண்மையை அறிந்தவுடன் தானே அந்த எல்லையற்ற பரம்பொருள், என்பதை உணர்கிறான்' என்பார் சுவாமி விவேகானந்தர்.

தூய அறிவு வடிவாகிய இறைவனுடைய திருவடிகளைத் தொழாமல் இருப்பாரானால், அவர் கற்ற கல்வியினால் ஆகிய பயன் என்ன?

'கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்!' (திரு.2)

என்றே வினவுகிறார் திருவள்ளுவர்

'பெரிய தயவுடைய அறிவே பூரண இன்பமாம். அது ஒப்பற்ற தயவுடைய பேரறிவே ஆகும்.' என்பார் வள்ளலார்.

'அறிவான தெய்வமே தேசோமயானந்தமே'

என்றுரைக்கிறார் தாயுமானார்.

'சுத்த அறிவே சிவமென்று கூறுஞ்
சுருதிகள் கேளீரோ!'

என்பார் பாரதியார்.

ஓரறிவு முதல் ஆறறிவு வரை:

இவ்வுலகத்து உயிர்களை ஓரறிவு முதல் ஆறறிவு வரை வகைப்படுத்துகிறது தொல்காப்பியம்

'ஒன்றறி வதுவே உற்றறி வதுவே – (தொடு உணர்வு)
இரண்டறி வதுவே அதனொடு நாவே – (சுவை உணர்வு)
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே – (வாசனை உணர்வு)
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே - (பார்வை உணர்வு)
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே – (செவி உணர்வு)
ஆறறி வதுவே அவற்றொடு மனனே – (பகுத்தறியும் அறிவு)
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே' (தொல் - மரபு)

என்று தொடு உணர்வு தொடங்கி உயிரினங்களின் தன்மாற்ற வளர்ச்சியை தொல்காப்பியம் குறிக்கின்றது.

பகுத்தறியும் ஆராய்ச்சி அறிவான மனதைக் கொண்டு தன்னை யார்? என அறியும் அறிவே உயர்நிலை அறிவாகும். 'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' பிறந்த காலையும், உடலும் மனமும் பக்குவப்பட்டு உயர்நிலை அறிவை அடைவது, மிகவும் அரிது என்பார் ஔவையார்.

'மனிதனின் ஆறாவது நிலையான சிந்தனை ஆற்றல், இயற்கையின் முழுமையை உணர்ந்து கொள்ளும் பேராற்றலாக, தன் மூலமும் முடிவும் அறிந்து, தான் யார்? என்று தன்னிலை விளக்கமடையும் சிறப்பாற்றலாக உயர்வு பெறுகிறது' என்கிறார் வேதாத்திரி மகரிசி.

அறிவின் வளர்ச்சி நிலைகள்:

அறிவுத் திறனை ஐவகையாகப் பிரிப்பர்.

1. *இயற்கை அறிவு*
2. *நுண்மாண் நுழை புலனறிவு*
3. *உள்ளுணர் அறிவு*
4. *தேர்ந்தறிவு*
5. *மெய்யறிவு என்பனவாகும்.*

1. இயற்கை அறிவு (Instinct Knowledge)

இயற்கை அமைப்பின் வளமான இருப்புகளுக்கும், சூழ்நிலைகளுக்கும் ஏற்ப தனது தேவைகளை முறைபடுத்திக் கொள்ளும் சிறப்பாற்றலே இயற்கை அறிவாகும். சிலவகை பூச்சி இனங்கள், பறவை, விலங்குகள் நாம் வியக்கும் வண்ணம் அறிவை வெளிப்படுத்துகின்றமை காணலாம். தூக்கணாங் குருவியின் கூடு, குளவிகள் கட்டுகின்ற அரக்குக் கூடு, கரையானின் புற்று, தேனீக்களின் கூடு, சிலந்தியின் வலை இவை தனிச்சிறப்புடன் விளங்குவன.

‘வான் குருவியின் கூடு வல்லரக்குத் தொல் கரையான
தேன் சிலம்பி யாவர்க்கும் செய்யரிதால் - யாம் பெரிதும்
வல்லோமே என்று வலிமை சொல வேண்டாங்கான்
எல்லோர்க்கும் ஒவ்வொன்று எளிது’
என்றுரைப்பார் ஔவையார்

2. நுண்மான் நுழை புலனறிவு (Perspicacity)

நுட்பமாக ஆராய்ந்து அறியும் அறிவு. விளைவைக் கணித்த விழிப்புடன் ஊடுருவி கூர்ந்துணரும் அறிவாற்றலாகும். முக்காலமும் உணர்ந்து செயல்படும் அறிவாகும். நுட்பமானதாய், மாட்சியுடையதாய், ஆராயவல்லதான அறிவு இல்லாதவனுடைய எழுச்சியான அழகு, மண்ணால் சிறப்பாகப் புனையப்பட்ட பாவை போன்றது.

‘நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை யற்று’ (திரு. 407)

என்பார் திருவள்ளுவர்.

3. உள்ளுணர்வு: (Intution)

விழிப்பும் சிந்தனையும் கூடும் போது வளர்ச்சி பெற்ற நிலையில் அறிவு பெறும் உயர்திறனே உள்ளுணர்வு ஆகும். சிக்கலுக்குத் தீர்வாக, புதிய கண்டு பிடிப்புக்களாகத் தோன்றும். அறிவியல் அறிஞர்கள், சிந்தனையாளர்கள்,

சித்தர் பெருமக்களிடம் சிறப்பாக இயங்குவதாகும்.

4. தேர்ந்தறிவு (Knowledge)

பட்டறிவு, கல்வி, கேள்வி, நூல்கள் வாயிலாக வளர்த்துக் கொள்ளும் அறிவே தேர்ந்தறிவாகும். துறை சார்ந்த அறிவாக வளர்ந்து விளங்கும். சூழ்நிலைக்கேற்ப வேறுபாடுகளையும், சிறப்பினையும் அடையும். கலைஞர்கள், அறிஞர்கள் உயர்வடைய காரணமாகும்.

5. மெய்யறிவு (Wisdom)

அணு முதல் அண்டங்கள் வரையில், மெய்ப்பொருள் முதல் உயிர்கள் வரையில், இயற்கை முதல் எண்ணம் வரையில், ஒன்று கூட்டித் தொகுத்துணரும் பேரறிவே மெய்யறிவாகும். இதில் மற்ற நான்கு வகை அறிவும் இணைந்து செயல்படும். தெளிவு, உறுதி, விழிப்பு, விளங்கிய வழியில் பிறழாது வாழும் பண்பு, அனைத்து உயிர்களிடமும் அன்பு, இவை யாவும் அடக்கமாகக் கொண்டதே மெய்யறிவு ஆகும்.

என அறிவு பெறும் வளர்ச்சியை
எடுத்துரைப்பார் வேதாத்திரி மகரிசி.

அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானார்
அகத்ததுதான் மெய்ப்பொருள் என்றெடுத்துக் காட்டி
அறிவதனை அறிவித்தார் திருவள்ளுவர்
அவ்வறிவை அறிவதற்கு முறைகள் சொன்னார்
அறிஞர் திருமூலர் அவ்வறிவில் ஆழ்ந்து
ஆனந்தக் கவியாத்தார் இராமலிங்கர்
அறிவில் அறிவாய் நிலைத்து அறம் வகுத்தோர்
அதை வாழ்ந்து காட்டினோர் நினைவு கூர்வாம்' (ஞா.க. 7)

தாயுமானவர், திருவள்ளுவர், திருமூலர், வள்ளலார், பாரதியார் மற்றும் சித்தர் பெருமக்கள் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு,

'அஞ்சுவதேன் துணிந்துரைப்போம் அறிவே 'நான்' தெய்வம்'

என்றுரைத்து, காந்த தத்துவமாக விளக்கினார் வேதாத்திரி மகரிசி.

நான் என்பது அறிவு!

எங்கும் நீக்கமற நிறைந்து காந்தநிலையாய் விளங்கும் மெய்ப்பொருளே தெய்வம். அது அறிவாகத் திகழ்வது. அதையே நான் என்கிறோம். உயிரைப் பற்றியும் அறிவைப் பற்றியும் தெரிந்து கொள்வது மனித அறிவின் சிறப்பாகும். அது 'நான் யார்' என்றறியும் ஆராய்ச்சி அறிவாகும்.

'எல்லாம் அறியும் அறிவு தனைவிட்டு
எல்லாம் அறிந்தும் இலாபமங்கு இல்லை
எல்லாம் அறிந்த அறிவினை நானென்னில்
எல்லாம் அறிந்த இறையென லாமே' (திருமந்திரம் - 2596)
என்பார் திருமூலர்.

உயிரினங்களின் இயல்பான ஊக்கமாக, சார்ந்ததன் வண்ணமாகும் மனதின் இயல்பைச் சான்றோர் எடுத்துரைத்தனர்.

'எப்பொருளை, எச்செயலை எக்குணத்தை
எவ்வுயிரை ஒருவர் அடிக்கடி நினைந்தால்
அப்பொருளின் தன்மையாய் நினைப்போர் ஆற்றல்
அறிவினிலும் உடலினிலும் மாற்றங் காணும்
இப்பெருமை இயல்பூக்க நியதியாகும்.' (ஞா.க. 10)
என்பார் வேதாத்திரி மகரிசி.

தொடுஉணர்வு என்ற அறிவுடன் தொடங்கி ஆராய்ச்சி அறிவான பகுத்தறிவாக மனிதனில் விளங்கி, முடிவில் அனைத்தையும் அறிந்து தன்னிலை விளக்கம் பெற்று முழுமையடைதலே, அறிவின் பயணமாகும்.

அவனே தானாக இருப்பது:

அறிவது, அறிபவன், அறியப்படும் பொருள் யாவுமாக உள்ளது இறைநிலை. 'அனைத்தையும் அறிபவனும், உயிர்களுக்கு அறிவிப்பவனும், அறிவாகவும் அறிவிக்கின்றவனாகவும் அறிகின்ற மெய்ப்பொருளாகவும், விரிந்த

உலகமாக இயங்கிக் கொண்டு இருப்பவனும் அவனே' என இறையின் தன்மையினை எடுத்துரைக்கின்றார் காரைக்கால் அம்மையார்.

'அறிவானுந் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே; அறிகின்ற
மெய்ப்பொருளும் தானே; விரி சுடர், பார், ஆகாயம்
அப் பொருளும் தானே அவன்' - அற்புதத் திருவந்தாதி
'அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புளே காட்டி' (இனிப்புச் சுவையாக)

உணர்த்தும் நிலையை விநாயகர் அகவலில், ஔவையார் எடுத்துரைப்பார்.

'அல்லும் பகலும் அறிவில் லயம் ஆவோர்க்குக்
கல்லும் பிளந்திடுமென் கண்ணே றகுமானே'
என்பார் குணங்குடி மஸ்தான்.
'அறிவு அறியாமை கடந்து அறிவானால்
அறிவு அறியாமை அழகிய வாறே'

என அறியாமை நீங்கி அறிவறியும் முறைகளை தந்திரங்களாக எடுத்துரைத்தார் திருமூலர்.

அறிவே தெய்வமென்பதை அறிந்து உரைத்தனர் முன்னோர். சிற்றறிவாக தொடங்கி, பற்றறிவாக விரிந்து, கல்வி, கேள்வி மூலம் கற்றறிவால் தெளிந்து, முற்றறிவாக நிறைவடையும் அறிவின் பயணமே வாழ்க்கையாகும்.

இறையாற்றலே அறிவாக விளங்குவதை உணர்ந்து வாழ்தல் அமைதி நல்கும்.

அறிவதனை அறிந்து வாழ்க!

சர்வதேச மொழிபெயர்ப்பாளர் தினம் - செப்டம்பர் 30

ஜெயஸ்ரீ ஸ்ரீனிவாசன், நூலகர், தில்லித் தமிழ்ச் சங்கம்புது தில்லி.

மொழிகளிலே சிறந்ததுவே
தமிழ்மொழியாம் தாய்மொழியே!
பேசிடவோ நா இனிக்கும் !
தீஞ்சுவையோ மதி மயக்கும்!
அண்டை நாட்டின் வரலாற்றை
அன்றாடம் அகிலத்தார் அறிந்திடவே!
வேற்று மொழி நூல்களுக்கு
தேவையது மொழிபெயர்ப்பு!

வேற்று மொழி இலக்கியத்தை
பயின்ற நம் சான்றோர்கள்
தாய்மொழியில் மொழிபெயர்த்த
நூல்கள் பல உள்ளனவே!

மூலமொழிக் கருத்துக்களை
சொல்லின் பொருள் மாறாது
தாய்மொழியில் எழுதுவதே
ஆக்க பூர்வ மொழிபெயர்ப்பு!

உலகக் கருத்துப் பரிமாற்றம்
அயலக பண்பாட்டு வளர்ச்சி
ஒருமைப்பாடு உறவு பேண
உதவிடுமே மொழிபெயர்ப்பு!

பன்னாட்டு வணிகம், கல்வி,
அறிவியல் தொழில் நுட்பம்,
பாங்காக பலர் அறிந்திடவே
உதவிடுமே மொழிபெயர்ப்பு!

வேற்று மொழி நூல்கள் பல
சிறந்த மொழிபெயர்ப்பு நூலாக
தாய்மொழியில் பொலிவு பொங்க
சான்றோரின் கரம் தவழும்!

பல்துறையில் சாதித்த
வல்லுனரின் வரலாற்றை
மொழி பெயர்த்த காரணத்தால்
எளிதில் பலர் அறிந்திடலாம்.

இந்திய நாடாளு மன்றமதில்
வேற்று மொழி வாதத்தினை
அவையினிலே மொழிபெயர்க்கும்
வல்லுனர் நாட்டினிலே பலருண்டு

அயல் நாட்டார் வரலாறு
அறிந்திடவே அனைவருமே
வேற்று மொழி பயின்றிடலாம்.
உலகதனை அறிந்திடலாம்!

வேற்று மொழி நூல்களையே
தாய்மொழியில் மொழிபெயர்க்கும்
தன்னிகரற்ற சான்றோரே -
பூவுலகில்
நிலைபெறட்டும் நின் புகழே!

ARANYANI

Vijeni

CHAPTER – 14

10-01-1900, MAARGAZHI Matham, SHARVARI Andu
VASANTHALIKA IRACCIYAM
SIVARAMAN PERUNAKARAM
DRAVIDIAN MANILAM



Everyone gathers around the temple, while the preparation for the pooja is being carried out by the assistants. Badhra devotionally decorates Aranyani Amman by tying a green sari around her, after which she smears turmeric in her face and then places kumkum on her forehead. Taking the rose garland from the basket, she puts it over the beautifully decorated statue of Goddess.

Then she carefully removes the knot in her pallu, displaying the royal chain that gleams brightly in between her sari folds. She takes the chain in her hand proudly looking at it before placing it in a plate filled with turmeric. Then she takes a copper Kalash filled with Gomuthra and lays 5 mango leaves across the top of the Kalash; fanning them out, to cover the mouth completely; and then she places a coconut on top of them. She repeats the procedure twice for the other two copper Kalasams.

Later, she takes a big silver thambulam plate and arranges the chain and all the three kalasams in it. She then touches the plate with both the hands and brings it to her eyes; repeating it thrice to get blessings from the holy content. After double-checking the arrangements inside the Garba-griha, she opens the curtain to reveal the yellow-hued glowing face to the awaiting devotees. The minute the curtain is opened, a chorus of worshipping fills the temple,

“Bless us Maa Aranyani”

“Keep us safe Maa”

“Be with us Amma”

Suriya Bhattacharya walks into the Garba-griha, ties the towel in his waist; folds his hands above his head in prayer; bows humbly in front of the idol. He starts the pooja after murmuring under his breath, “Let the Iracciyam flow like the water and rise like the fire with the blessing of our Aranyani Amman”

Baladitya standing next to the priest takes a scroll from the wooden box and starts reading the chants written in it. The manuscript was written by his forefathers, it had the chants and procedures for worshipping the Amman every pournami; which led to the flourishment of Vasantalika. With the unfortunate event of losing their family deity, the pooja could not be continued and Vasantalika fell to its feet.

After the construction of the temple, this was the third pournami pooja that Baladitya performed; according to him, number 3 is very auspicious since, it denotes growth and symbolizes the interconnectedness of the body, mind, and spirit, and is carefully aligned with the divine energy. Thus, he had decided to celebrate every third pournami as a festival with a grand celebration.

Surya Bhattacharya gestures an attendee to bring water from the falls, without stopping his chanting. Once the pot is given, he pours the water all over the deity from head to toe. After this, he takes the royal chain from the turmeric plate and puts it around the deity's neck.

After silently praying for a few seconds, he loudly chants "Maa Aranyani Amman, We fall to your feet; please take care of your children Maa!!!" He keeps singing the sentence again and again as he pours the Gomuthra from the Kalash while all the people exclaim intense devotion. The abhisheka water is channeled through a pipe that is built inside the Garba-griha; it is directed towards a pond from where drinking water is supplied to the people.

As Surya Bhattacharya continues to pour the contents from the Kalash; Baladitya offers fresh flowers to the feet of the deity as he prays wholeheartedly for his people's well being. Suddenly he hears Badhra gasp painfully, his eyes darts out open as he sees Badhra groaning, holding her stomach.

"Badhu!" he exclaims, "What happened Badhu?" he cups her face in his hands.

"Deva, I think it is the ba-by, do som-e-thin-g" she manages to say.

"Pavithra!!" he calls their chief attendant.

"The pooja should be continued, Baladitya. Don't you worry, Aranyani will take care. You continue the pooja" the holy priest, Suriya Bhattacharya orders. Baladitya continues his prayer in spite of the unshed tears in his eyes.

Pavithra orders the assistants "Bring me a towel, hot water, and a blanket" The assistants rush outside the temple. All the women in the temple gather around Badhra enclosing her with the sari that was kept to adorn the deity after the Abhishekam.

"You will be alright Maharani," Pavithra says comforting her as she kneels down next to the highness.

Badhra nods after biting her lip to hold back her yell of pain. The assistant comes back with the necessary items and pavithra gestures the entire male to leave the premises.

Only Baladitya and the priest were performing the deities for the idol. Hours went by and the night started to fall while the cry of pain echoed throughout the temple reaching out to the forest.

Baladitya takes a mud lamp and lights it creating flickering shadows in the temple, he then places it in the silver platter decorated with flowers. As the chanting of mantras is completed, the priest orders Baladitya to perform the Aarthi.

He nods and starts to rotate the platter in front of the idol, silently praying for Badhra's well being; as the holy priest chants, "Bless us, Maa" a shriek of a cry from Badhra is heard, followed by the loud wail of the baby.

All the bells that hang around the temple sway to and fro due to the wind echoing the chimes, celebrating the birth of the girl baby.

Baladitya slowly completes the aarthi, as tears of joy and anticipation rolls down his cheeks. Finishing his prayer by striking the bhasma over his forehead, he rushes towards Badhra with a heavy heart. The smile on his face spreads wide as he looks at his daughter in Pavithra's arms.

The baby's eyes gleam through the moonlight. He carefully takes the baby into his hand and she stops her cries and remains silent. Just silent, looking at him with small bright eyes.

He gently places a kiss on the baby's cheeks as his mustache brushes her delicate skin; she moans "oon....oon..."

"Looks like your daughter likes your mustache" the priest exclaims.

Smiling at the priest, he kneels down next to Badhra "I am nothing, compared to you. I may be a warrior who has won many battles, but this battle with our body is impossible. And you did it with great courage and bravery. I am proud of you and thankful for gifting me a Goddess" he plants a kiss on her forehead and she smiles wiping the tears from Baladitya's eyes and takes her daughter close to her heart.

****

With the arrival of the Iracciyam's yuvarani, Baladitya's ruling became the golden era of Vasantalika. Agriculture boomed, as Aranyani Amman gave water from the blessed land, the people are happy, everyone has a square meal every day, and there are only a few beggars in the streets.

Baladitya had announced the prosperity of the Iracciyam to be celebrated as a festival, accompanied by the naming ceremony of their 6 months old yuvarani.

On the day of the festival, the populaces of Vasantalika are dancing with joy. Celebrations are held in every corner of the Iracciyam. Sweets are distributed, lamps are lit and firecrackers are being burst. Thanksgiving prayers are being offered in the temple by the priest and the older women. People spoke to one another, "Our Yuvarani has come, and she has brought us happiness"

"She will shine so bright, brighter than the sun! She will be the guide and the leader. She shall be the most trustable and faithful person. She will be constant. Like star. She will

be our first great Yuvarani Supakshana" Swamiji announces when the baby is passed from person to person, each holding her, cuddling her, before carefully placing her in the decorated cradle.

She is curled up the way infants are, and holds her right foot with the help of her hand into her mouth and is sucking the big toe of her foot. True to the chant, she shines so brightly in the whole of the Iracciyam.

All the people from the village bless the baby girl, while the baby takes turns in the cradle, filled with excitement.

"I am unable to take my eyes from her" Badhra watches affectionately, as her daughter laughs, kicking her legs up and down in happiness.

"Highness! Highness!" Vishnu comes running inside the chamber gaining all the people's attention towards him.

"What happened Vishnu? Any problem? Are you crying?" Baladitya asks anxiously at him.

"Everything is fine highness. These are happy tears!" he says wiping the tears from his cheeks and then continues, "My happiness is beyond the limit"

"What happened thamaiyan?" Badhra steps forward towards them.

"Is Kathir fine?" Baladitya enquires patting his shoulder.

"Yes, Highness. Our Maruthuvar has found the cure! He will live long! My son will live long my highness" Vishnu sobs in happiness.

"I am so happy, Vishnu! I knew he was a blessed child!" Baladitya is exquisitely happy and hugs Vishnu to console him.

"No your highness, our yuvarani is the blessed child. Her birth has given my son a life!" Vishnu smiles as tears flow down his cheeks.

"Maa, Aranyani Amman has started blessing us, Thamaiyan!! Only goodness will happen with us" Badhra says and people cheer along with her.

"Shall we start the naming ceremony, Baladitya?" the priest asks and Baladitya nods before proceeding towards the cradle.

"Supakshana! Supakshana! Supakshana!" Baladitya recites the name to the baby's ears as she giggles and pulls baladitya's chain with joy.

"She will guide us through all weakness," Baladitya says, affectionately pulling the baby's cheeks.

"With the yuvarani's arrival, we will not have any weakness, your highness," Pavithra says, as baby Supakshana giggles again.

"Yes, Pavithra, she will be our strength" Badhra replies caressing Supakshna's forehead.

"But, amba you said I am your strength" Her eyes move to Ekaash, who is standing with an innocent expression, keenly listening to his mothers' conversation.

Everyone laughs hearing to his innocent question, "Yes, Ekaash kannah you are also my strength" Badhra smiles at him.

"Only I should be your strength amba" he whimpers.

"Ekaash pattu, now that you have a sister, you should start sharing everything with her" Pavithra caresses his hair.

"No! I will never share my parents with that girl!" Ekaash pushes Pavithra's hand away and runs inside his chamber.

"He is still a kid, Pavithra, as he grows up he will understand everything" Baladitya replies carefully placing the baby back to her cradle.

"Yes! He will understand more than you can imagine" Sri Ranganathan Acharyar's inner voice spoke to him while standing next to his double horsed chariot and he lets out a sarcastic laugh.

He is the Iracciyam's astrologer; a prophet and a sincere lord Shiva's devotee. The hefty astrologer's forehead is covered with streaks of bhasma, his long hair pulled up to a bun on top of his head; tons of auspicious beads around his neck and shirtless walks inside the palace.

"Greetings, greetings, Josiyare" Badhra replies folding her hands in front of him.

"May all the good happen for you!" He blesses her by taking the bhasma from his saffron pouch and strikes it on her forehead.

“Please bless our daughter, Josiyare” Baladitya takes Supakshana from the cradle and hands her out towards him.

“Just as you predicted; our Iracciyam has started flourishing after her birth Josiyare,” Badhra says staring at his flowing beards as a smile creeps onto her lips.

He nods before taking Supakshana into his arms; closing his eyes and starts to chant slogans under his breath,

The prophet is standing alone in a room, only the sparing light trickling from a single oil lamp is the source of light in the darkroom. The lamp sits on a slab next to Baladitya’s pictured frame, occasionally flickering according to the wind that blows from the window, the room has nothing, it is empty, and he smells danger.

An eerie calm prevails; it unnerves him. He couldn’t shake the feeling that something wasn’t right. Suddenly the shutter bangs against the frame upstairs. At first, he assumes it to be the wind playing its part; but after a few more unusual sounds, he slowly mounts the steps up to a room door. He looks at the large iron door in front of him; carefully inspecting the embossed sword imagery; he unlocks the door in front of him with a rusty key; it creaks open into blackness. He takes a deep breath, for thirty seconds nothing happens; then suddenly, without warning, he hears the noise of approaching steps. A dark silhouette of a woman is lumbering towards him;

He slowly whispers, “Supakshana?” there is no answer; the shape pauses in its tracks; he again calls out loud, “SUPAKSHANA???”

“MWAHHAHHAHHAHHAHHAHH” A maniacal laughter comes in gusting bursts, startled; his face wrinkles into shallow crevices as he looks further into the blackness.

The laughter abruptly stops and the silence is followed by a loud shriek; “AAAARRRRHHHH” the sound intensifies until his eyes open wide, hands clamps over his ears, and witnesses the silhouette crawling in lightning speed towards him.

”KRREEEESSSHHHHHHH!!!!” the glass flower vase falls down from a slab exploding into million pieces, jolting everyone in the palace. Pavithra rushes to bring the broom to clean the glass pieces before it could hurt anyone.

The prophet slowly opens his eyes and looks at the shattered glass pieces that lie in the floor, “Supakshana!” he calls looking at the baby in his arms,

“ghaa....ghaaa” the baby babbles looking at his fierce eyes.

“I just wish lord Shiva saves you” he murmurs under his breath.

கல்வி மற்றும் சமூக பணியில்
கிறிஸ்தவ பெண்களின் பங்களிப்பு – பகுதி 1

பெண் கல்வியை விதைத்த திருமதி. ஆன் வான் சோமரன் ரேனியஸ்

ரெமினா சுஜித், மொழிபெயர்ப்பாளர் மற்றும் எழுத்தாளர், தென்காசி .

19-ஆம் நூற்றாண்டின் தொடக்கம். திருநெல்வேலி மண்ணில் பெண் பிள்ளைகளைப் படிக்க வைப்பது என்பது ஒரு மாபெரும் சாபமாகக் கருதப்பட்ட காலம் அது. ஒரு பெண் குழந்தைக்குக் கல்வி கற்பிப்பது அவளைக் கெட்டுப்போகச் செய்யும் என்றும், அது சாதிப் பெருமைக்கு இழுக்கு என்றும் அன்றைய சமுதாயம் ஆழமாக நம்பியது. அந்த இருண்ட காலகட்டத்தில், திருநெல்வேலிக்குள் ஒரு புதிய கல்வி ஒளியோடு நுழைந்தவர்தான் திருமதி. ரேனியஸ் (Mrs. Rhenius).

திருநெல்வேலியின் அப்போஸ்தலர் என்று வரலாற்று ஏடுகளில் போற்றப்படும் மாபெரும் மிஷனெரியான Rev. சி.டி.இ. ரேனியஸ் (Rev. C.T.E. Rhenius) *அவர்களின் மனைவியான இவர், தென்னிந்தியப் பெண்களின் தலையெழுத்தையே மாற்றியமைத்த ஒரு மௌனப் புரட்சிக்குச் சொந்தக்காரர். இவருடைய முழுப்பெயர் ஆன் வான் சோமரன்* (Anne Wilhelmina Van Someren). *டச்சுப் பின்னணியைக் கொண்ட இவர், 1816-ஆம் ஆண்டு மார்ச் 7-ஆம் தேதி சென்னையில் ரேனியஸ் ஐயரைத் திருமணம் செய்து கொண்டு, திருநெல்வேலியின் கல்வி மற்றும் சமூகப் பணிகளுக்காகத் தன் வாழ்க்கையை அர்ப்பணித்தார்.*

கல்விப் புரட்சியின் முதல் விதை - மார்ச் 1823

பெண்கள் வீட்டை விட்டு வெளியே வருவதே பாவம் என்று நினைத்த அந்தச் சமுதாயத்தில், 1823-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஒரு மாபெரும் திருப்புமுனை ஏற்பட்டது. திருமதி ரேனியஸ் அவர்கள் பாளையங்கோட்டையில் முப்பத்து ஆறு (36) பெண் பிள்ளைகளை வைத்து ஒரு உறைவிடப் பள்ளிக்கூடத்தை (Boarding School) *ஆரம்பித்தார். உலகத்தின் பார்வையில் அது ஒரு சிறிய பள்ளிக்கூடமாக மட்டுமே தெரிந்தாலும், அதுதான் தென்னிந்தியாவில் உருவாகப் போகும் ஒரு மாபெரும் கல்விச் சாம்ராஜ்ஜியத்தின் அஸ்திபாரம். திருமதி ரேனியஸ் அவர்கள் அன்று விதைத்த அந்தச் சிறிய பள்ளிதான், இன்று பாளையங்கோட்டையில் புகழ்பெற்ற மேரி சார்ஜென்ட்*

பெண்கள் மேல்நிலைப் பள்ளியாக (Mary Sargent Girls' Higher Secondary School) உருவெடுத்துள்ளது.

பாளையங்கோட்டையில் திருமதி. ஆன் வான் சோமரன் ரேனியஸால் திறக்கப்பட்ட பள்ளி, பல இடங்களில் தாக்கத்தை ஏற்ப்படுத்தியது. மெல்ல மெல்ல அந்த கல்வி என்னும் விதை கிராமங்களுக்கும் பரவியது. 1843 ஆம் ஆண்டில் கிருபையின் கிராமம் என்று அழைக்கப்பட்ட கடாட்சபுரம் என்ற ஊரில் திருநெல்வேலி பெண்கள் பயிற்சிப் பள்ளி ஒன்று திறக்கப்பட்டது. இலங்கையில் ஊழியம் செய்த மிஸ் சி சி கிபர்ன் என்ற தேவ மனுசி தமிழ்நாட்டின் முதல் பெண் மிஷனெரியாக வந்து இந்தப் பள்ளியை நிறுவினார்.

விதவைக்கு வழங்கப்பட்ட நிர்வாக அங்கீகாரம்

திருமதி ரேனியஸ் வெறும் கல்வியை மட்டும் புகட்டவில்லை; சமுதாயத்தின் ஆழமான மூடநம்பிக்கைகளையும் உடைத்தெறிந்தார். அன்றைய காலகட்டத்தில் விதவைகள் சமுதாயத்தால் தீட்டு என்று ஒதுக்கப்பட்டு, குப்பையாகப் பார்க்கப்பட்டனர். ஆனால், எந்த விதவையை உலகம் குப்பையாக நினைத்ததோ, ஒரு தமிழ் கிறிஸ்தவ விதவைப் பெண்ணின் கரங்களில்தான் அந்தப் பள்ளிக்கூடத்தை நிர்வகிக்கும் மாபெரும் பொறுப்பைத் திருமதி ரேனியஸ் ஒப்படைத்தார். இது அன்றைய சமூக அமைப்பில் ஒரு மிகப்பெரிய புரட்சியாகும்.

விதவைகளின் நிலைமை அந்த நாட்களில் நெஞ்சைப் பிழியும் அளவுக்குக் கொடூரமாக இருந்தது. கணவன் இறந்துவிட்டால் தலையை மொட்டையடித்து, வெள்ளைச் சேலை உடுத்தி, வீட்டின் இருண்ட மூலைகளில் அவர்கள் தள்ளப்பட்டனர். வறுமையில் வாடிய இந்த இளம் விதவைகள், மாமியார்களின் கொடுமை தாளாமல் தற்கொலை செய்துகொள்ளும் அல்லது விபச்சாரத்திற்குத் தள்ளப்படும் அபாயகரமான நிலையில் இருந்தனர்.

இவர்களுடைய கண்ணீரை மாற்றி உழைப்பைக் கொடுக்க ரேனியஸ் தம்பதியினர் முன்வந்தனர். 1834-ஆம் ஆண்டு ஜூலை 9-ஆம் தேதியன்று, ரேனியஸ் ஐயரும் திருமதி ஆன் வான் சோமரன் ரேனியஸ் அம்மையாரும் இணைந்து உபதேசியார்கள் மற்றும் பள்ளி ஆசிரியர்களின் கைம்பெண்களுக்காக விதவைகள் நிதி என்ற ஒரு மாபெரும் நிதியத்தை உருவாக்கினார்கள். இது நண்பன் சங்கம் என்றும் அழைக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் கீழ் ஏழை விதவைகளுக்குக் கீழ்க்கண்ட கைத்தொழில்கள் கற்றுக் கொடுக்கப்பட்டன:

- லேஸ் தயாரித்தல்
- தையல் வேலை
- எம்பிராய்டரி
- பாசி மணி கோர்த்தல்
- கூடை பின்னுதல்

இந்தக் கைத்தொழில்களைக் கற்றுக் கொண்டதன் மூலம், அந்தப் பெண்கள் சமுதாயத்தில் யாருடைய தயவையும் எதிர்பார்க்காமல் தங்கள் சொந்தக் காலில் நின்றார்கள். 14 குழந்தைகளுக்குத் தாயான திருமதி ரேனியஸ் ஆன் வான் சோமரன் ரேனியஸ், தனது சொந்த குடும்பப் பொறுப்புகளுக்கு மத்தியிலும் இந்த ஆதரவற்ற பெண்களுக்காகத் தொடர்ந்து உழைத்தார். 1838-ஆம் ஆண்டு ரேனியஸ் ஐயர் மரணமடைந்த பின்பும், சோர்வடையாமல் தனது பணியைத் தொடர்ந்த அவர் தனது கணவரின் மறைவிற்குப் பின் 36 ஆண்டுகள் வாழ்ந்து, 1874-ஆம் ஆண்டு பெங்களூரில் இயற்கை எய்தினார்.

நமது சிந்தனைக்கு:

எந்தப் பிரதிபலனையும் எதிர்பார்க்காமல், கணவனும் மனைவியுமாக இணைந்து ஒரு சமுதாயத்தின் விளிம்புநிலை மக்களுக்காக எப்படி உழைக்க வேண்டும் என்பதற்கு ரேனியஸ் தம்பதியினர் மிகச்சிறந்த முன்மாதிரிகள். இன்று திருநெல்வேலி மாவட்டம் கல்வியில் சிறந்து விளங்குவதற்கும், பெண்கள் பல துறைகளில் சாதனைகள் படைப்பதற்கும் இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பே அடித்தளமிட்ட திருமதி ஆன் வான் சோமரன் ரேனியஸ் அம்மையாரின் தொண்டு வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும்.

உம்மு அய்மன் அம்மையார்

எழுத்தாளர் சம்சுல் ஹூதா பானு

உம்மு அய்மன் அவர்களின் இயற்பெயர் ''ப்ரகா பின்த் ஸலபா'' - ஆகும். எத்தியோப்பியாவைச் சேர்ந்தவர். அண்ணல்நபிகள் நாயாகம் முகம்மது அவர்களின் பிறப்பு முதல் இறுதிவரை உடனிருந்து தாயைப்போல் பேணி பாதுகாத்த மிகச் சிறந்த நபித் தோழியாவார். அண்ணல் நபிகளார் இவரை ''என் தாய்க்குப் பின் எனது தாய்'' என்று அன்போடு அழைப்பார்களாம்.

இந்திய ஆன்மீகத்தில் வளர்ப்புத் தாயாக நம் நினைவில் உடனடியாக வருபவர் ''யசோதை''. கண்ணனைப் பொறுத்தவரை அவரைப் பெற்ற தாய் தேவகி. குழந்தை பிறந்த போது அதன் முகம் பார்த்தாளேயன்றி அதன் பின் குழந்தையை வளர்க்கும் பாக்கியத்தை அவளால் சிறிதும் பெற முடியவில்லை.

பிறந்த அன்றே தன்னை வந்து அடைந்த கண்ணனின் விளையாட்டுக்களை எல்லாம் ரசித்து அனுபவிக்கும் பெரும் பேறு பெற்றவள் யசோதைதான். பெற்றவள் பெறாத பேறைப் பெற்றவள். அதனால்தான் 'பிரம்மனும், இந்திரனும் மனதில் பொறாமை கொள்ள உரலில் கட்டி வாய் பொத்தி கண்ணனைக் கெஞ்ச வைத்த யசோதாவைப் பற்றி ''எங்கும் நிறை பரபிரம்மம் அம்மா என்றழைக்க என்னதவம் செய்தனை?'' எனத் தன் பாடலில் வியக்கிறார் ஊத்துக்கோட்டை வேட்கட கவி.

அண்ணல் நபி முகம்மது அவர்களின் தாயார் ஆமீனா அம்மையார் அவர்கள் தம் மகன் முகம்மதை மாமனாரிடம் காட்டி வருவதற்காக யதரீப் நகருக்கு அழைத்துச் சென்றபொழுது தம்முடன் உம்மு அய்மன் அம்மையாரையும் அழைத்துச் செல்கிறார்கள். அழைத்துச் சென்று திரும்புகையில் ''அப்வா'' என்றும் இடத்தில் ஆமீனா அம்மையார் மறைந்துவிடவே (நிச்சயமாக! இறைவனிடமே வந்தோம், மேலும்...அவனிடமே நாம் திரும்புபவர்கள்.) அவர்களை நல்லடக்கம்

செய்துவிட்டு அண்ணல் முகம்மதுவை பத்திரமாக மக்கா நகரம் கொண்டு வந்து அண்ணல் முகம்மதுவின் பாட்டனார் அப்துல் முத்தலிபிடம் ஒப்படைத்தார் உம்மு அய்மன் அம்மையார்.

உம்மு அய்மன் அவர்கள் ஒற்றர் பணியில் மிகச் சிறப்புடன் செயல்படுபவராக இருந்தார்கள். மக்கா நகரில் குரைஷிகளுடன் போர் மிக அதிகமான காலத்தில் பெண்ணாக ஒற்றர் பணி செய்வது அசாதரணமானது. எதிராளி கண்களை மறைத்து நொடியில் தன்னை மறைத்து, அந்தப் பாலைவன மண்ணின் ஈச்சை மரத்தின் முட்கள் குத்துவதைத் தாங்கி ரத்தம் வழிவதை பொருட்படுத்தாமல் அடுத்த இலக்கை நோக்கி நோட்டமிட்டு தப்பிப்பார்களாம். இத்தனை தொழில்நுட்ப வளர்ச்சியடைந்த காலத்தில் ஒற்றர் பணி செய்வது எளிதில்லை என்றாலும் சில வசதிகள் உண்டு.

கொதிக்கும் மணல், சுடும் சூரியன், கள்ளிச் செடிகளின் முட்கள், மண்ணில் மறைந்திருக்கும் மண்ணுளிப் பாம்புகள் கால் பதுங்கும் கொதி மணலில் ஒரு பெண் ஒற்றர் பணி செய்வதை இன்று நினைத்துப் பார்த்தால், உடம்பெல்லாம் நடுங்கத்தான் செய்கிறது. உளவு பார்த்து செய்தி கொண்டு வந்து தருவது எதிரிகள் கண்ணில் படாமல் பெண்ணால் முடிகிறது என்றால் பெண்களின் வீரத்தை அவர்களின் ஆளுமையை மதித்த ஆண்களில் அண்ணல் நபிகள் முகம்மது முதலிடத்தில் இருக்கிறார்.

அண்ணல் முகம்மதுவை இளம் வயதில் வளர்த்ததில் பெரும் பங்கு இவருக்கும் உண்டு. அண்ணல் நபிகளும் இவர்களைத் தன் தாயைப் போலே கருதினார். பிற்காலத்தில் அவர்கள் இவர்களை நோக்கி ‘‘என் தாய்க்குப் பின்னர் நீரே என் தாய்’’ என்று நன்றி உணர்வுடன் கூறினார்கள்.

அண்ணலார் அவர்கள் கதிஜா அம்மையாரைத் திருமணம் செய்தபின் மக்காநகரில் குரைஷிகளின் கொடுமை அதிகமாகவும் அதன் வேதனை தாளாது அபினீஷியா சென்றவர்களில் உம்மு அய்மன் அம்மையாரும் ஒருவராக இருந்தார். அண்ணல் நபிகள் உம்மு அய்மன் அம்மையாரைப் பார்த்து ‘‘நீங்கள் இறையருள் பெற்றவர்! நிச்சயமாய் சொர்க்கத்தில் உங்களுக்கு இடம் உண்டு’’ எனக் கூறினார்கள்.

‘‘சொர்க்கவாசிப் பெண்ணைத்

திருமணம் செய்து கொள்ள
விரும்புகிறவர்கள் உம்மு.
அய்மனைத் திருமணம்
புரிந்து கொள்ளட்டும்''
என்றார்கள்.

அந்தச் சமயம் உம்மு அய்மனின் வயது ஐம்பது. அவரிடம் பொழிவான புற அழகு அமையப் பெறவில்லை. அண்ணலாரின் அறிவிப்பும், உம்மு அய்மனின் அகத்தூய்மையையும் கருத்தில் கொண்டு முன்வந்தவர் இப்னு ஹாரிதா அவர்கள். நான் உம்மு அய்மனை இறைவன் மீது ஆணையிட்டு மணந்து கொள்கிறேன் எனக்கூறி மணந்து கொண்டார்.

அவர்கள் மிக அறமான திருமண வாழ்வியலை வாழ்ந்து ஒரு மகனைப் பெற்றெடுத்தனர். உம்மு அய்மன் அம்மையாரும், இப்னு ஹாரிதாவும் அண்ணல் நபியவர்களுக்கு வலக்கரம், இடக்கரமாக இருந்து பல உதவிகளைச் செய்தனர்.

உஹதுப் போரில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு வீரர்களுக்கு முதலுதவி செய்வது, உணவு சமைப்பது, குடிக்க தண்ணிர் சேமிப்பது என தன்னை வருத்தி உழைத்தார். ஃகைபர், ஹுனைன் யுத்தங்களின் போதும் களம் புகுந்தார். ''முத்ஆ'' - யுத்தத்தில் தன் கணவரையும், மகனையும் உயிர்த் தியாகிகளாக பறி கொடுத்தார். எழுபது வயதை எட்டிய வீரப் பெண்ணாகத்தான் அப்பொழுதும் இருந்தார். புத்தி கூர்மை, திட உறுதி, ஆளுமைத்திறன், அஞ்சாமை - என சிறந்த பெண் உம்மு அய்மன் அம்மையார் அண்ணல் நபிக்கு வளர்ப்புத் தாயாராகவும் இருந்தது மிகச் சிறப்பு வாய்ந்ததாக அமையப் பெற்றதாகிறது.

''எந்தக் குழந்தையும் நல்ல குந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே'' - இறையருள் குழந்தைக்கு இருந்தபோதும் தாயின் வளர்ப்பு - நல்ல தாயின் வளர்ப்பு (வளர்ப்புத் தாயாக இருந்தாலும்) அந்தக் குழந்தையின் பெருமைக்குப் பெருமை சேர்க்கும்.

புதிய வெளியீடுகள்







சந்திரோதயம் பதிப்பகம், மதுரை-18.
போன் 7010997639